# தேசிய விஞ்ஞான மன்றம்

# ஆண்டறிக்கை 2011

47/5 மெய்ட்லான்ட் பிளேஸ் கொழும்பு 07

ஸ்ரீ லங்கா

**தலைவர் செய்தி**

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2011 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்குரிய ஆண்டறிக்கையை முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

2011 ஆம் ஆண்டு வருடத்தில் தேசத்தின் பொருளாதாரமானது (குறிப்பாக அரசினால் நிதியீடு செய்யப்படும் நிறுவனங்களுக்கு) தொடர்ச்சியாக ஒரு சவாலாகவே இருந்தது. எவ்வாறாயினும், அவ்வருட காலப்பகுதியில் முகம் கொடுக்கப்பட்ட பிரச்சினைகளை பொருட்படுத்தாது தேசிய விஞ்ஞான மன்றமானது அதன் செயல்முயற்சியின் தொடர்பில் வெளிப்படையான தெளிவுத்தன்மை மற்றும் தீர்மானங்களை விரைவாக எடுத்தல் ஆகியவற்றினை சாதித்த அதே வேளையில் அதன் இலக்குகளை சாதிப்பதற்கும் உறுதியாக முன்னோக்கி சென்றது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் எதிர்கால சுபிட்சங்களை மேம்படுத்துவதற்கு தேவையான சாதகமான சிந்தனைகளும் நிலைப்பாடுகளும் மற்றும் அவற்றினை வெளியிடச் செய்தலும் முகாமைத்துவ சபையின் அவதானிப்பின் கீழ் தொடரப்பட்டது. தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள், குறிப்பாக உயர் தொழில்நுட்பங்களில் புத்தாக்கங்களை ஊக்குவித்தல் மற்றும் விஞ்ஞான சமூகத்தினருக்கு சேவையாற்றல் என்பன உள்ளார்ந்த அக்கறையுடனும் கோட்பாடுகளை அடிப்படையாக கொண்ட சிந்தனைத் திறத்துடனும் உரிய நியதி அமைவுகளுக்கேற்ப தொடரப்பட்டது.

முகாமைத்துவ சபை, ஆலோசனை சபை, ஆராய்ச்சி குழாம் மற்றும் அதிமுக்கியமாக தேசிய விஞ்ஞான மன்றத்தின் பதவியணியினர் ஆகியோர் மன்றத்தின் செயற்பாடுகளில் மிகு அர்ப்பணிப்புடன் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதனால் தேசிய விஞ்ஞான மன்றமானது இவ்வருட காலப்பகுதியில் அநேகமான விஞ்ஞான கருத்திட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

இதை விட இவ்வருட காலப்பகுதியில் தேசிய விஞ்ஞான மன்றம் அதனது குறிக்கோள்களை சாதிப்பதற்கு எடுத்துக் கொண்ட அதிமுக்கிய தொழில்நுட்ப செயற்பாடுகள் தொடர்பில் நான் விசேடமாக இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதாவது சிலின்டெக்கினால் முன்னெடுக்கப்பட்டதும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆரம்ப முயற்சியாக இருப்பதும் விஞ்ஞானிகள் வர்த்தகர்கள் மற்றும் அரசாங்கம் இவர்களுக்கிடையேயான பலம் வாய்ந்ததொரு உறவு முறையினை ஏற்படுத்துவதுமான நனொ தொழில்நுட்ப செயற்பாடுகளே அது ஆகும்.

2006 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட நனொ தொழில்நுட்ப ஆரம்ப முயற்சியானது 2011 ஆம் ஆண்டில் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டதுடன் SLINTECகினால் கண்டு பிடிக்கப்பட்ட புதிய உற்பத்திகள்/ செயன்முறைகளுக்கான ஏழு ஐக்கிய அமெரிக்க காப்புரிமைகளுக்கு ஏற்கனவே விண்ணப்பித்தும் உள்ளது. இவ் ஆரம்ப முயற்சியின் மூலம் சந்தைக்கு ஆராய்ச்சியினை கொண்டுவருவதில் தனியார் துறையினருடன் அதிகளவில் கூட்டிணைதல் வேண்டும் என்பதுடன், சிறிய நடுத்தர பாரிய அளவிலான நிறுவனங்களின் புத்தாக்கம் தொடர்பில் அரசும் தன் உதவிக்கரம் நீட்டி சாதகமான

பங்களிப்பினை வழங்குதல் வேண்டும் என்பதும் தெரியவருகின்றது. இத்தகைய முயற்சிகளின் மூலம் வெற்றிக்கான படிக்கல்லாக விஞ்ஞானிகள், வர்த்தகர்கள், அரசாங்கம் என்பவர்களுக்கிடையே பலம் வாய்நததொரு உறவுமுறை சாதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் அறிவு சார்ந்த ஒரு பொருளாதாரத்தை நீடித்து நிலைத்திருக்கச் செய்வதற்கு இத்தகைய முப்பகுதிகளின் இணைவு மிகவும் அவசியமான ஒரு சாரதியாகும். அத்துடன் இலங்கையில் நனொ தொழில்நுட்ப பிரயோகத்திற்கு அதிகளவில் தேவைப்படும் ஒழுங்கு முறையான சட்டகம் ஒன்றினை தாபிப்பதற்கான அதிகார பூர்வமான நடவடிக்கை தொடங்கப்படுவதற்கு 2011 ஆம் ஆண்டில் IDRC யினால் நிதியீடு செய்யப்பட்ட கருத்திட்டத்தின் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இவ்வருட காலப்பகுதியில் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் முகம் கொடுக்கப்பட்ட சில பிரதான தடைகள் -

- எதிர் நோக்கப்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு பதவியணியினர் இல்லாமை - விசேடமாக விஞ்ஞான பதவியணியினர்.

- தேவையுள்ள போது அதற்குரிய நிதியம் கிடைக்கப் பெறாமை மற்றும் பொது திறைசேரியினால் பாதீடு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு விடுவிக்கப்படும் பொழுது முன்னோடி வருகை தராமையும்.

அதிஷ்டவசமாக தேசிய விஞ்ஞான மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல மேன் முறையீடுகளை தொடந்து தேசிய விஞ்ஞான மன்றத்தின் தொழில் நிலைப்பிரிவு வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2011 ஆம் ஆண்டில் கிடைத்த அனுமதிக்கு அமைவுற நிரப்பீடு செய்யப்படுவதற்கு கோரப்பட்ட சில பிரதான பதவிகள் நீங்கலாக மன்றத்தின் செயற்பாட்டிற்கு சில பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு மன்றத்திற்கு சாத்தியமாயிற்று. கருத்திட்டத்தை விருத்தி செய்வதற்கு அதாவது கருத்திட்ட வடிவமைப்பு மற்றும் தர நிர்ணயம் உள்ளடங்கலாக கருத்திட்டத்துடன் தொடர்புடைய செயன்முறைகள் போன்ற விரிவான பொறுப்புகளை வழங்கும் வகையில் ஒரு நிபுணரை நியமனம் செய்வதற்கு அனுமதி கிடைக்கப் பெறவில்லை. எவ்வாறாயினும் இத்தகைய விரிவான பொறுப்புகளை வழங்கக் கூடிய விதத்தில் நிபுணர் ஒருவரை நியமனம் செய்தலானது அமைப்பாண்மையின் மற்றும் விஞ்ஞான சமூகத்தின் வளர்ச்சிக்கு பெரிதளவில் பெரிதளவில் பங்களிப்பு செய்யும் என்பதினால், இந்த முயற்சி தொடரப்படும்.

தேசிய விஞ்ஞான மன்றமானது வருமானத்தை ஈட்டும் ஒரு அமைப்பாண்மை அல்லவே. அடிப்படை ரீதியாக நோக்குமிடத்து தற்போது அது அரச நிதியங்களின் துணையுடன் சேவை வழங்கும் ஒரு நிறுவனமாகும். அரசு அதனிடமிருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட நிதியத்தினை வேறுபடட தேவைகளின் முன்னுரிமைக்கு ஏற்றால் போல் பகிர்தல் தொடர்பில் முகம் கொடுக்கும் சவால்களை, சிக்கல் நிலையினை தேசிய விஞ்ஞான மன்றம் நன்கு அறியும். இத்தகைய ஒரு சிக்கலான நிலைக்கு ஒரு தற்காலிக வடிகாலே, விஞ்ஞான செயற்பாடுகளுக்கு வெளிநாட்டு நிதியங்களை பெற்றுக் கொள்ளுதலும் தனியார் துறையினரின் பங்களிப்பினை ஊக்குவித்தலும் ஆகும். இத்தகைய நிலையினை நன்கு அறிந்துக் கொண்டதனால், தேசிய விஞ்ஞான மன்றமானது சில கருத்திட்டங்கள் தொடர்பில் வெளிநாட்டு நிதியங்களுக்கு விண்ணப்பித்து இருப்பதுடன் கருத்திட்ட பிரேரணைகள் சிலவும் தேசிய திட்டமிடல்

திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட இந்தக் கருத்திட்டத்தை தேசிய திட்டமிடல் திணைக்களம் அங்கீகரித்த போதிலும் ஆராயச்சி மற்றும் அபிவிருத்திக்கான மனிதவள அமுலாக்கத்திற்கான நிதியம் என்பன பெறப்படல் வேண்டும். தேசிய விஞ்ஞான மன்றத்தின் பெருமுயற்சியின் ஊடாக அடையப் பெற்ற வெளிநாட்டு நிதியத்தினை பெற்றுக் கொள்வதும் ஒரு பாரிய பிரச்சினையாக 2011 ஆம் ஆண்டில் காணப்பட்டது.

தேசிய விஞ்ஞான மன்றத்தில் நாம் எமக்குள்ள பணிகளை கையாளும் போது, இயல்பாகவே எமக்குள் இருக்கும் ஆற்றல் இன்னும் வளர்கின்றது. ஆராய்ச்சியின் சகல துறைகளிலும் அது போன்று விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்துதலிலும் புத்தாக்கத்தையும் புதுப்படைப்பினையும் ஊக்கப்படுத்தவே நாம் செய்ய விழைவது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் சகல மட்டத்தினையும் சார்ந்த பதவியணியினருக்கு எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். 2011 ஆம் ஆண்டு வருடக் காலப்பகுதியில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற்பணியினை சாதிக்கும் பொருட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றம் செய்தல் தொடர்பில் அநேகமான பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட தலைமை நிறைவேற்றுநரான கலாநிதி சரத் அபயவர்தனவிற்கு குறிப்பாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன். மன்றத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றம் செய்தல் தொடர்பில் உள்ள இவரது இந்த ஈடுபாடு நீடித்து நிலைத்திருக்கும் என நான் எதிர்பார்க்கிறேன்.

விஞ்ஞான சமூகத்திற்கும் நாட்டிற்கும் சேவையாற்றுதல் வேண்டும் என்ற மன்றத்தின் நோக்கினை சாதிப்பதற்கு தமது முழு ஆதரவையும் தலைமைத்துவத்தையும் வழங்கி அர்ப்பணிப்புடன் உறுதுணையாக இருக்கும் முகாமைத்துவ சபையினர், ஆலோசனைச் சபையினர் மற்றும் ஆராய்ச்சி குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர்,
பேராசி.சிறிமலி பர்ணாந்து.

**பணிப்பாளர் அறிக்கை**

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2011/12/31 இல் முடிவுற்ற நிதி வருடத்திற்கான செயலாற்றுகையை இந்த மீளாய்வு அறிக்கை முன்வைக்கின்றது.

**நிதியியல் பொது மதிப்பீடு**

உரிய நேரத்தில் அரசிடமிருந்து நிதியை பெறுவதில் நிச்சமயற்ற தன்மை காணப்படுவதினால் முகாமைத்துவமானது அதனது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தீவிரமான பொருளியல் தீர்வுகளையும் மற்றும் பாதுகாப்பு கொள்கைகளையும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய நிலைக்குட்பட்டது. ஆதலினால், மனிதவளங்கள் உட்பட பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ள ஏனைய வளங்களும் நடப்பு மானியங்களை கண்காணித்தல் பொருட்டு வழிப்படுத்தப்பட்டது. இவ்வருடத்தில் ஆராயச்சி செயற்பாடுகள் தொடர்பிலான முழுமொத்த பெறுமதி கிட்டத்தட்ட ரூபா 209 மில்லியன் ஆகும்.

**குறிக்கோள்களை சாதித்தல்**

நடைமுறையில் நிதி நிச்சயமற்ற தன்மை காணப்பட்ட போதிலும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் குறிக்கோள்களை பூரணப்படுத்தும் நோக்குடன், சேர்த்துக் கொள்ளப்பட்ட திறமுறைகளாவன ஊக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டன.

எமது பல நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மத்தியில் இயற்கை மற்றும் பிரயோக விஞ்ஞானங்களின் ஆராய்ச்சிக்கு துணை செய்தல், தொழிநுட்பவியல் முன்னேற்றங்களை சாதித்தல், வினைமுயலுமை மற்றும் தொடக்கநிலை வியாபாரங்களை மேம்படுத்தல், பரிமாற்ற ஆராய்ச்சிகளின் வளர்ச்சிக்கு துணை செய்தல், விஞ்ஞான தொடர்பாடல்கள் மற்றும் விஞ்ஞான தரவுத்தளத்தை பேணல் என்பன சாதிக்கப்பட்டன.

**ஆராய்ச்சிகளுக்கு துணை செய்தல்**

விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கான நிதி, பௌதிக, மனித வளங்களுக்கு உதவி செய்யும் நோக்கினை கொண்ட போட்டிக்குரிய ஆராய்ச்சி மானிய திட்டத்தின் ஊடாக 68 ஆராய்ச்சி மானிய திட்டங்கள் இவ்வருடத்தில் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்ட ஆராய்ச்சி மானிய பணிகளுக்கு துணை செய்யும் வகையில் மொத்தமாக 20 ஆராய்ச்சி உதவியாளர்களுக்கும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கும் நிதியீடு செய்யப்பட்டது. ஆராய்ச்சியாளர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட எட்டு பி.எச்.டி மற்றும் எம்.பில். தொடர்பில் அவர்களுக்கு துணை செய்யப்பட்ட அதே வேளையில் இம்மானியங்களிலிருந்தான 24 ஆராய்ச்சிக் கட்டுரைகள் இவ்வருட காலப் பகுதியில் உள்ளூர் மற்றும் வெளியூர் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. போட்டிக்குரிய ஆராய்ச்சி மானிய திட்டங்களின் கீழ் புதிய செயற்றிட்டங்கள் தொடர்பில் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூ.120 மில்லியனாக இருக்கின்ற அதே வேளையில் வருடகாலப் பகுதியில் போட்டிக்குரிய ஆராய்ச்சி மானிய திட்டங்கள் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை கிட்டத்தட்ட ரூ.170.8 மில்லியன் ஆகும்.

**தேசிய கருப்பொருளுக்குரிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் (NTRP)**

தேசிய அபிவிருத்திக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் தேசிய தேவைப்பாடுகளில் தொடங்கி இறுதி ஆராய்ச்சி உற்பத்திகளில் முடிவுக்கு வரக்கூடிய ஆராய்ச்சியின் ஊடாக, நாட்டின் தேசிய தேவைப்பாடுகளை விளக்கும் வகையில் பணியை நோக்கிய பல்துறை இணை ஆராய்ச்சியினை மேம்படுத்தலே தேசிய கருப்பொருளுக்குரிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இதனடிப்படையில் உணவுப் பாதுகாப்பு, நீர்பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் என்பன முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய துறைகளாக இனங்காணப்பட்டன. ஆராய்ச்சி இடை வெளிகளும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய துறைகளும் இனங்காணப்பட்டதுடன் அதனடிப்படையில் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களும் அமுல்படுத்துகை திறமுறைகளும், 05 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு விருத்தி செய்யப்பட்டன. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக இத்திறமுறைகளாவன உணவுக் காப்பில் நிறைவேற்றம் செய்யப்பட்டது.

**ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணிப்பதற்கான துணை நிகழ்ச்சித் திட்டம் (SUSRED)**

பட்டப்பின் ஆராய்ச்சி பட்டங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு (எம்.பில் மற்றும் பி.எச்.டி) விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத் துறைகளில் ஆராய்ச்சிகளை முன்னெடுக்கும் மாணவர்களை மேற்பார்வை செய்வதில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் மற்றும் எந்திரவியலாளர்களை ஊக்குவிப்பதற்கும் துணை செய்வதற்கும் இனம் காண்பதற்கும் SUSRED ஆரம்பிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 24 விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன் அவற்றுள் இத்திட்டத்திற்கு தகைமையுடையதாய் 09 விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

**தொழில் நுட்பவியல் மற்றும் வினைமுயலுமை அபிவிருத்தி**

தேசிய கருப்பொருளுக்குரிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம், தொழிநுட்ப மானியம் மற்றும் தொடக்கநிலை வியாபார திட்டங்களையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் விசாரிப்பினை நோக்கிய ஆராய்ச்சி எனப்படும் தற்போதைய போக்கினை கேள்வியை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சியாக மாற்றுவதற்கான எமது முயற்சிகளை நாம் தொடர்ந்து செய்து வருகிறோம் என்பதுடன், இந்நோக்கத்தை நிறைவேற்றம் செய்தல் பொருட்டு அதிகளவில் பாதீடு ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் இந்நிகழ்ச்சித் திட்டத்தை இயன்ற அளவில் மேம்படுத்துகை செய்தல் பொருட்டு இந்த முறைமைகளை உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், தொழில் நுட்பவியல் புத்தாக்கத்தின் துரித கதிக்கு உறுதுணை செய்யும் முகமாக, இந்நடவடிக்கைகளை ஒரு நடைமுறை பயன்பாடுள்ள முறையில் நிறைவேற்றம் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் புதிய வியாபார முயற்சிகளாவன பொருளியலில் ஒரு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியனவாகவும் உள்ளன.

தொழில் நுட்ப மானியங்கள் தொடர்பில் பெறப்பட்ட விண்ணப்பங்களாவன பொதுவாகவே மிகக் குறைவானவையாக இருக்கின்ற அதே வேளையில் வருடத்தில் கிடைக்கப்பெற்ற 27 விண்ணப்பங்களில் 07 விண்ணப்பங்களுக்கு மானியம் வழங்கப்பட்டது. இவ் வருடக் காலப்பகுதியில் பூரணப்படுத்தப்பட்ட தொழில் நுட்ப மானியங்களின் விளை பயன்களின் சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

❖ சமிஞ்சை மானியின் வடிவமைப்பும் நிர்மாணமும்

300 - 1300 MHZ (UHI) அகலப்பட்டி வனொலிச் சக்தி/வலுமானியானது - சமிக்கைகளு உள்வாங்கும் மற்றும் சக்தி மதிப்பிடும் தொகுதி, நுண்ணலை கூட்டும்/குறைக்கும் மாற்றி, மற்றும் பாரம் குறைந்த அன்டெனா ஆகிய மூன்று தொகுதிகளை உள்ளடக்கியது - ஒன்றின் முதல் கட்ட மூலவகை மாதிரியின் நிர்மாணம். இக்கருத்திட்டம் பூரணப்படுத்தப்படலின் மூலம் அகலப்பட்டி நுண்ணலைச் சுற்றுகளும் அன்டெனாக்களும் மற்றும் உயர் வேக டிஜிட்டல் சுற்றுகளும் இலங்கையில் விருத்தி செய்யலாம் என்பதனை நிருபிக்கக் கூடியதாக உள்ளது.

❖ உள்நாட்டில் நீர்நிலைகளில் போக்குவரத்திற்காக பயன்படுத்தக் கூடிய சூழல் நட்புடன் கூடிய மோட்டார் படகு ஒன்றின் உற்பத்தி.

நீர்நிலைகளில் கரையைச் சேதப்படுத்தாது 50 பயணிகளை ஏற்றி பயணிக்கக் கூடியதும் சூழல் நட்புடனும் கூடிய இந்த பாதுகாப்பு படகானது வடிவமைக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டது.

**நனொ தொழில் நுட்ப புதுமுயற்சி**

தேசிய விஞ்ஞான மன்றமானது நனொ தொழில் நுட்ப செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள தனிப்பட்டோர், அரச சார்பற்ற அமைப்பாண்மைகள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியோர் உள்ளடங்கலாக வேறுபட்ட குழுவினருடன் கூட்டுறவு முயற்சிகளை பேணி வளர்த்துள்ளது.

கருத்திட்டப் பிரேரணைக்கு அமைவுற உச்ச அளவில் சாதிக்கப்படுவதற்கு இயலும் தன்மை கொண்டனவாக மூன்று நடப்பு நனொ மானியங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மூன்று புதிய மானியங்கள் வழங்கப்பட்டன.

இலங்கையில் நனொ தொழில்நுட்ப பாவனையை மேம்படுத்தும் வகையில் நனொ தொழில்நுட்பம் பற்றிய ஒரு கொள்கை, நனொ தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கு ஒரு ஒழுங்குமுறை சட்டகம் என்பன பயனுறுதியுடன் வரைவு செய்யப்பட்ட அதே வேளையில் நனொ தொழில்நுட்பத்தின் பாவனையை அதிகரிக்க விழிப்புணர்வு கூட்டத் தொடர்களும் நடத்தப்பட்டன.

விஞ்ஞான தொழில்நுட்பத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய துறைகள் மற்றும் தேசிய திட்டமிடல் செயன்முறை என்பனவற்றில் தொழில்நுட்ப பயன்பாட்டின் முக்கியத்துவத்தை விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியல் சமூகம் கொள்கை அமைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய அரச அலுவலர்கள் ஆகியோருக்கு அறியச் செய்வதற்கு ஒரு முயற்சியும் எடுக்கப்பட்டது.

IDRC யினால் நிதியீடு செய்யப்பட்ட ஆளுமை கட்டமைப்பு மற்றும் ஒழுங்கு முறையின் விதிகளுக்கு அமைவுற்றதாய் ஒரு சட்டகம் என்பதை உருவாக்கும் ஒரு ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டமானது இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் கூட்டிணைந்து ஆரம்பிப்பு செய்யப்பட்டதுடன் நிதியின் முதல் தவணைக் கட்டணமானது பங்குடமை நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளின் அடிப்படையில் பகிரப்பட்டதுடன் இது தொடர்பிலான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நனொ தொழில்நுட்ப ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனமும் நனொ தொழில்நுட்ப புது முயற்சியின் ஒரு பங்குடமை நிறுவனமுமாகும். SLINTECகிற்கு துணையாக இருக்கும்

நடவடிக்கையானது இந்த பொது தனியார் பங்குடமை நிறுவன மாதிரியுடன் இணைந்து தொடர்ந்து செய்யப்பட்டதுடன் அச் செயற்பாடு வெற்றியினையும் உறுதிப்படுத்தியது. இதை விட பாடசாலை மாணவர்களுக்கு நனொ தொழில்நுட்பம் பற்றியும் அதன் பிரயோகம் பற்றியும் அறிந்துக் கொள்ளச் செய்யும் பொருட்டு உள்ளக பயிற்சிப் பட்டறைகள் முன்னெடுக்கப்பட்டன.

**அதிபுலமைச் சொத்து விழிப்புணர்ச்சி**

காப்புரிமை கூட்டுத்தாபன உடன்படிக்கை (PCT) - WIPO வழியில் சர்வதேச காப்புரிமை தேடல்களுக்கு துணைமை செய்தல் உள்ளடங்கலாக அதிபுலமைச் சொத்து விழிப்புணர்ச்சி மற்றும் பாதுகாப்பு, பல்கலைக்கழகங்களில் அதிபுலமைச் சொத்து கல்வியினை வழங்கல் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள், காப்புரிமை விண்ணப்பங்களை வரைவு செய்தல் மற்றும் கோப்பிடல் போன்ற இதர விடயங்களுக்கு ஆலோசனை வழங்கல் ஆகியவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

உள்ளூர் காப்புரிமை கோப்பிடல் தொடர்பில் ஒன்பது புத்தாக்குனர்களுக்கு துணைமை செய்யப்பட்டதுடன் அவற்றுள் 03 தனிப்பட்டோரிற்கு காப்புரிமை கூட்டுத்தாபன உடனபடிக்கையின் ஊடாக சர்வதேச காப்புரிமை கோப்பிடலிற்கு துணைமை செய்யப்பட்டது. இவ் வருட காலப்பகுதியில் இவ்விடயம் தொடர்பில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் வழிகாட்டல்களாவன தாபிக்கப்பட்டன.

**தொடர்பாடல் விஞ்ஞானம்**

- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மக்களிடையே பரப்புதலும், குறிப்பாக நாளாந்த வாழ்வின் ஒரு பகுதியாக விஞ்ஞானத்தை சேர்க்கும் அறிவை அடிப்படையாகக் கொண்ட கலாசாரத்தை குறிப்பாக பள்ளிக் கூட மாணவர்களிடையே விசேடமாக பரப்புதல். உற்பத்திகள் மற்றும் சேவைகள் என்பன ஒரு தொகுப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்களின் ஊடாக முன்னெடுக்கப்பட்டது. பள்ளிக்கூட விஞ்ஞான கலை நிகழ்ச்சித் திட்டம் விஞ்ஞான ஆராய்ச்சியினை பள்ளிக்கூட சமூகத்தினரிடையே பரப்புதல். விதுரவ விஞ்ஞான சஞ்சிகை, விதுரவ செய்திமடல், விஞ்ஞான புத்தக தொகுப்புகள் உள்ளடங்கலாக வெளியீடுகள், பிள்ளைகள் மற்றும் பெற்றோர் ஆகியோரை உள்ளடக்கும் விஞ்ஞான நிகழ்ச்சித் திட்டங்கள், பள்ளிகூடங்கள் கைத்தொழிற்துறைகள் மற்றும் விஞ்ஞான ஆராயச்சி நிறுவகங்களிடையே தொடர்பிணைப்புகளை ஏற்படுத்தல், பொது மக்களுக்கான விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நனொ விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டம் என்பன இதில் உள்ளடங்கும். இவ் வருட காலப்பகுதியில் இணைந்த 151 பள்ளிக்கூட விஞ்ஞான சங்கங்களுடன், பள்ளிக்கூட விஞ்ஞான சங்கங்களின் எண்ணிக்கை 623 ஆக உயர்ந்துள்ளது.

- தேசிய விஞ்ஞான மன்றத்தின் வெளியீடுகள் குறிப்பாக கூறினால் தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகை, தற்போது இது மட்டுமே தோமஸ் ரியூடஸ் தரவுத்தளத்தில் பதியப்பட்டுள்ள ஒரே சஞ்சிகை ஆகும். இந்த சஞ்சிகை தொடர்ந்தும் பயனுறுதியுடன் தொடர்புடைய பணயப் பொருளாளரிடையே விஞ்ஞான தொடர்பாடலை வைத்திருக்கின்றது. 2011 ஆம் ஆண்டில் இந்த சஞ்சிகை பணயப் பொருளாளரிடையே ஏற்படுத்திய தாக்கம் 0.134 ஆகும்.

- இலங்கையில் விஞ்ஞான தொழில்நுட்ப சமூகத்தினரிடையே தொடர்ச்சியாக தொடர்பாடலை செய்வதற்கு மாதாந்த மின் செய்தி இதழ் விருத்தி செய்யப்பட்டது.

இச்செய்தி இதழானது காலப் போக்கில் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் தொடர்பில் வலுவான தொடர்பினை கட்டியெழுப்ப துணையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த இதழினை 4000 இற்கும் விஞ்ஞானிகள் அதிகமான பிரதிகள் இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் வாசிக்கிறார்கள்.

- மின் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம்

விஞ்ஞான தொழில் நுட்பத்தைப் பற்றி வேறுபட்ட கோணங்களிலிலான விடயங்களை 12 கட்புல நாடாக்களில் உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டத்தின் தொகுப்பே "மிஹிமண்டல" நிகழ்ச்சித் திட்டமாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமானது அறிவினை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கலாகும். இதனடிப்படையில், இது தொலைக்காட்சியின் தேசிய அலைவரிசைகளில் ஒலி பரப்பு செய்யப்படுகின்றது. இது 2011 ஆம் ஆண்டில் ICTA யினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட E-swabhimani சிறப்பு விருது சான்றிதழையும் புதுடில்லியில் உள்ள டிஜிட்டல் எம்பவர்மன்ட் புவன்டேஷன் ஒப் இந்தியாவினால் வழங்கப்படும் மன்தன் விருதையும் வென்றெடுத்தது .

**சர்வதேச கூட்டிணைவுகள்**

இலங்கை விஞ்ஞானிகளுக்கு அவர்களின் ஆராய்ச்சி தேடல்களை சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்களில் முன்வைப்பதற்கும் மற்றும் வெளிநாடுகளில் உள்ள உயர்தரத்திலான ஆய்வு கூடங்கள் ஆராயச்சி நிலையங்களில் பயிற்சிகளை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகளை வழங்குவதன் ஊடாக விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்க திறமுறையில் தேசிய செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் வெளிநாடுகளில் விசேட பயிற்சி திறனை பெற்றுக் கொள்ளவும் பிரயாண மானியங்களை வழங்கி விஞ்ஞான தொழில்நுட்பத்தில் சர்வதேச தொடர்பிணைப்புகள் தொடரப்பட்டன.

**உள்ளூர் மற்றும் சர்வதேச விஞ்ஞான அறிவினை பெற்றுக் கொள்ளல்**

இலங்கை விஞ்ஞானிகளின் உலகளாவிய முன்னரங்கு பற்றிய சர்வதேச மாநாடு:- வலையமைப்பு மற்றும் அறிவுப் பகிர்தலின் ஊடாக நாட்டின் பின் பிணக்கு பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி எனும் விடயம் தொடர்பில் தாய்நாடு துறந்த விஞ்ஞானிகள், வெளிநாட்டு, உள்நாட்டு விஞ்ஞானிகள், கொள்கை உருவாக்குனர்கள், அறிவினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அரச மற்றும் தனியார் துறை சார்ந்த பங்குதாரர் உள்ளடங்கலாக அவர்களின் 420 பேரின் பங்கு பெறுதலுடன் 2011 டிசம்பர் மாதம் 13 - 15 ஆம் திகதி வரையில் இடம்பெற்றது. உயர் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் கைத்தொழில்துறையை முன்னேற்றவும் பொருளாதார அபிவிருத்திக்காகவும் வலையமைப்பினை கட்டியெழுப்பல் மற்றும் அறிவுப் பகிர்விற்கு துணையாக இருத்தல் ஆகிய செயற்பாடுகளை மேம்படுத்துவற்காக கூறப்பட்ட இச்செயற்பாடு தொடர்ந்து மேற்கொள்ளப்படும். ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதா என கண்காணிப்பதற்கும் மற்றும் முன்னரங்கில் கலந்துரையாடப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் ஊக்கத்துடன் செயற்படுத்தப்படுகின்றதா என கண்காணிக்கப்படுவதற்கும் தேசிய விஞ்ஞான மன்றத்தில் ஒரு உலகளாவிய முன்னரங்கு கழகம் தாபிக்கப்பட்டது.

### விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பக் கொள்கை ஆசிய வலைமைப்பு (STEPAN)

STEPAN இனது அப்போதைய தலைமைத்துவம் என்ற வகையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தை சேர்ந்த 10 நாடுகளின் பங்களிப்புடன் ஒரு சர்வதேச பயிற்சிப்பட்டறையொன்று தேசிய விஞ்ஞானம் மன்றத்தினால் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறும் வகையில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இந்தப் பயிற்சிப் பட்டறையின் குறிக்கோளானது நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் தேசிய புத்தாக்க முறைமையும் அதன் பங்கும், பொது மற்றும் தனியார் பங்களிப்பினை பயன்படுத்தி தேசிய புத்தாக்க முறையினை எவ்வாறு விருத்தி செய்யலாம் மற்றும் புத்தாக்க முறைமை கற்கையில் உள்ளடங்கியுள்ள வேறுபட்ட விடயங்கள் மற்றும் தரவுப் பகுப்பாய்வும் உரை பெயர்ப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் அடிப்படை அறிவினை STEPAN உறுப்புரிமை நாடுகளுக்கு வழங்கலாகும். தேசிய புத்தாக்க முறைமை மேம்படுத்த எடுக்கப்பட்ட இம்முயற்சி தொடரப்படும்.

### கொள்கை உருவாக்குனர்கள் மற்றும் கல்வியலாளர்களுக்கான புள்ளிவிபரவியல்

இவ்வருட காலப்பகுதியில் விஞ்ஞான விடயங்களின் தரவுகளினை சேகரித்தல் உரைபெயர்ப்பு மற்றும் பகுப்பாய்வு செய்தலிற்கு ஒரு மத்திய தெளிவாக்கல் சபையினை தாபித்தல் தேசமெங்கிலுமுள்ள கொள்கை உருவாக்குநர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் ஆகியோரால் கோரப்படும் விடயங்கள் தொடர்பில் மிக முக்கிய தகவல்களை வழங்குதல் மற்றும் நாட்டின் சமூக பொருளதார அபிவிருத்தியானது கருத்தில் கொள்ளப்பட்டு விஞ்ஞானம், தொழில்நுட்பம், புத்தாக்கம் என்பனவற்றுடன் தொடர்புடைய முக்கிய விடயங்களினை சமூகத்திற்கு தெரியச் செய்வதன் மூலம் சமூகத்தினருக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் போன்ற சவால் மிகு இலக்குகளை முகம் கொடுக்கப்பட்ட தடைகளை பொருட்படுத்தாது போதியளவு பதவியணி அற்ற நிலையிலும் கூட சாதிப்பதற்கு மிகுந்த முயற்சி மன்றத்தினால் எடுக்கப்பட்டுள்ளது.

“தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அளவளாய்வு 2010" எனும் தலைப்பின் கீழ் உரிய தகவல்களை வழங்கல் அத்தலைப்பிற்கு ஏற்ற வகையில் விஞ்ஞானம், தொழில் நுட்பம் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துறைகளில் வேறுபட்ட தரவுத் தகவல்களை பேணல் ஆகிய செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டது.

### தேவைப்படும் தகவல்களை பூரண நிறைவு செய்தல் -

தேசிய விஞ்ஞான நூலக வள நிலையமானது இலங்கை விஞ்ஞான தொழில்நுட்ப தகவல் வலையமைப்பு நிலையத்தின் (SLSTINET) குவிவுமுனைப் புள்ளியாக தொடர்ந்தும் செயற்படுகிறது. பாவனையாளர்களின் தேவைக்கேற்ப வேறுபட்ட தகவல் தேவைகளை வழங்கும் வகையில் புதிய தொழில்நுட்பவியல் அபிவிருத்திகளுக்கு இசைவாக பல திறமுறைகள் இவ் வருடகாலப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டு சேர்த்துக் கொள்ளப்பட்டது. புதிய நிகழ்ச்சித் திட்டங்களையும் கூட்டிணை பங்குடமையாளர்களையும் நாம் தொடர்ந்தும் சேர்த்துக் கொள்கின்றோம். நாடெங்கும் "தகவல் முகாமைத்துவம்" என்னும் விடயம் சம்பந்தமாக நிபுணத்துவம் கொண்டவர்களை புதிய கருத்திட்டங்கள் பயன்படுத்தப்படவுள்ளன என்பதுடன் அதற்குள் கீழ்வருவன உள்ளடங்கும்.

- நாட்டிலுள்ள சகல விஞ்ஞான சரிநிகராளர்களும் மின்னியலின் தொடரறா சேவையின் மூலம் பயனடையும் வகையில் இலங்கை விஞ்ஞான சுட்டித் தரவுத் தளத்தை உள்ளூர் பிரசுரிப்புகளின் துணையுடன் முழுப்பாடங்களையும் உள்ளடக்கிய டிஜிட்டல் நூலகமாக்கல் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையத்தினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட e-swabhimani 2011 விருது வழங்கல்

வைபவத்தில் இலங்கை விஞ்ஞான சுட்டித் தரவுத்தளம் விசேட பரிசை வென்றெடுத்தது.

தத்தமது நிறுவனங்களில் பேணப்படும் தனிப்பட்ட நிறுவன ரீதியிலான தேக்கக் களஞ்சியத்தை மின்னியல் ரீதியில் பேணும் நோக்கில் நாட்டிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப நூலகங்களில் இருக்கும் விஞ்ஞான தொழில் நுட்ப புத்தகங்களை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு துணைமை செய்யும் விதத்திலான ஐந்து வருட தேசிய டிஜிட்டல் மயப்படுத்துதல் கருத்திட்டம். இதனைத் தொடர்ந்து நிறுவன ரீதியிலான தேக்க களஞ்சியத்தில் உள்ள விடயங்கள் தொடரறா விதத்தில் தேசிய வலையமைப்பில் இணைந்து தேடல் வசதியின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையின் கீழ் கூட்டிணைக்கப்படும்.

- இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் பருவக் கூட்டத் தொடர்களில் கடந்த 25 வருட காலப்பகுதியில் வாசிக்கப்பட்ட சகல ஆக்கங்களும் (பிரித்தெடுப்புகளுடன்) பதிவு செய்யப்படல்.
- தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தேசிய மின் - தேக்கக் களஞ்சியமானது இணைந்து தேடக் கூடிய வசதியுடன் கூட்டிணைக்கப்பட்டிருப்பதினால் ஏனைய மின் - தேக்க களஞ்சியங்களில் உள்ளடங்கியுள்ள விடயங்களை தேடக் கூடிய வசதி இருப்பதுடன் உள்ளூரில் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகளையும தொடரறா வசதியின் மூலம் நோக்கலாம் என்பதுடன், தேடலின் மூலம் பல இணையதள பக்கங்களுக்கும் போகக் கூடிய வசதியும் கிடைக்கின்றது.

### பயனுறுதி மிகு கருத்திட்ட முகாமைத்துவம்

தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நிதியீடு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் முகாமைத்துவ ரீதியிலான விடயங்களின் தெளிவான நோக்கினை விருத்தி செய்ய வேண்டியதற்கான தேவைப்பாடானது இனங்காணப்படுள்ளது. தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய தொடரறா கணனி மென்பொருள் நிகழ்ச்சித் திட்டத்தை விருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அதனை வெற்றிகரமாக பூரணப்படுத்தப்படுதலினை தொடர்ந்து தேசிய விஞ்ஞான மன்றமானது தனது வேறுபட்ட கருத்திட்டங்களின் முகாமைத்துவ விடயங்கள் தொடர்பில் தகவல்களை களஞ்சியப்படுத்தவும் அவற்றை மீளப்பெறுவதற்குமான ஒரு திட்டமிட்ட முயற்சியொன்றை எடுப்பதற்கு இயலும் தன்மையினை கொண்டதாய் இருப்பதுடன் இதன் மூலம் முகாமைத்துவ மதிப்பீடுகளின் பொது நியதியொன்றை தாபிக்க முடியும்..

### தரமுகாமைத்துவ முறைமை

தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்படும் சேவைகள் அதற்குரிய தரத்தினை சாதித்துள்ளனவா என்பதை நிச்சயம் செய்து கொள்வதற்கு தரமுகாமைத்துவ முறைமை செயற்பாடுகளை மீண்டும் தாபிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. தரமுகாமைத்துவ முறைமையானது பணியாற்றும் சகலருக்கும் ஒரு கட்டமைப்பு ரீதியிலான சூழ்நிலைக்குகந்த விரிவான வழிகாட்டல்களை வழங்கி துணை செய்வதினால் இது நாளாந்த செயற்பாடுகளின் ஊடாக சிறந்த தரமான சேவையை வழங்குவதற்கும் மற்றும் இதன் பொருட்டு சிறந்த திட்டங்கள் மற்றும் திறமுறைகள் என்பன இணைக்கப்படுதலிற்கும் வழிவகுக்கின்றது. சேவைகளின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நன்மையானது முழுமொத்தமாக பெறப்பட வேண்டுமாயின் இந்நடவடிக்கையானது தொடரப்படல் வேண்டும்.

## செயலாற்றுகை முகாமைத்துவ முறைமை

தேசிய விஞ்ஞான மன்றத்திலுள்ள செயலாற்றுகை முகாமைத்துவ முறைமையானது மீண்டும் திருத்தப்பட்டு புதுப்பிக்கவும்பட்டது. நோக்கினை பற்றிய தெளிவுடனும் ஈடுபாட்டுடனும் இலக்கினை நோக்கிய திறமுறைகளாவன உரிய தொடர்பிணைப்புடன் தாபிக்கப்பட்டதுடன் அவற்றின் நிறைவேற்றுகையும் நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது. புதிதாக தாபிக்கப்பட்ட செயலாற்றுகை முறைமையானது தேசிய விஞ்ஞான மன்றத்தின் வியாபாரத் திறமுறைகளின் நிறைவேற்றத்தை சாத்தியப்படச் செய்யும் ஒரு தொடர்ச்சியான அமைப்பாண்மை ரீதியிலான கட்டமைப்பை நோக்கி ஊழியர்களை வழிப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது. அமைப்பாண்மையின் வெற்றியை உறுதிசெய்யும் ஊழியர்களின் செயலாற்றுகையை பின்னடைவதற்கு அனுமதிக்காது ஊழியர்கள் செயற்றிறனானது பயனுறுதியுடன் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இறுதியாக கூறின், பிரதான நிறைவேற்றுனர் என்ற வகையில் எனக்குரித்தான பணிகளை நான் நிறைவேற்றம் செய்தல் தொடர்பில் முகாமைத்தவ சபை என் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நான் விசேடமாக நன்றி கூறவிரும்புகின்றேன். அத்துடன் ஆலோசனை சபை, ஆராய்ச்சி குழாம் மற்றும் வேறுபட்ட ஆலோசனை சபைகளில் கணிசமான வசதியீனம் தமக்கு இருந்த போதிலும் அதனைப் பொருட்ப்படுத்தாது சேவையாற்றிய உயர் தகுதிகளினை கொண்ட பதவிகளில் கடமையாற்றும் விஞ்ஞானிகள், தொழில் நுட்பவியலாளர்கள் ஆகியோர்களுக்கும் என் நன்றியை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் தூர நோக்கினால் அகத்தூண்டப்பட்டு அதன் காரணமாக நிறுவனத்தின் சகல மட்டத்து பதவியணியினரிலும் ஏற்பட்ட கடின உழைப்பும் அர்ப்பணிப்புடன் கூடிய ஈடுபாடும் மக்களின் நலன்புரி மற்றும் தேசத்தின் விரைவான முன்னேற்றத்திற்கும் அனுகூலத்திற்கும் பாதை வகுக்கும் விஞ்ஞான தொழில் நுட்பவியலின் பிரதான இயக்கச் சக்தியாக இருத்தலும் ஆகிய இரண்டுமே நிறுவனத்தின் சக்தியின் பிரதான மூலகமாகும். அனைவருக்கும் எனது நன்றியை தெரிவிக்கும் அதேவேளையில் இவ்வருட காலப்பகுதியில் எம்மால் சாதிக்கப் பட்டவைகளை விட இன்னும் சிறப்பாக எதிர்வரும் காலங்களில் நாம் சாதிப்பதற்கு நிறுவனத்தினர் இணைந்து பணியாற்றி தமது ஒத்துழைப்பினை தொடர்ந்தும் நல்க வேண்டும் என நான் விரும்புகின்றேன். விஞ்ஞான ஆராய்ச்சி அபிவிருத்தியில் இன்னும் சிறப்பானதொரு பங்களிப்பை தேசிய விஞ்ஞான மன்றம் தொடர்ந்தும் வழங்கும் என்பதுடன் இவற்றின் மூலம் எம் தாய் நாடு சாதகமான நன்மைகளைப் பெறும் விதத்தில் அந்த ஆராய்ச்சிகளை மலர செய்யும் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

பணிப்பாளர்
தேசிய விஞ்ஞான மன்றம்.

# உள்ளடக்க அட்டவணை


- நோக்கு, பணித்திட்டம், குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகள் 1
- முகாமைத்துவ சபை 3
- அமைப்பாண்மை கட்டமைப்பு 4
- விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி முக்கியத்துவங்கள் 6

**விஞ்ஞானப் பிரிவுகள்**

1. ஆராய்ச்சி பிரிவு - (RD) 16
2. தொழில்நுட்பவியல் பிரிவு - (TD) 25
3. சர்வதேச தொடர்பிணைப்பு பீரிவு - (ILD) 38
4. விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை பிரிவு - (SPD) 44
5. விஞ்ஞானப் மற்றும் தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சி பிரிவு - (STPRD) 56
6. தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையம் - (NSLRC) 62

**துணைப் பிரிவுகளும் அலகுகளும்**

7. நிர்வாகப் பிரிவு 69
8. நிதிப் பிரிவு 71
9. அச்சிடல் அலகு 71
10. தகவல் தொழில்நுட்ப அலகு 71
11. உள்ளக கணக்காய்வு அலகு 72

**நிதிக்கூற்றுக்கள்**

12. கணக்கியல் அலுவலரின் அவதானிப்புரைகள் 72
13. 2011. டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான வருமான செலவின கணக்கு 75
14. 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை ஆஸ்தி பொறுப்பு அடடவணை 76
15. காசுப்பாய்ச்சல் கூற்று – 2011 78

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை** 92

**கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள்** 103

**இணைப்புக்கள்**

**இணைப்பு 1 அ** ஆராய்ச்சி மானியத் திட்டங்களின் பொழிப்பு – 2011 112

**இணைப்பு 1 ஆ** 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியங்கள் 114

**இணைப்பு 1 இ** 2011 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்பு பற்றிய விபரங்கள் 131

**இணைப்பு 1 ஈ** 2011 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட மானியங்கள் 134

**இணைப்பு 1 உ** தொழில்நுட்ப மானியம் 142

**இணைப்பு 1 ஊ** 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொழில்நுட்ப மானியங்கள் 144

**இணைப்பு 2** தேசிய விஞ்ஞான மன்றத்தின் அமைப்பாண்மை கட்டமைப்பு 145

**இணைப்பு 3** முதல் நிலை பதவியினர் - வருடம் 2011 146

**இணைப்பு 4** 2011 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர் பயிற்சி 151

## நோக்கு, பணித்திட்டம் மற்றும் குறிக்கோள்கள்

தேசிய விஞ்ஞான மன்றம் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் கீழ் ஒரு அரசாங்க நிதி வழங்கலுக்குட்பட்ட ஸ்தாபனமாகும். இயற்கை வளங்கள், சக்தி விஞ்ஞான அதிகாரசபைக்கு (NARESA) அடுத்ததாக 1994 ஆம் ஆண்டின் விஞ்ஞான தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டக் கோவை இலக்கம் 11 இனால் 1998 இல் ஸ்தாபிக்கப்பட்டது. NARESA ஆனாது 1968 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய விஞ்ஞான ஆலோசனை சபையை அடுத்து அமைக்கப்பட்டது.

**எமது நோக்கானது,** மக்களின் நலனுக்காக தேசத்தின் போட்டியான அநுகூலங்களுக்கும் விரைவான முன்னேற்றத்திற்கும் வழி நடத்துகின்ற விஞ்ஞான தொழில்நுட்பவியலிற்கு முதன்மையான உந்து விசையாக இருத்தல்

### எமது பணித்திட்டமாவது,

பொது தனியார், நிறுவகம் கைத்தொழிற்துறை இவற்றிற்கிடையே பங்குடமைகளை கட்டியெழுப்புவதன் மூலம், ஒரு அறிவு சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.

எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக விஞ்ஞான தொழில்நுட்பத்தின் சகல துறைகளிலும் செயற்றிறன் நிர்மாணம், உள்ளக அபிவிருத்தி, தொழில்நுட்ப மாற்றீடு, அறிவினை உருவாக்கலும் பகிர்ந்து கொள்ளலும் ஆகியவற்றிக்கு துணையாக இருத்தல்.

எமது இலக்குகளை பணியாற்ற உகந்த சூழ் நிலையில் சிறந்த பெறுபேறுகளை தரும் வகையில் செயலாற்றுகை செய்கின்ற ஒரு தகமை மிகு வேலை வலுவிற்கு மேலும் ஊக்குவிப்பதன் ஊடாக சாதித்தல்.

### எமது குறிக்கோள்களும் செயற்பாடுகளும்

- பின்வரும் நோக்கத்திற்காக பல்கலைக்கழகங்களினாலும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஸ்தாபனங்களினாலும் விஞ்ஞானிகளினாலும் மேற்கொள்ளப்படும் அடிப்படை மற்றும் பிரயோக விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஊக்கமளித்தல் மற்றும் வசதியளித்து உதவி செய்தல்
    - சமூக விஞ்ஞானத்திலும் விஞ்ஞான கல்வித் திட்டங்களிலும் ஆராய்ச்சி உள்ளடங்கலாக விஞ்ஞான ஆராய்ச்சியினை ஆற்றக்கூடிய சாத்தியத்தினை பலப்படுத்துதல்.
    - இலங்கையின் இயற்கை மூலவளங்களை அபிவிருத்தி செய்தல்
    - இலங்கையின் மக்களின் நலன்களை மேம்படுத்துதல்
    - விஞ்ஞான தொழில்நுட்பத்தில் தனிப்பட்ட ஆளணியினரை பயிற்றுவித்தல்

- வெளிநாடுகளிலும் இலங்கையிலும் உள்ள விஞ்ஞானிகளிடையெ விஞ்ஞான தகவல்களின் பரிமாற்றத்திற்கு உதவுதல்

- விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஸ்தாபனங்களில் விஞ்ஞான கற்கைக்கான அல்லது விஞ்ஞான ஆய்வுக்கான புலமைப்பரிசில்களையும் இணையுரிமைகளையும் வழங்குதல்.

- விஞ்ஞான தொழில்நுட்ப நபர்களின் தற்போதைய பதிவேடுகளை பேணுவதற்கும் வேறு வழிகளில் இலங்கையில் உள்ள விஞ்ஞான தொழில்நுட்ப வளங்களில் தற்போதைய மற்றும் செயற்றிற்றப்படுத்தப்ட்ட தேவைக்கான கிடைக்கத்தக்க தரவுகளின், சேகரிப்பு மற்றும் ஆய்வுக்கான ஒரு மத்திய நிலையத்தை வழங்குவதும் விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை உருவாக்கத்திற்கான தகவல் மூலவளத்தை அளிப்பதும்.

- இந்நோக்கத்திற்காக நிகழ்ச்சித் திட்டங்களில் நிதியீடு செய்வதன் மூலம் மக்களிடையே விஞ்ஞானத்தை பிரபல்யமடையச் செய்தல்

தேசிய விஞ்ஞான மன்றம் தனது தொழிற்பாடுகளை செயற்படுத்துவதற்கு பின்வரும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகிறது:

### *விஞ்ஞான சர்வமயம்:*

தேசிய விஞ்ஞான மன்றமானது விஞ்ஞானிகளின் தனித்துவமான தொடர்புகளுக்கும் ஏனைய விஞ்ஞானிகளுடான கூட்டாய்வுக்கும் சுதந்திரத்தை அடையாளப்படுத்தி ஆதரவளிக்கின்றது. சர்வதேச செயற்பாடுகளினூடாக விஞ்ஞான மதிப்பினை தவிர எது வித வேறு பாடுமின்றி அவர்களின் விஞ்ஞான செயற்பாட்டினை நிறை வேற்றுவதில் உதவுகின்றது.

### *விஞ்ஞான தொழில்பாடுகளில் சுதந்திரம்*

தேசிய விஞ்ஞான மன்றமானது, விஞ்ஞான செயன்முறைக்கு இணங்கும் ஒரு முறையில் சுயமாக விஞ்ஞானத்தினை தொடர்ந்து மேற்கொள்வதற்கு விஞ்ஞானிகளின் உரிமையினை அவதானித்து ஆதரவளிக்கும் பொறுப்பினையையும் எடுத்துள்ளது.

## முகாமைத்துவ சபை

தேசிய விஞ்ஞான மன்றம் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்ட நான்கு அங்கத்தினர்களையும் நிதி அமைச்சு UGC, SLAAS, IESL இனை பிரநிதித்துவப்படுத்துகின்ற நான்கு அங்கத்தின்ர்களையும் தலைவரையும் பணிப்பாளரையும் கொண்டிருக்கின்ற ஒரு முகாமைத்துவ சபையினால் ஆளுகைக்கு உள்ளாக்கப்படுகின்றது. ஸ்தாபனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக பணிப்பாளர் செயற்படுகின்றார்.

**பேராசிரியர். சிறிமாலி பர்ணாந்து –** தலைவர்

*நுண்ணுயிரியல் பேராசிரியர், நுண்ணுயிரியல் பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்*

**கலாநிதி. எஸ்.எ.கெ. அபயவர்தன –** பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர்

**தேசபந்து பேராசிரியர். டியூலி டி சில்வா – அங்கத்தவர்**

*ஓய்வு பெற்ற விசேட ஆலோசகர், இரசாயன கைத்தொழில் பிரிவு, UNIDO, வியன்னா, ஒஸ்ரியா முன்னைய இரசாயளவியல் பேராசரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், உசாவுனர், லின்க் நேச்சுரல் புரொடொக்ஸ்*

**பேராசிரியர். உமா குமாரசுவாமி –** அங்கத்தவர்

*ஓய்வு நிலை தாவரவியல் பேராசிரியர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் உயர்சஸ்கத்தவர் தேசிய விஞ்ஞான கழகம். உசாவுனர் (OUSl) வாழ்நாள் பூராவும் கற்றல் (1.3) கருத்திட்டம்*

**பொறியியலாளர் பேராசிரியர். ஏ.கெ.டபிள்யு. ஜயவர்தன –** உறுப்பினர் - 2011.06.08 இலிருந்து

*பேராசிரியர், கால்நடை மருத்துவ விலங்கு விஞ்ஞான பீடம், பேராதெனிய பல்கலைக்கழகம்*

**கலாநிதி. உபாலி சேதரா –** உறுப்பினர் - 2010.09.01 இலிருந்து 2011.01.14 வரை

*பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்*

**பேராசிரியர். ரொஷான் இராஜபக்ச –** அங்கத்தவர்

*சிரேஸ்ட பேராசிரியர், விவசாய உயிரியல் திணைக்களம், ருஹுணு பல்கலைக்கழகம், அங்கத்தவர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிறைவேற்று பணிப்பாளர், விவசாய ஆராய்ச்சி கொள்கைக்கான மன்றம்.*

**பொறியியலாளர். ஆனந்தா ஹெட்டியாராய்ச்சி –** அங்கத்தவர்

*முகாமைத்துவ உசாவுனர், P & E உசாவுனர்கள்*

**திரு. ஜகத் டி. டயஸ்** - அங்கத்தவர், 2010.07.07 இலிருந்து 2011.01.14 வரை

*பணிப்பாளர், (பாராளுமன்ற விவகாரங்கள்) நிதி திட்டமிடல் அமைச்சு.*

**பேராசிரியர். ஜயந்த விஜயரட்ன –** அங்கத்தவர் - 2010.10.11 இலிருந்து

*விலங்கியல் சிரேஸ்ட பேராசிரியர், களனி பல்கலைக்கழகம்*

**திருமதி. எஸ்.டபிள்யு.சி. ஜயமனி –** அங்கத்தவர் - 2011.04.08 இலிருந்து

*உதவிப் பணிப்பாளர், பிஸ்கல் கொள்கை திணைக்களம், நிதி திட்டமிடல் அமைச்சு*

**திரு. சி.எம்.ஆர். அந்தோனி –** அங்கத்தவர் - 2011.06.10 இலிருந்து

*பணிப்பாளர் (விஞ்ஞான, சுகாதார, பௌதிக கல்வி) விஞ்ஞான திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம்*

## அமைப்பாண்மை கட்டமைப்பு

சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டது போன்று 11 உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு முகாமைத்துவ சபையினால் தேசிய விஞ்ஞான மன்றம் ஆளுமை செய்யப்படுகின்றது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் குறிக்கோள்களை பூரண நிறைவேற்றம் செய்தலில் முகாமைத்துவ சபைக்கு துணைமையாக இருக்கும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆறு விஞ்ஞான பிரிவுகளுக்கு நிதி மற்றும் நிர்வாக பிரிவு, அச்சிடல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளக கணக்காய்வு சேவைகள் பிரிவு ஆகியன உறுதுணையாக அமைகின்றன. விஞ்ஞான செயற்பாடுகள், ஆராய்ச்சி, தொழில்நுட்பம், சர்வதேச தொடர்பிணைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சி, விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்துகை ஆகிய பிரிவுகளினால் விஞ்ஞான் மேற்கொள்ளப்படும். அதே வேளையில் நாடெங்கிலும் விஞ்ஞான தகவல்களை பரப்பும் செயற்பாடானது தேசிய விஞ்ஞான நூலக வள நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. சிறந்த ஆளுமைக்கு சிறந்த உள்ளக கட்டுப்பாடுகள் பேணப்படல் வேண்டும். இந்த உள்ளக கட்டுப்பாடுகளாவன, முகாமைத்துவ சபைக்கு அதாவது தலைவருக்கு அறிக்கை செய்கின்ற ஒரு சுயாதீன உள்ளக கணக்காய்வு அலகினை தாபிப்பதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அமைப்பாண்மை கட்டமைப்பானது இணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது.

### விஞ்ஞான செயற்பாடுகளை ஒழுங்கமைப்பு செய்தல்

தேசிய விஞ்ஞான திட்டத்தின் பணித்திட்டத்திற்கு அமைவுற தேசிய விஞ்ஞான மன்றமானது விஞ்ஞான தொழில்நுட்பத்திற்கு விரிவாக சேவையாற்றுகின்ற வேறுபட்ட விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியீடு செய்கின்றது இந்நோக்கத்திற்காக முகாமைத்துவ சபையானது, விசேடமாக அமைப்புருவாக்கம் செய்யப்பட்ட கௌரவ செயற்குழுவினாலும் குழுவினாலும் தரப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவுற உறுதுணை செய்யப்படுகின்றது.

**ஆராய்ச்சி தொழில்நுட்ப ஆலோசனைக்குழு** இக்குழுவானது, விஞ்ஞான பிரிவின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல், இணக்குவித்தல், பரிந்துரைக்கப்பட்ட ஆராய்ச்சி/ தொழில்நுட்ப கருத்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்தல் மற்றும் பணயப் பொருள் ஆராய்ச்சியாளர்களுடையே அதிக முறையியல் சார் தொடர்பாடலை மேம்படுத்துவதன் மூலம் விஞ்ஞான பிரிவின் செயற்பாடுகளின் நடைமுறையினை நோக்குகின்றது. அது மட்டுமின்றி, கூட்டிணை வழிகாட்டல்கள், ஆராய்ச்சி சமூகத்தினருக்கு நிலையிடமாகவும் பின்னூட்டலை பெற்றுக் கொள்ளும் இடமாகவும் இருத்தல் மற்றும் ஆராய்ச்சி சமூகத்தினர் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் ஆகிய இரு சாராரும் பொதுவாக அக்கறை கொள்ளக் கூடிய விடயங்களை கலந்துரையாடல் போன்ற வாய்ப்புக்களை ஆலோசனை குழு வழங்குகிறது.

**ஆராய்ச்சி குழுவானது** விஞ்ஞான ஆராய்ச்சியின் வேறுபட்ட பரப்பெல்லைகளின் செயற்பாடுகளை நிர்வாகம் செய்யவும் மற்றும் அந்தந்த துறைகளின் ஆராய்ச்சி மானியங்களினை நிர்வகிக்கும் பணி

பணிக்கப்பட்டுள்ள தேசிய விஞ்ஞான மன்றத்தின் கருத்திட்ட உசாவுனர்களை வழிநடாத்துவதன் மூலம் முகாமைத்துவ சபைக்கு உதவியாக இருக்கவும் அமைப்புருவாக்கம் செய்யப்பட்டது.

**தேசிய விஞ்ஞான மன்றத்தின் தேசிய செயற்குழுவானது,** தேசிய விஞ்ஞான மன்றம் அதனது குறிக்கோள்களையும் இலக்குகளையும் சாதிப்பதற்கு முகாமைத்துவ சபைக்கு உதவியாக இருப்பதுடன், குறித்துரைக்கப்பட்ட துறைகளில் விஞ்ஞான வழிகாட்டல்களை வழங்குவதுடன், அதனது வேலைத்திட்டமானது குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன். அதனது முன்னேற்றம் / விளைவுகளாவன தொடர்ச்சியாக குறிப்பிட்ட கால இடைவெளிகளில் முகாமைத்துவ சபைக்கு அறிக்கை செய்யப்படல் வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் செயற்குழுவானது, அதனது பணிகளை முன்னெடுத்து செல்கையில் ஏற்படக் கூடிய அனர்த்த காரணிகளை, அவற்றினை தவிர்க்கும் பொருட்டு இனங்காணுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன் செயற்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட சிறப்பான பணியை பூரண நிறைவேற்றம் செய்தல் பொருட்டு அப்பணியின் வெற்றிக்கு தேவையான பிரதான தீர்மானங்களை இனங்காணல் வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**பதிப்பாசிரியர் சபை**, தேசிய விஞ்ஞான மன்றத்தின் சஞ்சிகைத் தொடர்ச்சியான ஒரு ஒழுங்கு முறையின் கீழாக பிரசுரிக்கப்படுதலினையும் மற்றும் இலங்கை சமூக விஞ்ஞான சஞ்சிகை மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் பிரசுரிக்கப்படும் ஏனைய விஞ்ஞான சாதனங்கள் என்பன தொடர்ச்சியாக பிரசுரிக்கப்படுதலினையும் உறுதிப்படுத்தும் பதிப்பாசிரியர் சபையானது, பதிப்பாசிரியர்கள், எழுத்தாளர்கள், மீளாய்வாளர்கள், மற்றும் பதிப்பாசிரியர்சபை பதவியினர் ஆகியோருக்கு வழிகாட்டல்களை வழங்கும்.

## விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி முக்கியத்துவங்கள்

வருடத்திற்கான எமது வரவு செலவு திட்டமானது விரிவானதொன்றாக இல்லாது இருந்த போதிலும், விஞ்ஞான தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு சேவைகளை செய்வதுடன் சுதந்திரமான மற்றும் தங்கு தடையற்ற அறிவினை பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்கும் ஏன் என்ற கேள்வி அடிப்படையிலான காலாசரத்தை உருவாக்குகின்றது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் பிரதான குறிக்கோளாகிய அடிப்படை மற்றும் பிரயோக விஞ்ஞான ஆராய்ச்சிகளை தொடங்குதல், துணைமையாக இருத்தல் மற்றும் உதவியளித்தல் ஆகியவற்றை செய்யும் அதே வேளையில் நாட்டு மக்களின் நலனுக்காக குறிப்பிட்ட சில ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளினை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கூட்டிணைகிறது.

இவ்வருட காலப்பகுதியில் பூரணப்படுத்தப்பட்டதும் குறித்துவைக்கப்பட வேண்டிய அளவுக்கு முக்கியத்துவமும் வாய்ந்த சில விடயங்கள் வருமாறு.

### இலங்கை விஞ்ஞானிகளின் உலகளாவிய முன்னரங்கு: இணைந்து பணியாற்றல் மற்றும் அறிவினை பகிர்ந்து கொள்ளல் ஊடாக இலங்கைக்கு அதிகாரமளித்தல்

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அகப்பாட்டெல்லைக்குள் செயற்படும் தேசிய விஞ்ஞான மன்றமானது யுனெஸ்கோவுடன் கூட்டிணைந்து நாட்டின் பின் பிணக்கு பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக வெளிநாட்டில் வதியும் இலங்கை விஞ்ஞானிகளின் அறிவை பெற்றுக் கொள்வதற்கு இலங்கை விஞ்ஞானிகளின் உலகளாவிய முன்னரங்கினை ஒழுங்கமைப்பு செய்தது. இம் முன்னரங்கின் பிரதான இலக்கானது, சிறந்த அறிவினை பெற்றுக் கொள்ளவும் தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட ஆராய்ச்சி மற்றும் கைத்தொழிற்துறை மேம்பாட்டிற்கும் மற்றும் தேசத்தின் விருத்திக்கும் வெளிநாட்டில் வதியும் தாய்நாடு துறந்த விஞ்ஞானிகளையும் தாய்நாட்டு விஞ்ஞானிகளையும் ஒன்று சேர்த்தல் ஆகும்.

இது வரையில் இலங்கையின் உற்பத்தி ஏற்றுமதிகளில் 1.5% ஆனது உயர் தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்டது ஆகும். பின் பிணக்கு அபிவிருத்தி எனும் சூழ் நிலையில் ஒரு மணித்தியாலத்தின் தேவைப்பாடு என்பது நவீன போக்குகளுடன் ஈடு கொடுக்கப்பட வேண்டியதொன்றாகும் என்பதுடன் புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கல் என்பது இலங்கையின் நிபுணத்துவத்தையும் புத்தாக்கத்திறனையும் அடிப்படையாக கொண்டதாக அமைகிறது. ஆதலினால் பொருளாதார வளர்ச்சிக்கான தொடர்ச்சியான கூட்டிணைப்பிற்கு இந்த முன்னரங்கானது ஒரு முதலீடாக அமைந்தது.



இலங்கை விஞ்ஞானிகளின் உலகளாவிய முன்னரங்கில் பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கு பயிற்சிப் பட்டறையின் பின்னர் உலகளாவிய முன்னரங்கு கலம் தாபிக்கப்பட்டது.

### விஞ்ஞான ஆராய்ச்சி தள மேடையை விஸ்தரித்தல்



விஞ்ஞான ஆராய்ச்சி தள மேடையை விஸ்தரிக்கும் முயற்சியில் அத்தள மேடையில் சிறிய அளவில் நிபுணர்கள் சார்ந்திருக்கும் நிலையை தவிர்க்கவும் விஞ்ஞானி ஆளணியினர் அடிப்படை, மருத்துவ மற்றும் பிரயோக ஆராய்ச்சியில் அவர்களுடைய செயற்றிறனை செய்கை முறை விளக்கமாக காட்டுவதற்கு அவர்களை ஊக்கப்படுத்தவும் தேசிய விஞ்ஞான மன்றமானது புதிய ஆராய்ச்சி திருப்பு முனைகளை எதிர்பார்த்து ஒரு தொகுப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றம் செய்தது. இருந்த போதிலும் போட்டிக்குரிய ஆராய்ச்சி மானியம், ஆராய்ச்சி இணையுரிமைகள் மற்றும் புலமைப்பரிசில்கள், பின் கலாநிதி ஆராய்ச்சி விஞ்ஞானிகள், ஆராய்ச்சி கருவி மானியம், ஆராய்ச்சி கருவிகளுக்கான உதிரிப்பாக மானியம், ஆராய்ச்சி பட்டங்களின் கண்காணிப்புகளுக்கான பக்கதுணைமை திட்டம், மற்றும் செயற்றிட்ட பிரரேரணை நூலகங்கள் பற்றிய பயிற்சிப்பட்டறைகளுமே வேறுபட்ட மானியத் திட்டங்களின் ஊடாக விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு நிதியீடு செய்யும் முயற்சியானது இக்குறிக்கோள்களை சாதிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டது.

### தொழில்நுட்பவியல் புத்தாக்கத்தை ஊக்குவித்தல்

வியாபார முயற்சிகள் போட்டிக்கான திறமுறை என்ற ரீதியில் தொழில்நுட்பவியல் புத்தாக்கத்தில் ஈடுபடுதலிலும் தொழில்நுட்பத்தில் ஈடுபாடு உள்ள பொதுமக்களின் உறுப்பினர்களுக்கும், தொழில்நுட்ப புத்தாக்கத்தின் அபிவிருத்தி செலவினத்திற்கு பணம் வழங்கல் நிமித்தமுமான செயற்பாடுகளில் தேசிய விஞ்ஞான மன்றமானது மிகப்பெரிய உறுதுணையாகவும் வளமாகவும் இருக்கும் அதே வேளையில் தொழில்நுட்பவியல் திட்டங்களை வலுப்படுத்துவதை குறிக்கோளாக கொண்டுள்ளது.

- தொழில்நுட்ப அபிவிருத்திக்கு உறுதுணையாக இருத்தல் (Tech – D)
- புதிய தொழில்நுட்பங்களை அடிப்படையாக கொண்ட வியாபார முயற்சிகள் தொடங்கப்படுவதற்கு உறுதுணையாக இருத்தல் (Start Ups)

### அதிபுலமைச் சொத்துக்களை பாதுகாத்தல்

புத்தாக்குனர்கள் மற்றும் அதி புலமைச் சொத்து ஆக்குனர்களின் உரிமைகளைப் பெற்று பாதுகாத்து கொள்வதற்கு கீழ் வருவனவற்றின் ஊடாக உதவி வழங்கப்படுகின்றது.

- செயன்முறையை இலகு படுத்துவதற்கு நிலையங்களை தாபித்தல்
- இலங்கையின் தேசிய அதிபுலமைச் சொத்து அலுவலகத்துடன் கூட்டிணைந்து அதிபுலமைச் சொத்து கணக்காய்வு.

- பல்கலைக்கழகங்களில் அதி புலமைச் சொத்து கற்கையை கற்பித்தலும் மற்றும் காப்புரிமை விண்ணப்பங்களை வரைவு செய்தலிலும் தொழில்நுட்பவியல் ஆலோசனை
- காப்புரிமைக்கான உதவிகளை தாபித்தலும் தொடறரா PCT கோப்பிடலிற்கு துணைமையாக இருத்தலும் காப்புரிமை தகவல் மற்றும் வரைவுகளை தேடலும்.
- காப்புரிமை மீளாய்வு மற்றும் காப்புரிமை வரைவுக்கு நிதி ரீதியாக துணையாக இருத்தல்.

### தேசிய நெநோ தொழில்நுட்ப புது முயற்சி

வேகமாக செல்லும் நெநோ தொழில்நுட்ப உலகத்தில் ஒரு வெற்றிகரமான பங்காளராக ஆகும் நோக்குடன் தேசிய நெநோ தொழில்நுட்ப புது முயற்சியானது தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சுடன் கூட்டிணைந்து, உயர் தரமான உற்பத்திகளை குறைந்த கிரயத்தில் விரைந்த வேகத்தில் கொடுக்கும் குறிக்கோளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த மாபெரும் செயலூட்டம் மிகு தொழில்நுட்பத்தின் மூலம் நாட்டிற்கு அதீத நன்மைகளை பெற்றுக் கொடுக்கவும் அவற்றின் சொந்த உற்பத்தியை மீள் உற்பத்தி செய்யக் கூடிய செயற்றிறனுக்கு உட்படுத்தவும் மற்றும் எல்லாவற்றிக்கும் மேலாக எதிர்வரும் வருடங்களில் உயிர் வாழ்தல் எனும் நிலையினை விட அறிவுடன் சிறப்பாக வாழ்வதற்கும் ஏற்ற விதத்தில் நாட்டினை தயார் பண்ணுதல் தொடர்பிலான முயற்சிகளினை தேசிய விஞ்ஞான மன்றம் முன்னெடுக்கின்றது.

### நெநோ தொழில்நுட்ப ஒழுங்கு விதிச் சட்டகம்




இலங்கையில் நெநோ தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கு ஒரு ஒழுங்குவிதி சட்டகத்தை விருத்தி செய்யும் பணியானது, சர்வதேச ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தின் கூட்டிணைவுடன் தொடங்கப்பட்டதுடன் கருத்திட்ட தொடக்க கூட்டமானது 2011. மார்ச் மாதம் 08 – 09 வரை தேசிய விஞ்ஞான மன்றத்தில். இந்தியாவில் உள்ள சக்தி வளங்கள் நிறுவகம், பாகிஸ்தானில் உள்ள நெநோ விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரஸ்டன் நிறுவகம், IDRC மற்றும் இலங்கை பங்குடமை நிறுவனங்களின் பங்களிப்புடன் நடந்தது. குறித்துரைப்புகளுக்கு ஏற்ப வேலை பொதி பிரேரணைக்கு அமைவுற, செயற்பாடுகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

### தேசிய நெநோ தொழில்நுட்ப கொள்கை

வெளிப்படையான மற்றும் பாராபட்சம் அற்ற செயற்பாட்டினை நிச்சயம் செய்து கொள்வதற்காக கொள்கை உருவாக்கலின் சாரமானது, தொடர்புடைய தீர்வுகளை கொண்டு வருதல்; மற்றும் தரப்பட்ட ஒரு துறையுடன் தொடர்புடைய செயற்பாட்டை வரையறுக்கும் காரணி என்பன நம்பிக்கையை கட்டியெழுப்பவதில் முக்கிய பங்கினை வகிப்பவை என்பதுடன் தொடர்புடைய விஞ்ஞானத்துறையின் செயற்பாட்டை பயனுறுதி உடனும் வினைத்திறமையுடனும் நடாத்தப்படுவதற்கு தேவையான வழிகாட்டல்கள் ஆகிய தேவைப்பாடுகளை நெநோ (NANO) தொழில்நுட்பம் மற்றும் நெநோ (NANO) தொழில்நுட்ப கொள்கை ஆகிய இரு பரப்பெல்லைகளிலும் பூரண நிறைவேற்றம் செய்வதற்கு, விஞ்ஞான மன்றத்தினால் எடுக்கப்பட்ட பாரிய முயற்சியானது இன்னும் மேம்படுத்தப்பட்டு 2011ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

தேசிய விஞ்ஞான மன்றமானது கொள்கை முறைவடிவாக்கம், ஒழுங்குவிதி சட்டம், விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் என்பவை உள்ளடங்கலாக தொடக்கநிலை பணிகளை பயிற்சி பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் ஊடாக முன்னெடுத்து செல்கின்றது. அத்துடன் செய்வதற்கு எதிர்ப்பார்த்துள்ள செயற்பாடுகளை மேம்பட்ட நிலையில் செய்வதற்கு அதனது முயற்சிகளை விரிவாக்கம் செய்துள்ளது.

### சிலின்டெக்

அரசிற்கு பதிலாக 50%மான பங்களிப்பினையும் தனியார் துறையிடமிருந்து 50%மான பங்களிப்பினையும் கொண்டதும் 2009ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதுமான இலங்கை நெநோ தொழில்நுட்ப நிறுவகமானது (சிலின்டெக்) இவ் வருடகாலப்பகுதியில் சிறப்பான செயலாற்றுகையை காட்டுகிறது. 2011ஆம்ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய உற்பத்திகள் மற்றும் அதன் செயன்முறை தொடர்பில் 05 காப்புரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு ஐக்கிய இராச்சியத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

### விஞ்ஞான பிரசுரிப்புகள்

இவ் வருடகாலப்பகுதியில், தேசிய விஞ்ஞான மன்றத்தினால் மானியம் வழங்கப்பட்ட ஆராய்ச்சி குழுவினால் மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் ஆழம் மற்றும் தரத்தை செய்கை முறை விளக்கமளிப்பாக காட்டுவதுமான மற்றும் கல்வியில் சிறந்த ஏனைய விஞ்ஞான அறிக்கைகள் சிறப்பான துறைகளின் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் விடயங்களாவன தேசிய விஞ்ஞான மன்றத்தின் சஞ்சிகைகள், இலங்கை சமூக விஞ்ஞான சஞ்சிகை மற்றும் விதுரவ விஞ்ஞான சஞ்சிகை என்பவற்றில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

#### தேசிய விஞ்ஞான மன்றத்தின் சஞ்சிகை (JNSF)

இலங்கையில் விஞ்ஞான மேற்கோள் சுட்டி விரிவாக்கம் உள்ளடங்கிய ஒரே சஞ்சிகை JNSF ஆகும். இதன் 39வது தொகுதியின் 4 வெளியீடுகளும் (1 – 4) 2011ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.




கீழ் குறிப்பிடப்பட்டுள்ள Thomsan Reuters தரவுத்தளத்தின் ஊடாக சஞ்சிகையானது சுட்டிலக்கமிடப்பட்டுள்ளது

- விஞ்ஞான மேற்கோள் சுட்டி விரிவாக்கம்: இத்தரவுத்தளமானது, ஆராய்ச்சியாளர்கள், நிர்வாகிகள், பீடங்கள் மற்றும் மாணவர்களுக்கு நூல் தொகை இயல் மற்றும் மேற்கோள் தரவுகள் தொடர்பில் விரைவான நுழைவினை தருகிறது. இதற்குள் உலகத்தின் முன்னனி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சஞ்சிகைகளில் 6,650 இணையும் அது போன்று 150 துறைகள் சம்பந்தமான விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.
- சஞ்சிகை மேற்கோள் அறிக்கைகள் / விஞ்ஞான பதிப்புருக்கள்

- BIOSIS முன் காட்டுகள்
- விலங்கியல் பதிவுகள்
- உயிரியல் சம்பந்தமான சுருக்கங்கள்
- இரசாயன சம்பந்தமான சுருக்கங்கள்
- Scopus

## இலங்கை சமூக விஞ்ஞான சஞ்சிகை (SLJSS)




இந்தப் பிரசுரிப்புகளின் ஊடாக உள்ளூர் ஆராய்ச்சி தேடல்கள் பற்றிய தகவல்கள் விரைவாக பரப்பப்படுவதுடன், சமூக விஞ்ஞானத்துப் பிரசுரிப்புகளும் மேம்படுத்தப்படுகின்றன.

சமூக விஞ்ஞான சஞ்சிகையின் தொகுதி 31/32இன் 1 மற்றும் 2 பதிப்புருக்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## மனிதன் மற்றும் உயிர் கோளவியல் (MAB) நிகழ்ச்சித்திட்டம்

இயற்கையுடன் மனித வர்க்கத்தின் உறவினை மேம்படுத்தும் நோக்கினை உடைய MAB நிகழ்ச்சித்திட்டமானது, அடிப்படை அறிவினை பகிர்தலிற்கான நுழைவு, ஒருங்கிணைக்கப்படுதலிற்கும் பேணுகைக்கும் மற்றும் அபிவிருத்திக்குமான ஊக்குவிப்புகள், மற்றும் தொடர்ச்சியாக நீடித்து நிலைத்திருக்கக்கூடிய முகாமைத்துவ சூழலியல் முறைமைக்கான விஞ்ஞான ஆராய்ச்சி என்பவற்றை உள்ளடக்குகிறது. அத்துடன் இன்றைய செயற்பாடுகளின் மூலம் நாளைய உலகத்திற்கு ஏற்படக்கூடிய விளைவுகளையும் மற்றும் அதன் காரணமாக, மனித வர்க்கம் சுற்றாடல் சிறப்புடன் இருப்பதற்கு இயற்கை வளங்களை வினைத்திறமையுடன் முகாமைத்துவம் செய்வதற்கு மனிதனின் செயற்றிறனை அதிகரிக்கின்றது.




கண்டியை உயிர் கோளவியல் ஒதுக்கீடாக பெயர் குறிப்பீடு செய்யும் முயற்சியானது 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் அம்முயற்சியானது தொடர்ந்தும் எடுக்கப்படுகின்றது.

## ஆராய்ச்சி அபிவிருத்தியில் மனித வளங்கள்

ஆராய்ச்சி கண்காணிப்பானது பட்டப்பயிற்சி போதனையை விட வேறுபட்ட திறனை உள்ளடக்கியிருக்கும் அதே வேளையில் ஆராய்ச்சி மாணவர்கள், தமக்கு தேவைப்படும் அறிவினை மாணவர் மற்றும் அவரது சிரேட்டருக்கு இடையில் நிலவும் அதிபுலமைச்சொத்து ஊடுருவலின் ஊடாக மட்டுமே பெற்றுக்கொள்ளல் வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுவதில்லை. கலாநிதி பட்டத்தின் கருத்திட்டங்களாவன வேறுபட்ட வடிவங்களை எடுப்பதினாலும் தனிப்பட்ட ரீதியில் பணியாற்றப்பட வேண்டியதொன்று என்பதினாலும்  அது பற்றிய கண்காணிப்பிற்கு தனிப்பட்ட வாய்ப்பாடு எதுவுமில்லை. சிரேட்டர்கள், அவர்களின் அறிவு, திறன் என்பதற்கு அமைய அப்புது முயற்சி அவர்களால் கையாளப்படல் வேண்டும் என்பதுடன் சிறந்த கண்காணிப்பிற்கு விருது வழங்கப்படலும் வேண்டும்.

பின் கலாநிதி விஞ்ஞானிகள் நடப்பு ஆராய்ச்சிகளுக்கும் மற்றும் ஏற்கனவே செய்யப்பட்ட ஆராய்ச்சி தொடரப்படுவதற்கும் முக்கியம் என்பதினால் அவர்கள்  தேசிய விஞ்ஞான மன்றத்தினால வழங்கப்படும் கலாநிதி ஆராய்ச்சி விஞ்ஞானிகள்  விருதுக்கு உடையவர்கள் ஆகின்றார்கள்.

இவ் வருட காலப்பகுதியில் இரு ஆராய்ச்சி இணையுரிமைகள் மூன்று கலாநிதி மற்றும் ஐந்து முதுமாணிப் பட்டங்கள் வழங்கப்பட்டன. ஆறு பட்டதாரி மாணவர்கள், ஒரு பட்டப்படிப்பு மாணவன் மற்றும் நான்கு தொழில்நுட்பவியல் உதவியாளர்கள் ஆகியோரும் தேசிய விஞ்ஞான மன்றத்திடமிருந்து ஆதார சேவையை பெற்றுக்கொண்டனர். அதாவது, பட்டப்பின் பட்டத்தை

பெற்றுக்கொள்வதற்கு வழிநடத்துகின்றதும் விஞ்ஞான தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சியை முன்னெடுக்கும் மாணவர்களினை கண்காணிப்பதில் ஈடுபட்டடுள்ள விஞ்ஞானிகள்/ எந்திரவியலாளர்களை அங்கீகரிக்கும் விருது வழங்கல் திட்டமான ஆராய்ச்சி பட்டங்களின் கண்காணிப்பிற்கான பக்கத்துணை திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி அபிவிருத்தியில் மனித வளத்தை மேம்படுத்துவதில் ஒரு பகுதி முயற்சியானது தேசிய விஞ்ஞான மன்றத்தினால் எடுக்கப்பட்டது.

## விஞ்ஞானத்தை மொழிபெயர்ப்பு செய்தலும் பங்குதாரருடன் ஈடுபடசெய்தல்




தேசிய  விஞ்ஞான மன்றத்தின் கொள்கையின் பொழிப்பானது தேசி விஞ்ஞான மன்றத்தினால் நிதியீடு செய்யப்பட்ட ஆராய்ச்சியின் முக்கிய விடயங்களையும் மற்றும் ஏனைய முக்கிய ஆவணங்களையும் முக்கிய தரவுகளுடன் தேவைப்படும் இடங்களில் கொள்கை தெரிவுகளுடன் கொள்கை அமைப்புகளுக்கு மாற்றீடு செய்யும் குறிக்கோளையுடைய ஒரு பாதுகாப்பு கருவியாக அமைகிறது. இவ்விடயம் தொடர்பிலான தேசிய விஞ்ஞான மன்றத்தின் பரிந்துரைப்புகளாவன 2009ஆம் ஆண்டிலிருந்து தொடரப்படுவதுடன் தொடர்புடைய அமைச்சுகள், நிறுவனங்கள், நூலகங்களிடையே சுற்றுக்கு விடப்படுகின்றமையானது ஆராய்ச்சிகள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

## Scinnotech Alert மின் - செய்திமடல்



இந்த மின்னியல் செய்திமடலானது விஞ்ஞானம், புத்தாக்கம், தொழில்நுட்பம் பற்றிய அண்மித்த தகவல்களையும் அது போன்று வாழ்க்கைத் தொழில் அபிவிருத்திக்கான வாய்ப்புகள் போன்ற தகவல்களை நேரடியாகவே விஞ்ஞானிகளின் desk Top இற்கு கிடைக்கப் பெறக்கூடியதாக செய்கின்றதனால் இம்மடலானது மிகவும் சிறப்பானதொன்றாக கருதப்படுகிறது. அத்துடன் இந்த மடலில் தரப்படும் விடயங்கள் வேகமாக மக்களை சென்றடைவதனால் இம் மடலில் விஞ்ஞான சமுகத்தினருடன் தொடர்புற்ற வகையில் அதிக முக்கிய தலைப்புகளை பற்றி உண்மையான செய்திகளையும் பகுப்பாய்வுகளையும் தருவதன் மூலம் இந்த மடலின் தரத்தை இன்னும் உயர்த்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### மிஹிமடலா கட்புல நாடாத்தொகுப்பு

தேசிய விஞ்ஞான மன்றத்தினால் தயாரிக்கப்படும் மிஹிடமலா கட்புல நாடா தொகுப்பானது, சிறந்த செயன்முறைகளை கொண்ட மின் உள்ளடக்கம் மற்றும் ஆக்கத்திறன் கொண்டதென அங்கீகரிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டில் தென் ஆசியா மன்தன் விருதில் மின் விஞ்ஞான பகுதியின் கீழ் சர்வதேச விருதினை வென்றெடுத்தது.

### இலங்கை விஞ்ஞான சுட்டி – டிஜிட்டல் நூலக தரவுத்தளம்

தகவல் தொடர்பாடல் முகவர் நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மின் - உள்ளடக்க விருது வைபவத்தில் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்படும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையினை அங்கீகரிக்கும் முகமாக e – Swabhimani 2011 இல் இலங்கை விஞ்ஞான சுட்டிக்கு (டிஜிட்டல் நூலக தரவுத்தளம்) ஒரு சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது.

### ஆராய்ச்சி சேவைகள்

**விஞ்ஞான தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமை (STMIS)**

ஆராய்ச்சியாளர்களுக்கு ஆராய்ச்சிக்கு தேவையான மானியங்களை இரகசியமான முறையில் விண்ணப்பிக்க இயலச் செய்வதற்கு விஞ்ஞான தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் முறையின் தரவுத்தளத்தை (STMIS) மேலும் விருத்தி செய்வதன் மூலம் இது எமது ஆராய்ச்சி சேவைகளை நாம் தொடர்ந்தும் விருத்தி செய்கின்றோம். ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சியின் அக அபிவிருத்திக்கு ஒரு முக்கிய கூறாக அமைகின்றது.

தேசிய விஞ்ஞான மன்றத்தினால் விருத்தி செய்யப்பட்டு பேணப்படும் STMIS ஆனது ஒரு கணணிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையும் அதனுடன் தொடர்புடைய தரவுத் தளங்கள் என்பதுடன் 2011 ஆம் ஆண்டில் STMIS இன் (WWW.nsf.mis.ac.lk) இணையத்தளத்தை மேம்படுத்தி இற்றைப்படுத்தி மாற்றியயமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் தேசிய விஞ்ஞான

மன்றத்தின் IT ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் UCSC யின் கூட்டிணைவுடன் எடுக்கப்பட்டது. தொடறரா தரவுப் பதிவின் மூலமும் தரவுத் தேடல் மூலமும் பெறக்கூடிய வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் தரவுத்தளத்தை இற்றைப்படுத்தவும் மற்றும் தரவுத்தள செயற்றிறனை விரிவு படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் STMIS தரவுத்தளமானது, விஞ்ஞானிகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களையும் விஞ்ஞான தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களையும், சேவைகளை வழங்கும் நிறுவனங்கள், உயர் கல்விகளை வழங்கும் நிறுவனங்கள், நிறுவனத்தில் உளதாயிருக்கின்ற உயர் விஞ்ஞான கருவிகள், விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய தகவல்கள் நாட்டில் நடைமுறையில் உள்ள மானியங்கள் பற்றிய தகவல்கள் என்பனவற்றை தருகிறது. 2011 ஆம் ஆண்டின் இறுதியில் தரவுத்தளத்தில் பதியப்பட்ட விஞ்ஞானிகளின் மொத்த எண்ணிக்கை 4250 ஆகும். இத்தரவுத்தளத்திற்கு தகவல்களை வழங்கும் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 191. இதற்குள் அரச பல்கலைக்கழகங்களின் 37 விஞ்ஞான தொழில்நுட்ப பீடங்களும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் உள்ளடங்கலாக விஞ்ஞான தொழில்நுட்ப துறையில் உள்ள 46 நிறுவனங்களும் அடங்கும்.



## தேசிய டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கருத்திட்டம்

உள்ளூர் நூலகங்களில் உள்ள விஞ்ஞான தொழில்நுட்பம் பற்றிய ஆக்க ஆய்வு கட்டுரைகளை, விஞ்ஞான சரிநிகராளர்கள் நோக்க கூடியவாறு, தொடறரா நுழைவில் வழங்கும் நோக்குடன் அந்த ஆக்க ஆய்வு கட்டுரைகளை டிஜிட்டல் வடிவில் மாற்றுவதற்கு, ஒரு தேசிய டிஜிட்டல் மயமாக்கல் கருத்திட்டமானது (NDP) ஆரம்பிக்கப்பட்டது. 05 வருட காலவரையறையை உள்ளடக்கிய இந்த NDP கருத்திட்டத்தின் முதல் கட்ட பணியானது 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. முதல் கட்ட நடவடிக்கையின் கீழ், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தில் ஆக்க ஆய்வு சேகரிப்புகள் உள்ள 06 நூலகங்கள் டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு இணங்காணப்பட்டது. இந்தக்கருத்திட்டத்தின் வளர்ச்சியினை கண்காணிப்பதற்கு ஒரு வழிப்படுத்தும் செயற்குழு நியமனம் செய்யப்பட்டதுடன் இக் கருத்திட்டத்தின் பங்குடமையாளரான ஒவ்வொரு நூலகத்திடமும் கையொப்பம் பெறப்படுவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் நூலகங்களில் உள்ள தகவல் தொழில்நுட்ப விடயங்கள் சேகரிக்கப்பட்டு, 05 வருடத்திற்குரிய கருத்திட்ட பணித்திட்டம்

தொடங்கப்பட்டது. தேசிய விஞ்ஞான மன்றத்துடன் இணைந்து டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு பொருத்தமான துணை நிறுவனம் ஒன்றும் இணங்காணப்பட்டது.

டிஜிட்டல் மயப்படுத்தும் செயன்முறைக்கு இணைவாக, நிறுவன ரீதியான அறிவுக் களஞ்சியம் மேம்படுத்தப்பட்டது. அவர்களால் கோரப்படும் ஏனைய விஞ்ஞான தகவல்களை உரிய நேர அடிப்படையில் வழங்குவதற்கும் மற்றும் நாட்டிலுள்ள சகல கல்விப் பொருள் சார் ஆக்கங்கள் விஞ்ஞான சரிநிகராளர்களுக்கு கிடைக்கப் பெறக் கூடியதாக செய்யப்பட்டுள்ளதா என்பதை நிச்சயம் செய்து கொள்வதற்கு நிறுவன ரீதியிலான மின் அறிவுக் களஞ்சியம் தேசிய வலையமைப்பு தாபிக்கப்பட்டதுடன் இந்த கல்விப் பொருள் சார் ஆக்கங்களில் குறிப்பிட்ட சில ஆக்கங்களாவன, உற்பத்தி ஆராய்ச்சி முயற்சிகளினை மேம்படுத்துவதாகவும் உறுதுணை செய்வதாகவும் இருப்பதினால் இவை குறித்து வைக்கப்பட வேண்டியவை ஆகும்.

### இலங்கை விஞ்ஞான சுட்டி (SLSI) தரவுத்தளம்

SLSI தரவுத்தளத்தில் உள்ள முழு விடயங்களையும் உள்ளடக்கிய ஆவணங்கள் டிஜிட்டல் நூலகத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டமையானது, இவ் வருட காலப்பகுதியில் விரைவான ஒரு வளர்ச்சியை காட்டியது. இது தரவுத்தளத்திலுள்ள ஆவணங்கள் மொத்த எண்ணிக்கையின் 59% ஆகும். மாற்றீடு செய்யப்பட்ட, முழு விடயங்களையும் உள்ளடக்கிய NSF LAN இன் ஊடாக தொடறராது நுழையக் கூடிய வசதியுடைய. ஆவணங்களின் எண்ணிக்கை – 31 ம் திகதி டிசெம்பர் 2011 ஆண்டில் 25553 ஆகும்.

### தேசிய – மின் அறிவுக்களஞ்சியம்

தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தேசிய மின் - அறிவுக்களஞ்சியமானது, ஏனைய மின் அறிவுக் களஞ்சியங்களையும் மற்றும் உள்ளூரில் தொடறரா சேவையில் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகளையும் ( SLJOL தரவுத்தள விடயங்களும்) தேடிப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தேடல் வசதியினையும் கூட்டாக சேர்த்துக் கொண்டுள்ளது. ஒரு தேடலின் மூலம் ஒன்று அல்லது பல அல்லது சகல களங்களுக்கும் செல்லக் கூடியதாக இருக்கும்.

### இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்க தரவுத்தளம்

SLAAS பருவக் கூட்டத் தொடர்களில் கடந்த 25 வருடங்களில் வாசிக்கப்பட்ட சகல ஆக்கங்களின் தகவல்களும் SLAAS தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டது. இது ஆராய்ச்சியாளர்களுக்கு தமது ஆராய்ச்சி பணியினை முன்நோக்கி நகர்த்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்

**ஆராய்ச்சி பிரிவு (RD)**

ஆராய்ச்சி அபிவிருத்தியியை சார்ந்த புத்தாக்கங்களாவன மேம்பட்ட பொருளாதாரத்துடன் துணையாக மிக நீண்ட காலமாக இருந்து வந்ததுடன், தேசத்தின் செல்வம், வேலைவாய்ப்பு மற்றும் வாழ்கையின் தரம் என்பவற்றிக்கு பிரதான பங்களிப்பை வழங்குகிறது.

தேசிய விஞ்ஞான மன்றமானது விஞ்ஞானவியல் மற்றும் எந்திரவியலின் சகல துறைகளிலும் ஆராய்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதுடன் மன்றத்தின் ஆராய்ச்சி பிரிவின் பணிப்பாணையானது கீழ் வரும் விடயங்களை உள்ளடக்கி உள்ளது.

- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருப்பொருளினை விளிக்கின்ற பணித் திட்டத்தை நோக்கிய பல்துறை ஆராய்ச்சிகள் உள்ளடங்கலாக இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்களின் ஊடாக அடிப்படை மற்றும் பிரயோக விஞ்ஞான ஆராய்ச்சிகளினை தொடங்குதலும் அதற்கு உறுதுணையாக இருத்தலும்
- பல்கலைக்கழகங்களில் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்களில் விஞ்ஞானத்துடன் தொடர்புடைய பணிகள் தொடர்பில் பணியாற்றப்படுதல் நிமித்தம் மிகத் திறமையான பட்டப்பின் மற்றும் கலாநிதிப் பின் ஆராய்ச்சியாளர்களுக்கு புலமைப்பரிசில்கள் மற்றும் இணையுரிமைகளை வழங்கல்.

ஆராய்ச்சிப் பிரிவானது தனது செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக அமுல்படுத்துகை செய்கிறது.

- போட்டிக்குரிய ஆராய்ச்சி மானியத் திட்டம்
- ஆராய்ச்சி இணையுரிமைகள்
- ஆராய்ச்சி புலமைப் பரிசில்கள்
- கலாநிதி பின் ஆராய்ச்சி விஞ்ஞானி
- ஆராய்ச்சி கருவிகளுக்கான மானியம்
- ஆராய்ச்சி கருவிகளுக்கான உதிரிப்பாகங்கள்
- தேசிய கருப் பொருளுக்குரிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம்
- கூட்டிணைக்கப்பட்ட கருப்பொருளுக்குரிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம்
- தேசிய விஞ்ஞான மன்ற ஆராய்ச்சி விருதுகள்
- ஆராய்ச்சி திட்டத்தை கண்காணிப்பதற்கான துணைத் திட்டம்

## 1. தரமான ஆராய்ச்சியினை ஊக்குவித்தல்

### 1.1. போட்டிக்குரிய ஆராய்ச்சி மானியத் திட்டம்

இத்திட்டமானது, விஞ்ஞானிகளுக்கு சொந்தமான நிறுவனங்களின் அடிப்படை மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு உறுதுணையாக இருப்பதன் மூலம் விஞ்ஞான ஆராய்ச்சிகளை முற்கொண்டு செல்வதற்கு உளதாயிருக்கின்ற நிதி, பௌதிக, மனித வளங்களிற்கு குறைநிரப்பீடு செய்தலிற்கு உதவியாக இருத்தல் வேண்டுமென்ற

நோக்கத்துடன் விஞ்ஞானிகளின் சுதந்திரம், தனிப்பட்ட அதிபுலமை செயற்றிறன் என்பனவற்றிற்கு உதவியாக இருப்பதுடன் விஞ்ஞானிகளுக்கு உயர் தரத்தில் ஆராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கு ஊக்குவிப்பதுடன் அவர்களை நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியை நோக்கியும் வழிப்படுத்துகிறது.

ஆராய்ச்சி மானிய விண்ணப்பங்களின் செயன்முறையானது, விண்ணப்பங்களின் இரண்டாவது அழைப்பின் போது ஒரு "வதிவு மதிப்பீட்டு" திட்டத்தை ஒழுங்கு செய்ததன் மூலம் விரைவுபடுத்தப்பட்டது. முதன் முறையாக தேசிய விஞ்ஞான மன்றத்தினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட இத்திறமுறையானது மிகவும் பயனுறுதி மிக்கது என நிரூபிக்கப்பட்டது. இது இரு நாட்களை கொண்டதொரு நிகழ்ச்சித்திட்டமாகும். இந்த இரு நாட்களில் முதல் நாளில், மீளாய்வாரள்களால் விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டது, அது போன்று நிதியீடு செய்வதற்கு உகந்த திட்டத்தை பரிந்துரைக்கும் பொருட்டு ஆராய்ச்சி குழுவின் கூட்டமானது இரண்டாவது நாள் இடம்பெற்றது.

இவ்வருட காலப்பகுதியில் மொத்தமாக 68 மானியங்கள் வழங்கப்பட்டன. இம்மானியங்கள் தொடர்பில் முதல் வருடம் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு 56.5 மில்லியன் ஆகும்.

2011 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மானிய திட்டங்களின் கீழ் சாதிக்கப்பட்டவைகள் வருமாறு:

| | |
|---|---|
| 2011.12.31 இல் உள்ளவாறாக நடைமுறையிலுள்ள மானியங்கள் | 145 |
| வழங்கப்பட்ட மானியங்கள் | 68 |
| பூரணப்படுத்தப்பட்ட மானியங்கள் | 37 |
| இடை நிறுத்தப்பட்ட மானியங்கள் | - |
| நியமனம் செய்யப்பட்ட RSகள்/ நியமிக்கப்பட வேண்டிய RSகள் | 10/34 |
| பட்டப்பின் பட்டத்திற்கு பதிவு செய்யப்பட்ட RSகள்/ பதிவு செய்யப்பட வேண்டடிய RSகள் | 03/31 |
| நியமனம் செய்யப்பட்ட TA கள்/ நியமிக்கப்பட வேண்டிய TA கள் | 10/21 |
| பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்பு | |
| • பி.எச்.டி | 03 |
| • எம்பில் | 05 |
| • எம்.எஸ்.சி | - |
| • எம்டி | - |
| மானியங்களிலிருந்தான பிரசுரிப்புகளின் எண்ணிக்கை (வெளியூர்) | 16 |
| மானியங்களிலிருந்தான பிரசுரிப்புகளின் எண்ணிக்கை (உள்ளூர்) | 08 |
| தொடர்பாடல் | 114 |
| நடந்த செயற்குழு கூட்டங்களின் எண்ணிக்கை | 40 |

### 1.2. ஆராய்ச்சி இணையுரிமை

இத்திட்டமானது, தேசிய அபிவிருத்தி, நாட்டின் தேவைப்பாடுகளுக்காக சிறந்த சிரேஸ்ட விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்களின் அறிவு, அநுபவம் மற்றும் நிபுணத்துவத்தை பயன்படுத்துவதற்கும் மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் ஆராய்ச்சி பெறுபேறுகளை பிரசுரிப்பதன் ஊடாக நாட்டில் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளை சர்வதேச மட்டத்திற்கு மேம்படுத்துவதற்கும் எனும் விடயங்களுக்கு உதவுகிறது.

ஆராய்ச்சி இணையுரிமை திட்டத்தின் பொழிப்பு வருமாறு:

| | |
|---|---|
| 2011 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட இணையுரிமைகளின் எண்ணிக்கை | 10 |
| 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட இணையுரிமைகளின் எண்ணிக்கை | 02 |
| 2011.12.31 இல உள்ளவாறு நடைமுறையிலிருக்கும் இணையுரிமைகளின் எண்ணிக்கை | 03 |
| 2011 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட இணையுரிமைகளின் எண்ணிக்கை | 01 |
| இன்று வரை பூரணப்படுத்தப்பட்ட இணையுரிமைகளின் எண்ணிக்கை | 07 |

### 1.3. ஆராய்ச்சி புலமைப்பரிசில்

இத்திட்டமானது, பட்டப்பின் பட்டத்திற்கு வழிநடாத்தக்கூடிய முழுநேர ஆராய்ச்சியினை நாட்டில் நடாத்துவதற்கு, மிகச்சிறந்த பெறுபேறுகளையுடைய விஞ்ஞான மற்றும் எந்திரவியல் பட்டதாரிகளுக்கு ஒரு வாய்ப்பினை வழங்குகிறது.

ஆராய்ச்சி புலமைப் பரிசில் திட்டத்தின் பொழிப்புரை வருமாறு:

| | |
|---|---|
| 2011.12.31 இல் உள்ளவாறு நடைமுறையிலிருக்கும் புலமைப்பரிசில்கள் | 04 |
| வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை | 01 |
| பூரணப்படுத்தப்பட்டு ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்ட புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை | 02 |

### 1.4. பின் கலாநிதிபட்ட ஆராய்ச்சி விஞ்ஞானி

இத்திட்டமானது, சிறந்த ஆராய்ச்சி பதிவுகளை உடைய விஞ்ஞானிகள் மற்றும் எந்திரவியலாளர்களுக்கும் மற்றும் சிறந்த ஆராய்ச்சி பெறுபேறுகளை உடைய கலாநிதி பட்டம் உடையவர்களுக்கும் நாட்டில் முழு நேர ஆராய்ச்சியினை முன்னெடுப்பதற்கு வாய்ப்பினை வழங்குகிறது. இவை தொடர்பில் இரண்டு விண்ணப்பங்கள் பெறப்பட்ட போதிலும் இரண்டில் எதுவுமே மானியங்களை பெற்றுக் கொள்ளுவதற்குரிய தகமைகளை உடையதாக இல்லை

### 1.5. கருவி மானியங்கள்

நவீன உள்ளகமைப்பு வசதிகளை கொண்ட ஆய்வு கூடங்களாவன ஆராய்ச்சிகளுக்கு அவசியமாகும் என்பதுடன் அவை, உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு தேவையான தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

இத்திட்டம் நிகழ்ச்சித்திட்டமானது ஆராய்ச்சிக்கு தேவையான அதிக விலை கூடிய கருவிகளை ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் கொள்வனவு செய்யும் போது அவ்விடயம் தொடர்பில் உதவி செய்தலை நோக்காக கொண்டுள்ளது. இது நீடித்து நிலைத்திருக்கக் கூடிய ஒரு ஆராய்ச்சி தன்மையினதான கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் ஆராய்ச்சி ஆய்வு கூடங்களின் உள்ளகமைப்பு விருத்திக்கும் உறுதுணையாகவும் உதவியாகவும் இருக்கின்றது. இவ்வருட காலப்பகுதியில் ரூபாய் 46.8 மில்லியன் செலவில் 31 மானியங்கள் வழங்கப்பட்டன.

### 1.6. உதிரிப்பாக மானியங்கள்

ஆராய்ச்சிக்கு தேவையான ஆராய்ச்சி கருவிகளை கொள்வனவு செய்தலானது நிதிப்பிரச்சனை காரணமாக ஒரு பெரிய பிரச்சனையாக இருப்பதினால் ஆராய்ச்சியாளர்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யவும் அவற்றினை திருத்தவும் மற்றும் பேணவும் ஆராய்ச்சியாளர்களுக்கு இயலச் செய்வதற்கு தேசிய விஞ்ஞான மன்றமானது ஆராய்ச்சி உதிரிப்பாக மானியத்திட்டத்தை தொடங்கியுள்ளது.

நாட்டின் சமூக பொருளியலிற்கு வழி நடத்துகின்ற ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு உளதாயிருக்கும் வசதிகளை இத்திட்டம் வலுப்படுத்துகிறது.
வருட காலப்பகுதியில் 1.75 மில்லியன் ரூபாய் செலவில் 06 மானியங்கள் வழங்கப்பட்டன

## 2. தேசிய கருப்பொருளுக்குரிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் (NTRP)

தேசிய கருப்பொருளுக்குரிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமானது, நாட்டின் தேசிய தேவைப்பாடுகளை விளிக்கும் நோக்குடன் பல்துணை கூட்டிணை ஆராய்ச்சிகளை மேம்படுத்துகிறது. இந்நிகழ்ச்சித்திட்டமானது தேசிய அபிவிருத்திக்கு பயன்படுத்தக்கூடியதும் அத்துடன் தேசிய தேவைப்பாடுகளில் தொடங்கி முடிவு உற்பத்தியினை உற்பத்தி செய்யப்படுதலில் நிறுத்தப்படும் ஆராய்ச்சிகளை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளது, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கருப்பொருட்கள் முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய பரப்பெல்லைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

**2.1. உணவுக்காப்பு** - இக்கருப்பொருள் தொடர்பிலான ஆய்வுக்கட்டுரை பூரணப்படுத்தப்பட்டதுடன் இவ்விடயம் தொடர்பிலான ஆராய்ச்சி இடைவெளிகள் முன்னினுரிமைகள் மற்றும் உணவுக்காப்பு தொடர்பிலான பிரச்சனைகள்/ சிக்கல்கள் என்பனவற்றை விளிப்பதற்கு வேறுபட்ட துறைகளின் கீழ் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றை இனம் காண்பதற்கு பங்குதாரருடன் ஒரு கூட்டம் இடம் பெற்றது. ஆதனைத் தொடர்ந்து 05 நிகழ்ச்சித் திட்டங்கள் இனங்காணப்பட்டன. ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் விரிவான நிகழ்ச்சித் திட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதுடன், செயற்படுத்துகை திற முறையும் விருத்தி செய்யப்பட்டது.







**2.2. நீர்க்காப்பு** – நீர் ஆராய்ச்சி பற்றிய தேசிய முன்னரங்கில் இனங்காணப்பட்ட இடைவெளிகள் மற்றும் முன்னுரிமைகளை அடிப்படையாக கொண்டு கருப்பொருளுக்குரிய ஆய்வுக் கட்டுரையான விருத்தி செய்யப்பட்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. நீர்காப்புடன் தொடர்புடைய பிரச்சனைகள் மற்றும் சிக்கல்களை விளிப்பதற்கு ஏழு (07) நிகழ்ச்சித் திட்டங்கள் இனங்காணப்பட்டன.

**2.3. காலநிலை மாற்றம்** - ஆராய்ச்சி இடைவெளிகள் மற்றும் முன்னுரிமைகளை இனங்காண்பதற்கு நிபுணத்துவ குழுக்களுடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இடம் பெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் கருப்பொருளுக்குரிய ஆய்வுக் கட்டுரை விருத்தி செய்யப்பட்டது. காலநிலையுடன் தொடர்புடைய பிரச்சனைகளை விளிப்பதற்கு எட்டு (08) நிகழ்ச்சித் திட்டங்கள் இனம் காணப்பட்டன.




## 3. கூட்டிணைக்கப்பட்ட கருப்பொருளுக்குரிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் (CTRP)

பல் துறைகளை உள்ளடக்கிய கருப்பொருளுக்குரிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டமானது தேசிய விஞ்ஞான மன்றத்தினால், நாட்டின் சமூக பொருளியல் அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிப்பு செய்யக் கூடிய வகையில் நன்கு வரையறை செய்யப்பட்ட விளைவுகளை உற்பத்தி செய்தல் எனும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

06 கருப்பொருளின் கீழ் 24 மானியங்கள் வழங்கப்பட்டன. 2011 ஆம் ஆண்டின் இறுதியில் தேசிய விஞ்ஞான மன்றமானது 18 இறுதி கட்ட அறிக்கைகளை பெற்றுக் கொண்டது. இந்த அறிக்கையின் பெறுபேறுகளாவன, தொடர்புடைய நிறுவனங்களுக்கு செயற்படுத்துகையின் நிமித்தம் தேவையான ஏற்பாடுகளை செய்தலிற்காக கூறப்பட்டது.

மேற் கூறப்பட்ட திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சியை அடிப்படையாக கொண்டு ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது:

**அட்டவணை 1: CTRP யின் ஒவ்வொரு கருப்பொருளுக்கும் கீழ் அடங்கும் ஆராய்ச்சிகளின் முன்னேற்றம்**

| கருப்பொருள் | இறுதி அறிக்கை தரப்பட வேண்டியவைகள் | பூரணப் படுத்தப்பட்டவை | கைவிடப்பட்டது / இரத்து செய்யப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|
| தன்னில் சார்ந்திருத்தலிற்கான மாற்று விவசாயம் (AASR) | | 3 | 1 | 4 |
| தேசிய வளங்களின் தொடர்ச்சியான பாவனை (SUNR) | 1 | 1 | | 2 |
| சூழலியல் பாதுகாப்பும் தொடர்ச்சியான அபிவிருத்தியும் (EPSD) | 2 | 2 | | 4 |
| **கருப்பொருள்** | **இறுதி அறிக்கை தரப்பட வேண்டியவைகள்** | **பூரணப்படுத்தப்பட்டவை** | **கைவிடப்பட்டது / இரத்து செய்யப்பட்டது** | **மொத்தம்** |
| தொற்றல்லாத நோய் (NCD) | | 2 | | 2 |
| அனர்த்த முகாமைத்துவமும் தணிப்பும் (DMM) | 1 | 8 | | 9 |
| கிராமியத்துறை அபிவிருத்திக்கான தொழில்நுட்பங்கள் (TFRD) | | 2 | 1 | 3 |
| **மொத்தம்** | **4** | **18** | **2** | **24** |

## 4. SUSRED நிகழ்ச்சித் திட்டம்

ஆராய்ச்சி பட்டங்களின் கண்காணிப்பிற்கான உறுதுணை திட்டமானது (**SUSRED**), பட்டப்பின் ஆராய்ச்சி பட்டங்களை (எம்பில் மற்றும் பிஎச்டி) பெற்றுக் கொள்வதற்காக விஞ்ஞான தொழில்நுட்ப பரப்பெல்லைகளில் மாணவர்களினால் மேற் கொள்ளப்படும் ஆய்வுகளினை கண்காணிப்பதில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் மற்றும் எந்திரவியலாளர்களை ஊக்கப்படுத்துவதற்கு, உறுதுணை செய்வதற்கு மற்றும் அங்கீகரிப்பதற்கு தேசிய விஞ்ஞான

மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்டதாகும். மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டதுடன் ஏற்புடைய விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டன.

| | |
|---|---|
| பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | - 24 |
| 2011 ஆம் ஆண்டில் செயன் முறையாக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் | -14 |
| விருதுக்கு தகமையுடைய விண்ணப்பங்கள் | - 05 (எம்பில்) |
| விருதுக்கு தகமையுடைய விண்ணப்பங்கள் | - 04 (பிஎச்டி) |

## 5. நோய்க்குரிய காரணி நிச்சயமற்றதாய் இருக்கும் குரோனிக் சிறுநீரக நோய் (CKDu)

இலங்கையில் பல பாகங்களில் ஏற்பட்டுள்ள புதிய வடிவமான குரோனிக் சிறுநீரக நோய்க்குரிய காரணியினை கண்டறிவதற்கான புது முயற்சி ஒன்று ஆராம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எனக் குறிப்பிடும் பொழுது விசேடமாக வட மத்திய பிராந்தியத்தில் 20 வயதிற்கும் குறைந்தவர்களிடத்தும் கூட படிப்படியாக ஏற்பட்டுள்ள இந்நோய்க்கு ஒரு நிரந்தர தீர்வினை காணுதல் தொடர்பிலான ஆய்வானது 2011 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டது. பௌதிக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றங்கள் கண்காணிக்கப்பட்டு இவை தொடர்பிலான அறிக்கை 2012 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 6. விசேட நடவடிக்கைகள்

ஆராய்ச்சி மானியங்களினை நிர்வாகம் செய்தல் எனும் பணியை விட மேலதிகமாக, தேசிய உயிர் தொழில்நுட்ப கொள்கையை அமுல்படுத்த ஒரு யாப்பினை விருத்தி செய்தல், நடப்பு ஆராய்ச்சி மானியங்கள் பற்றிய ஒரு தரவுத்தளத்தை விருத்தி செய்தல், தேசிய விஞ்ஞான மன்றத்தின் தேசிய செயற்குழுவின் மற்றும் ஆராய்ச்சி குழுக்களின் செய்றபாட்டிற்கு ஏற்பாடுகளை செய்தல்

மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் தேசிய செயற்குழுவிற்கு தரவுத்தளத்தை விருத்தி செய்தல் ஆகியவை உள்ளடங்கலாக பல விசேட பணிகள் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நிறைவேற்றம் செய்யப்பட்டது.

### 6.1. பிரசுரிப்புகள்

2011 ஆம் ஆண்டில் கீழ் வரும் பிரசுரிப்புகள் பிரசுரிக்கப்பட்டன:

இலங்கை சமூக விஞ்ஞான சஞ்சிகை.(SLSS)

இலங்கை சமூக விஞ்ஞான சஞ்சிகையின் தொகுதி 31/31 இலக்கம் 1 மற்றும் 3.

## 7. பயிற்சிப் பட்டறைகள் / கருத்தரங்குகள்

பிரதான பயிற்சிப் பட்டறைகளுடன் கீழ் குறிப்பிடப்பட்ட பயிற்சிப் பட்டறைகளும் வருட காலப்பகுதியில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டன.

**அ) கருத்திட்ட பிரேரணைகளை எழுதுதல் பற்றிய பயிற்சிப் பட்டறை**

2011 ஆம் ஆண்டின் பெப்ரவரி மற்றும் ஒக்டோபர் மாதத்தில் போட்டிக்குரிய ஆராய்ச்சி மானிய திட்டங்களுக்கான விண்ணப்பங்களுக்கு அழைப்புகள் மேற் கொள்ளப்பட்ட அதே வேளையில் அதற்கு இணைவாக "பயனுறுதி மிகு பிரேரணைகளை எழுதுதல்" எனும் தலைப்பில் இரு பயிற்சிப் பட்டறைகளும் இடம் பெற்றன இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கானது தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு கருத்திட்ட பிரேரணைகளை சமர்ப்பிக்கும் போது, அக்கருத்திட்ட மானியத்திற்கு உரிய மானியத்தை பெற வேண்டுமாயின் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்ட பிரேரணை உயர்ந்த தரத்தை உடையதாக இருத்தல் வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஆகும்.

**ஆ) உணவு காப்பு பற்றிய கூட்டிணை பயிற்சிப் பட்டறையில் இடைவெளிகளும் - முன்னுரிமை கருத்திட்டங்களும்**

"உணவுப் காப்பு பற்றிய பயிற்சிப் பட்டறையில் கூட்டிணைதல் ஆராய்ச்சி மானியங்களும் முன்னுரிமை கருத்திட்டங்களும்" எனும் தலைப்பிலான இரு நாள் பயிற்சிப் பட்டறையானது 2011.06 மாதம் 21 – 22 ஆம் திகதிகளில் கலதாரி ஹோட்டலில் இடம் பெற்றது. இப்பயிற்சிப்பட்டறையின் குறிக்கோளானது உணவுக் காப்புடன் தொடர்புற்ற ஆராய்ச்சியின் இடைவெளிகளும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பரப்பெல்லைகளை இனம் காணுதலும் மற்றும் தேசிய கருப்பொருளுக்குரிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் அகப்பாட்டெல்லைக்குள் உணவுக்காப்பு எனும் கருப்பொருளின் கீழ் விளிக்கப்பட வெண்டிய முக்கிய ஆராய்ச்சி கருத்திட்டங்களை இனம் காணுதலும் ஆகும். போஷணை, பாதுகாப்பும் தரமும், பழுதாக்குதல், உற்பத்தி, சமூக காரணிகள் போன்ற உணவுக் காப்பின் வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் சிறப்பு விருந்தினர் உரையாற்றினார்.

**இ) ஒழுங்கு படுத்துனர்கள்/ விஞ்ஞானிகளுக்கான உயிர்தொழில்நுட்ப மாநாடு – From green revolution to gene revolution.**

அமெரிக்கா தூதரலயம் மற்றும் ஜீன்டெக் உடன் கூட்டிணைந்து, செப்டெம்பர் மாதம் 29 – 30 ஆம் திகதிகளில் இந்த மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டது.

**ஈ) காலநிலை மாற்ற யுகத்தில் தொடர்ச்சியான உணவுக் காப்பு பற்றிய விரிவுரை**

மேற் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் பேராசிரியர் எம்.எஸ். ஸ்வாமிநாதனால் செம்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி விரிவுரை ஆற்றப்பட்டது.

**உ) கலாநிதி. மல் ராங் இனால் நடாத்தப்பட்ட நடத்தப்பட்ட விரிவுரை**

கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் சுகாதார அமைச்சுடன் கூட்டிணைந்து பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள தேசிய சுகாதார நிறுவகத்தில் உலக சுகாதாரத்தில் ஆராய்ச்சி வாய்ப்புகள் எனும் தலைப்பு பற்றி ஒவ்வாமை மற்றும் தொற்று நோய்களுக்கான தேசிய நிறுவகத்தை சேர்ந்த கலாநிதி. மாலா ராவ் மற்றும் யானைக்கால் நோயை முற்றாக ஒழித்தலில் பற்றியா உலகளாவிய முயற்சி பற்றி வாஷிங்டன் பல்கலைக்கழக மருத்துவ பள்ளியினை சேர்ந்த கலாநிதி கரி வெய்ல் உரையாற்றினார்

## 8. ஆராய்ச்சி பிரிவினால் துணைமை செய்யப்பட்ட செயற்குழுக்கள்

தேசிய செயற்குழு

* ஆராய்ச்சி அபிவிருத்தியில் தேசிய செயற்குழு
* எம்.எ.பி நிகழ்ச்சித் திட்டம் பற்றிய தேசிய செயற்குழ
* சமுத்திரம் மற்றும் கடல் விஞ்ஞானம் பற்றிய தேசிய செயற்குழு
* கனிய வளங்களின் தொடர்ச்சியான பாவனை பற்றிய தேசிய செயற்குழு

ஆராய்ச்சிக் குழுக்கள்

* விவசாயம் மற்றும் உணவு விஞ்ஞானத்தில் ஆராய்ச்சிக் குழு
* அடிப்படை விஞ்ஞானத்தில் ஆராய்ச்சி குழு
* உயிர் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி குழு
* கணணி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி குழு
* எந்திரவியல் விஞ்ஞானம் மற்றும் கட்டிடக் கலையில் ஆராய்ச்சி குழு
* சூழலியல் விஞ்ஞானத்தில் ஆராய்ச்சி குழு
* சுகாதார விஞ்ஞானத்தில் ஆராய்ச்சி குழு
* நீரியலில் ஆராய்ச்சி குழு
* நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் ஆராய்ச்சி குழு
* நெநோ தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி குழு
* தேசிய வளங்கள் மற்றும் உயிர் பல்வகைமையில் ஆராய்ச்சி குழு
* விஞ்ஞான கல்வியில் ஆராய்ச்சி குழு
* சமூக விஞ்ஞானத்தில் ஆராய்ச்சி குழு
* விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை ஆய்வில் ஆராய்ச்சி குழு

விசேட செயற்குழுக்கள்

* ஆராய்ச்சிப் பிரிவுக்கு ஆலோசனை குழு.

## தொழில்நுட்பவியல் பிரிவு (TD)

பொது மக்களின் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக உள்நாட்டு தொழிற்றுரையாளரால் மேற்கொள்ளப்படும் வியாபார முயற்சிகளாவன விஞ்ஞான தொழில்நுட்பத்தை சம்பந்தப்படுத்தி தொடங்கப்படும் கருத்திட்டங்கள், ஏற்கனவே இருக்கும் ஒரு உற்பத்தியை மேலும் முன்னேற்றுதல், அபிவிருத்திக் கிரயத்தை குறைப்பதற்கான செயன்முறைகள் மற்றும் வியாபார மாதிரிகளில் நிதியீடு செய்தல் என்பன தொழில்நுட்ப மானியத்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

### 1. தொழில்நுட்ப மானியங்கள்

தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் என்பவற்றை மேம்படுத்தும் பணியைச் செய்யும் இந்த இரு மானியத் திட்டங்கள், போட்டிற்குரிய ஆராய்ச்சி மானியத் திட்டங்களின் விளை பொருட்களை வர்த்தக மயப்படுத்துதலையும் மேம்படுத்துகிறது.

1. தொழில்நுட்ப அபிவிருத்திக்கு துணைமையாக இருத்தல் (Tech – D)
2. புதிய தொழில்நுட்பங்களை அடிப்படையாக கொண்ட தொடக்க வியாபாரங்களுக்கு துணைமையாக இருத்தல் (Start Ups)

2011 ஆம் ஆண்டில் விளம்பரம் செய்யப்பட்ட தொழில்நுட்ப மானியங்களுக்கு 27 விண்ணப்பங்கள் (தொழில்நுட்ப அபிவிருத்திக்கு துணைமையாக இருத்தலிற்கு – 19, புதிய தொழில்நுட்பங்களை அடிப்படையாக கொண்ட வியாபாரங்களுக்கு 07) பெறப்பட்டன. அவற்றுள் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு துணைமையாக இருத்தல் தொடர்பில் 05 மானியங்களும், புதிய தொழில்நுட்பங்களை அடிப்படையாக கொண்ட தொடக்க வியாபாரங்களுக்கு துணைமையாக இருத்தல் தொடர்பில் 01 மானியமும் வழங்கப்பட்டது.

### 2. ஆராய்ச்சி மானியங்கள்

#### 2.1. நெநோ தொழில்நுட்பம்

நெநோ தொழில்நுட்பத்தில் நடைமுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மானியங்கள் 03 ஆகும். அத்துடன் மூல கருத்திட்ட பிரேரணைக்கமைவுற மைல்கல்லை சாதிப்பதற்கு இவ்வருட காலப்பகுதியில் ஆராய்ச்சி கருத்திட்டங்களாவன கண்காணிக்கப்பட்டன.

2011, டிசம்பர் மாதம் மூன்று புதிய மானியங்கள் வழங்கப்பட்டன.

#### 2.2. உயிர் எரிபொருள் பற்றிய கருப் பொருளுக்குரிய செயற்குழு

மூல கருத்திட்ட பிரேரணைகளுக்கு அமைவுற மைக்கல்லை சாதிப்பதற்கு இவ் வருடகாலப்பகுதியில் உயிர் எரிபொருள் பற்றிய இரு நடப்பு மானியங்கள் வழங்கப்பட்டதுடன் ஆராய்ச்சி மானியங்களும் வளர்ச்சியும் கண்காணிக்கப்பட்டது.

## 3. தேசிய நெநோ தொழில்நுட்ப புது முயற்சி

### 3.1. நெநோ தொழில்நுட்ப கொள்கை

வெளிப்படையான மற்றும் பாராபட்சம் அற்ற செயற்பாட்டினை நிச்சயம் செய்து கொள்வதற்காக கொள்கை உருவாக்களின் சாரமாவது, தொடர்புடைய தீர்வுகளை கொண்டு வருதல்; மற்றும் தரப்பட்ட ஒரு துறையுடன் தொடர்புடைய செயற்பாட்டை வரையறுக்கும் காரணி என்பன நம்பிக்கையை கட்டியெழுப்பவதில் முக்கிய பங்கினை வகிப்பவை. என்பதுடன் தொடர்புடைய விஞ்ஞானத்துறையின் செயற்பாட்டை பயனுறுதி உடனும் வினைத்திறமையுடனும் நடாத்தப்படுவதற்கு தேவையான வழிகாட்டல்கள் நெநோ தொழில்நுட்ப ஒரு கொள்கையை வரைவு செய்வதன் மூலம் இத்தேவைப்பாட்டை பூரண நிறைவேற்றம் செய்ய தேசிய விஞ்ஞான மன்றம் முயற்சி எடுக்கின்றது.

### 3.2. விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

பொருளியலாளர்கள் மற்றும் வங்கி முறை தொழில் சார்பியலாளருக்காக நெநோ தொழில்நுட்ப விழிப்புணர்ச்சி பருவக் கூட்டத் தொடரானது, 2011 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி வங்கிக் கற்கைகளுக்கான நிலையத்தில் இடம் பெற்றது.

### 3.3. "இலங்கையில் நெநோ தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்காக ஒரு ஒழுங்கு விதி சட்டகத்தை விருத்தி செய்தல்" பற்றிய IDRC கருத்திட்டம்

கருத்திட்ட தொடக்க கூட்டமானது மார்ச் மாதம் 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் தேசிய விஞ்ஞான மன்றத்தில் TERI/ இந்தியா, நெநோ விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பிரெஸ்டன் நிறுவகம்/ பாகிஸ்தான், IDRC, இலங்கை பங்காளர் நிறுவனங்கள் ஆகியோரின் பங்களிப்புடன் இடம் பெற்ற இக் கூட்டத்தில், புரிந்துணர்வு உடன்படிக்கையினை தயாரித்தலும் பங்குடமை நிறுவனங்களுடன் அவற்றை கைச்சாத்திடலும் தொடர்பிலான பணிகள் பூரணப்படுத்தப்பட்டன. IDRC மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு இடையில் மானிய நிபந்தனை பற்றிய விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டது. ஒவ்வொரு பங்குடமை நிறுவனங்களிற்கு கீழும் அடங்குகின்ற பிரேரணைகள், குறித்துரைப்புகளுடன் பெறப்பட்டன. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் நிதியத்தின் முதல் தவணைக்கட்டண பணமானது வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் வளர்ச்சியினை மீளாய்வு செய்தல் பொருட்டு, கருத்திட்ட தலைவர்கள் மற்றும் பங்குடமை நிறுவனங்களுடன் தொடர்ச்சியான இடைவெளிகளில் கூட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன செயல்திட்டத்திற்கு அமைவுற செயற்பாடுகளாவன நடந்துக் கொண்டிருக்கின்றன.

## 4. தொழில்நுட்பவியல் முன்னறிவு

### 4.1. முன்னறிவு பகுப்பாய்வு பற்றிய பயிற்சிப் பட்டறை

"தொழில்நுட்பவியல் முன்னறிவு" பற்றிய பயிற்ச்சிப் பட்டறையானது, 2011, ஒக்டோபர் மாதம் 27 – 29 ஆம் திகதி வரை தேசிய விஞ்ஞான மன்ற கேட்போர் கூடத்தில் விஞ்ஞானிகள், எந்திரவியலாளர்கள், வைத்தியர்கள், கைத்தொழிற்துறையாளர்கள் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான அலுவலர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் இடம் பெற்றது.

இக்குறிக்கோளாவன:

1. தேசிய திட்டமிடல் செயன்முறையில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னுரிமையை ஸ்தாபித்தலும் தொழில்நுட்பவியல் முன்னறிவின் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை உள்ளூர் விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியல் சமூகத்தினர், கொள்கை அமைப்பாளர்கள் மற்றும் ஏனைய அரச அலுவலர்களுக்கு தெரியச் செய்தலும் ஆகும்.
2. முன்னறிவு தொழில்நுட்பங்கள் பற்றிய ஆழமான பயிற்சியை ஆராய்ச்சியாளர்கள் கல்வியலாளர்கள் மற்றும் கைத்தொழிற்துறையாளர்கள் ஆகியோருக்கு வழங்கலும் ஆராய்ச்சி முன்னுரிமைகள் மற்றும் திறமுறை அபிவிருத்திக்கு முன்னுரிமை பெறுபேறுகளை விண்ணப்பித்தலும்.
3. அபிவிருத்தி செய்முறையில் தேசிய புத்தாக்க முறைமையில் பங்கு பெறுவோரின் பங்களிப்பினை மேம்படுத்தலும் அப்பங்கு பெறுவோரின் இடையே தொடர்பிணைப்பை வலுப்படுத்துலும்.

வெளிநாட்டினைச் சேர்ந்த வள ஆளணியினரான கலாநிதி. ஒஸ்கன் சரிட்டஸ் மற்றும் திருமதி. எல்க்டால் ஆகியோரினால் பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது. வேறுபட்ட நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட 75 விண்ணப்பங்களுள் 26 பங்கு பெறுநர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பங்கு பெறுநர்கள் மூன்று குழுக்களாக செயற்பட்டதுடன் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படுவதற்கு மூன்று முன்னறிவு பயிற்சிகள் பிரேரணை செய்யப்பட்டதுடன் இதன் பின் தொடர் செயற்பாடாக மூன்று கருப்பொருள்சார் மாதிரி வரைவுகள் விருத்தி செய்யப்பட்டது. விஞ்ஞானிகள் மற்றும் வேறுபட்ட நிறுவனங்களின் பங்குடமையுடன் கூடிய குழுவினருடன் தேசிய முன்னறிவு செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒரு சிறந்த அடித்தளமிடப்பட்டது.

- அடுத்து வரும் 15 வருடங்களில் தொற்று நோய்கள் தொடர்பில் காலநிலை மாற்றங்களும் அதன் பாதிப்பும்
- 2020 ஆம் ஆண்டில் தென் ஆசியாவின் ஆராய்ச்சி மையமாக இருத்தல்
- 2025 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் சக்தி நுகர்வில் 25% இனை ஈடுகொடுக்கும் வகையில் நெநோ சூரிய கல விருத்தியின் அபிவிருத்தி.

## 5. அதிபுலமைச் சொத்து (IP) விழிப்புணர்ச்சி மற்றும் பாதுகாப்பு பற்றிய கருத்திட்டத்தின் செயற்படுத்துகை.

### 5.1. NIPO வுடனான கூட்டிணைவுடன், அதிபுலமைச் சொத்திற்கு துணைமை தரும் கருத்திட்டத்தை மையமாக கொண்ட விதாதா நிலையங்களின் செயற்படுத்துகை

புத்தாக்குனர்கள் மற்றும் அதிபுலமைச் சொத்து ஆக்குனர்கள் ஆகியோருக்கு, அவர்களது உரிமைகளை, செயன்முறைக்கு உதவி செய்வதற்காக நிலையங்களை தாபிப்பதன் மூலம் பெற்றுக் கொள்வதில், பாதுகாப்பதில் மற்றும் முகாமைத்துவம் செய்தலில் உதவி செய்யும் நோக்குடன், “ அதிபுலமைச் சொத்திற்கு துணைமை தரும் கருத்திட்டத்தை மையமாக கொண்ட விதாதா நிலையங்களின் செயற்படுத்துகை (IPFCs) எனும் தலைப்பிலான ஒரு பிரேரணையானது தயாரிக்கப்பட்டது. இச் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு

பிரதேச செயலகத்திலும் தாபிக்கப்பட்டுள்ள விதாதா வள நிலையங்களாவன அதிபுலமைச் சொத்திற்கு துணைமை செய்யும் நிறுவனமாக பிரேரிக்கப்பட்டன.

கைத்தொழிற்துறை வர்த்தக அமைச்சு, இலங்கை தேசிய அதிபுலமைச் சொத்து அலுவலகம் இது (NIPO), தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சு மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் என்பவற்றிக்கு இடையிலான ஒரு கூட்டிணை கருத்திட்டமாகும் இக்கருத்திட்டமானது இலங்கை தேசிய அதிபுலமைச் சொத்து அலுவலகத்தினால் நிதியீடு செய்யப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படும் வகையில் 03 கட்டங்களை உள்ளடக்கிய செயல்திட்டம் விருத்தி செய்யப்பட்டது.

கருத்திட்டமானது 03 கட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

கட்டம் 1: மாகாண மட்டத்தில் அதி புலமைச் சொத்திற்கு துணைமை செய்யும் நிலயங்களினை தாபித்தல் (2012 இல் முன்னோடி கருத்திட்டம் 2 நிலையங்கள்)
கட்டம் 2: ஏனைய மாகாணங்களின் நிலையங்களை தாபித்தல்
கட்டம் 3: பிரதேச மட்டத்தில் நிலையங்களை தாபித்தல்

முன்னோடி கருத்திட்டங்களை ஆரம்பிக்கும் கருத்தரங்கானது, 2011 டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி இலங்கை மன்றத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சித் திட்டமானது தேசிய அதிபுலமைச் சொத்து அலுவலகத்தின் கூட்டிணைவுடன் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.

இக்கருத்தரங்கானது ஒன்பது மாகாணங்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 115 விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது. விதாதா வள நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர்களுக்கு IPFCs பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் இடம் பெற்றது.

NIPO வினை சேர்ந்த அதிகாரிகள் வள ஆளணியினராக சேவையாற்றினார்

## 5.2. NIPO மற்றும் WIPO வுடன் கூட்டிணைந்து IP கணக்காய்வு கருத்திட்டம்

பின் தொடர் நடவடிக்கையில் அதி புலமைச் சொத்து தாபிப்பு பற்றிய கருப்பொருள் ஆய்வுக் கட்டுரை வரையப்பட்டது.

## 5.3. பல்கலைக்கழகங்களில் அதி புலமைச் சொத்துக் கல்வி (தற்பொழுது உளதாயிருக்கும் கருத்திட்டத்தை தொடருதல்) கட்டம் 2 (ஏனைய வசதிகள்)

பள்ளிக் கூடங்கள் மற்றும் பல்கலைக்கழக கல்வித் திட்டங்களில் அதிபுலமைச் சொத்தினை ஒரு கல்வியாக அறிமுகப்படுத்துவதற்கான பிரேரணைக்கு அமைவுற, கருத்திட்டத்தின் கூறானது தயாரிக்கப்பட்டு பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான மற்றும் விஞ்ஞானத்துடன் தொடர்புடைய பீடங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானம் அல்லாத பீடங்களுக்கு இரண்டாவது கட்டத்தை செயற்படுத்துகை செய்யும் முன்னர் கட்டம் 1 இன் முன்னேற்ற மீளாய்வு முன்னெடுக்கப்பட்டது.

## 5.4. காப்புரிமை விண்ணப்பங்கள்/காப்புரிமை தகவல் தேடல் என்பனவற்றை வரைவு செய்யவும் மற்றும் கோப்பிடவும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்

காப்புரிமை விண்ணப்பங்களை உள்ளூரிலும் மற்றும் காப்புரிமை கூட்டுத்தாபன உடன்படிக்கையின் (PCT) கீழும் கோப்பிலிடுவதற்கு புத்தாக்குனர்களுக்கு தேசிய விஞ்ஞான மன்றம் உறுதுணையாக இருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் திரு. பிரசாத் பீரிஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். ஜயதிலக, திரு. ஹர்ஷா குமார காலகே மற்றும் திரு. ஜெ.ஐ. உதயான் கொட ஆகியோருக்கு PCT விண்ணப்பங்களை வரைவு செய்தலிலும் கோப்பிடுவதிலும் பிரிவு உதவியாக இருந்ததுடன் உடுநுவர விதாதா வள நிலையத்தின் கோரிக்கைக்கு இணங்க இரு காப்புரிமை விண்ணப்பங்களை வரைவு செய்வதிலும் உசாவுத்துணையை வழங்கியது.

தேங்காய் பறித்தல் மற்றும் மரம் ஏறும் உபகரணங்களுக்கு காப்புரிமை தேடல்கள் செய்யப்பட்டதுடன் காப்புரிமை பெறுபேறுகளாவன, திரு.ஹர்ஷா குமார காலகேயிற்கு கொடுக்கப்பட்டது. மற்றும் தேங்காயின் வெளிப்புற மட்டையை உரிக்கும் இயந்திரம், சக்தி பிறப்பிக்கும் பம்புகள் பாதுகாப்பாக, இறுக பயன்படும் மெழுகு இயந்திரம் என்பவை தொடர்பிலான காப்புரிமை தேடல் பெறுபேறுகளாவன ஏனைய நான்கு புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்டது.

தனது PCT விண்ணப்பத்தை தேசிய விஞ்ஞான மன்றத்தின் உதவியுடன் கோப்பிலிட்ட புத்தாக்குனரான திரு. டி.எஸ்.எஸ். கோமஸ் அவ்விடயம் தொடர்பில் சர்வதேச ஆராய்ச்சி அறிக்கையையும் எழுத்திலான அபிப்பிராயத்தையும் பெற்றுக் கொண்டனர். அவர் 2010 ஆம் ஆண்டு தேசிய விஞ்ஞான மன்றத்திடமிருந்து தொழில்நுட்ப உதவியை பெற்றுக் கொண்டவர், காப்புரிமை பெறுவதற்குரிய தகமையை அவர் PCT விண்ணப்பம் (PCT/IB 2010/052604) உடையதாக இருந்தது. ஆதலினால் தேசிய மட்டத்தில் அவத்தையில் பதிவு செய்வதற்கு அவருக்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட்டன.

## 5.5. PCT கோப்பிடலை தொடரறா சேவையில் மேற்கொள்வதற்கும் மற்றும் காப்புரிமை தகவல்களை தேடுவதற்கும் துணைமை செய்யும் ஒரு காப்புரிமை உதவி மேசையை தாபித்தல்

PCT - SAFE மென் பொருளின் ஊடாக மின்னணுவியல் ரீதியாக கீழ் குறிப்பிடப்பட்ட இரு PCT விண்ணப்பங்களை கோப்பிடல்

1. திரு. பிரசாத் பீரிஸ் என்பவரின் (விண்ணப்ப .இல. PCT/IB/2011/051356) Visualization Shopping Portal
2. திரு. ஹர்ஷா குமார காலகே என்பவரின் (விண்ணப்ப இலக்கம் PCT/IB/2011/051395 ) மரம் ஏறுபவர்களுக்காக பாதுகாப்பாக மரம் ஏறும் உபகரணம்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் இணையத்தளத்தின் ஊடாக காப்புரிமை உதவி மேசை தாபிக்கப்பட்டதுடன் காப்புரிமை தரவுத்தளத்தின் ஊடாக புத்தாக்குனர்களுக்கு தேடல்களை மேற்கொள்ளவும் PCT விண்ணப்பங்களை தொடறரா சேவையில் பதிவு செய்யவும் இது உதவியாக இருக்கும்.

### 5.6. காப்புரிமை புதுப்பித்தல் மற்றும் காப்புரிமை வரைவு என்பனவற்றிக்கு நிதி உறுதுணை

பேராசிரியர். வேர்ஜஜ கருணாரட்னவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க "Novel alpha glucosidase inhibitors from lichens" என்பதற்கு US$ 2000 பெறுமதியான அமெரிக்கக் காப்புரிமையை செலுத்துவுதற்கு பேராதெனிய பல்கலைக்கழகத்திற்கு தேசிய விஞ்ஞான மன்றம் நிதியுதவியை வழங்கியது.

## 6. தேசிய விஞ்ஞான மன்றத்தின் பூரணப்படுத்தப்பட்ட சகல கருத்திட்டங்களை பின் தொடரலும் கருத்திட்ட பெறுபேறுகளை பரப்புதலும்

### 6.1. 2010 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆராய்ச்சி

மானியங்கள் தொடர்பில் 41 இறுதி அறிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டதுடன் இவை தொழில்நுட்ப பிரிவினால் பின் தொடரப்பட்டது. பூரணப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மானியங்களின் விளைப்பயன்கள் கீழ் வருமாறு வகைப்படுத்தப்பட்டன.

1. பிரசுரிப்புகள் மாத்திரம் - 22 மானியங்கள்
2. மேற்போந்த ஆராய்ச்சி பரப்பெல்லைகளை மானியம் பெறுநர் இனம் கண்டுள்ளார்
3. காப்புரிமை பெற்றுக் கொள்ளப்பட்ட மானியங்கள் - 02 மானியம்
4. அதிபுலமைச் சொத்து பாதுகாப்பினை பெற்றுக் கொள்வதற்கான செயலூட்டம் - 02 மானியங்கள்
5. மூலவகை மாதிரி/உற்பத்தி அபிவிருத்தி/ கருத்திட்டத்தின் அளவினை அதிகரித்தல் பற்றிய பின் தொடரல் - 06 மானியங்கள்
6. அதி புலமைச் சொத்து/ உற்பத்தியினை வர்த்தகமயப்படுத்துவதற்கான சாத்தியங்கள் - 02 மானியங்கள்
7. சோதனை வசதியை/ சேவையை வழங்கல் - 01 மானியம்

பிரிவானது 9 மானியங்களுக்கும் பின் தொடர் திறமுறைகளை அமைத்தது.

### 6.2. தொழில்நுட்பவியல் தரவு வங்கி

வர்த்தக மற்றும் கைத்தொழிற்துறையுடன் தொடர்புடைய கண்காட்சிகளிலிருந்து (Pro Food Propack, Construct 2011) பெறப்பட்ட புதிய தகவல்களிலிருந்து தரவு வங்கியானது இற்றைப்படுத்தப்பட்டது. தரவுத்தளமானது கிட்டத்தட்ட 5000 கம்பனிகள் பற்றிய விபரங்களை உள்ளடக்கியுள்ளது.

### 6.3. “டெக் வொச் லங்கா” மின்னணுவியல் - செய்தி மடல்

“டெக் வொச் லங்கா” மின்னணுவியல் - செய்தி மடலின் வெளியீடானது ஜுன் மற்றும் டிசம்பர் மாதத்தில் பிரசுரிக்கப்பட்டது. மின் - செய்தி மடலானது, உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், மருத்துவமும் மருந்தகவியலும், உயிர் தொழில்நுட்பம், நெநோ தொழில்நுட்பம் விரய முகாமைத்துவ தொழில்நுட்பம், நிர்மாண தொழில்நுட்பம் மற்றும் உயிர் திரவியங்கள் பற்றிய விடயங்கள் தொடர்பிலான ஆக்கங்களை உள்ளடக்கும்.

## 7. அறிவினை அடிப்படையாக கொண்ட அபிவிருத்தி

### 7.1. இலங்கை தேசிய புத்தாக்க அளவளாய்வு (SLINS 1) 2010 இலிருந்து தொடரப்படுகிறது.

வருட இறுதிக்குள் 42 நிறுவனங்கள் கேள்வி கொத்துகளுக்கு (Q2) பதிலளித்துள்ளார்கள் என்பதுடன் தரவுத்தளமானது இற்றைப்படுத்தப்பட்டது. அளவளாய்வானது, நடைப் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

### 7.2. உள்ளூர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களிடமிருந்து காப்புரிமை பங்கு மற்றும் தொழில்நுட்ப மாற்றீடு பற்றிய ஆய்வு

ஒரு கேள்வி கொத்து தயாரிக்கப்பட்டு ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களில் உள்ள 33 புத்தாக்குனர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் அதில் 21 பேரிடமிருந்து புதிவும் பெறப்பட்டது.

## 8. ஏனைய நடவடிக்கைகள்

### 8.1. Scinno Tech எச்சரிக்கை

2011 ஆம் ஆண்டில் 12 வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

“Scinno Tech வாசிப்போர் அளவளாய்வு கேள்விக் கொத்து” விருத்தி செய்யப்பட்டது. Scinno Tech வாசிப்போர் அளவளாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சபைக்கு சமர்பிக்கப்பட்டது.

### 8.2. தொழில்நுட்பவியல் சந்தையிடம்

தேசிய விஞ்ஞான மன்றமானது, பண்டார நாயக ஞாபகார்த்த சர்வதேச நினைவு மண்டபத்தில் ஒக்டோபர் மாதம் 24, 25 ஆம் திகதிகளில் இடம் பெற்ற கண்காட்சியில் பங்குபற்றியது.

மூலவகை மாதிரிகள்/விளைப் பயன்களின் கூறுகள், என்பன வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டதுடன், அவற்றிக்கு தேசிய விஞ்ஞான மன்றத்தினால் விருதுகள் வழங்கப்பட்டதுடன் அவை தேசிய விஞ்ஞான மன்றத்தின் சாவடிகளில் காட்சிப்படுத்தப்பட்டது. அதி புலமைச் சொத்தின் பாதுகாப்பிற்கு தேசிய விஞ்ஞான மன்றத்தின் உறுதுணையை பற்றி கைத்தொழிற்துறையாளர்கள் அறிந்து கொள்வதற்காக ஒரு காப்புரிமை உதவி மேசையானது, தேசிய விஞ்ஞான மன்றத்தின் சாவடியில் அமைக்கப்பட்டது.

தொடர்புடைய பங்குதாரர், தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப மானியங்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப சேவைகளை துண்டுப்பிரசுரங்கள் பத்திகைகள் மூலம் அறிந்து கொண்டனர்

- தேசிய செயற்குழுக்கள்

கீழ் குறிப்பிடப்பட்ட தேசிய செயற்குழுவின் செயற்பாடுகளுக்கு தொழில்நுட்ப பிரிவு கூட்டிணைந்தது.

- புத்தாக்கம் மற்றும் டெக்னோ – தொழிற்துறை தேசிய செயற்குழு
- நெநோ தொழில்நுட்பத்தின் தேசிய செயற்குழு
- உயர் திரவியங்கள் தேசிய செயற்குழு
- மனித எந்திரவியலில், உயர் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியின் தேசிய செயற்குழு
- மின்னணுவியல் மற்றும் உற்பத்தியின் தேசிய செயற்குழு
- உயிர் தொழில்நுட்பத்தின் தேசிய செயற்குழு

2012 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் விருத்தி செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட்டது.

- **புத்தாக்கம் மற்றும் டெக்னோ தொழிற்துறை தேசிய செயற்குழு**

07 கூட்டங்கள் இடம் பெற்றன 2011, ஒக்டோபர் மாதம் இடம் பெற்ற தலைவர்களின் கூட்டத்தில் ஒரு செயல்திட்டம் விருத்தி செய்யப்பட்டு முன்னளிக்கப்பட்டது.

- **உயர் திரவியங்களின் தேசிய செயற்குழு**

2011 ஆம் ஆண்டில் ஆறு செயற்குழு கூட்டங்கள் இடம் பெற்றதுடன் 2011 – 2012 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் பூரணப்படுத்தப்பட்டது. இலங்கையில் உயர் திரவிய செயற்றிறனை சாதிப்பதற்கான பாதை வரைபடத்தின் வரைவு தயாரிக்கப்படலானது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இலங்கையில் உயர் திரவியங்களை பயன்படுத்தக் கூடிய கைத்தொழிற்துறைகளின் செயலூட்டலை இனம் காண்பதற்கு ஒரு கைத்தொழிற்துறை வருடலானது (Scanning) செய்யப்பட்டது. செயற்குழுவானது 2011.11.26 ஆம் திகதி “உயர் திரவியங்கள் மற்றும் உள்ளூர் கைத்தொழிற்துறைக்கான நன்மைகளும் வாய்ப்புகளும்” எனும் தலைப்பில் ஒரு கருத்தரங்கினை தேசிய விஞ்ஞான மன்ற கேட்போர் கூடத்தில் செயலூட்டம் மிகு கைத்தொழிற்துறையாளர்களுக்காக ஒழுங்கு செய்தது. இக்கருத்தரங்கானது, உயர் திரவியங்கள் பற்றிய விழிபுணர்ச்சியை கைத்தொழிற்துறையாளர்கள் மற்றும் பணயப் பொருளாளர்களிடையே ஏற்படுத்துதலின் பொருட்டு இடம் பெற்றதாகும். கைத்தொழில் துறையினைச் சேர்ந்த 27 பேர் இக் கூட்டத்தில் பங்கு பற்றினர்.

**பிரதான விளை பயன்கள்**

1. **மானிய இலக்கம் : RG/2006/TFRD/01**

**கருத்திட்ட தலைப்பு** : பாற்பண்ணை சார்ந்த விலங்கு வேளாண்மையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் கிராமிய சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்

**மானியம் பெறுநர்** : பேராசிரியர். எச்.டபிள்யு. சிரில், விலங்கு விஞ்ஞான திணைக்களம், விவசாய பீடம், பேராதெனிய பல்கலைக்கழகம்

**கருத்திட்ட இட அமைவு** : 1. விலங்கு விஞ்ஞான திணைக்களம், விவசாய பீடம், பேராதெனிய பல்கலைக்கழகம்
2. சரசவிகம, மஹாகம, கலஹா வீதி, பேராதெனிய

**கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்:**

- பாற்பண்ணை சார் விலங்கு வேளாண்மையை மேம்படுத்துவதற்கு ஆராய்ச்சி தேடல்களை தேடலும் அமுல்படுத்தலும்
- தெரிந்த தொழில்நுட்பத்தை பிரயோகிப்பதன் ஊடாக பால் உற்பத்தியை அதிகரித்தல்
- பண்ணை சார் சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்

**கருத்திட்ட பெறுபேறுகள்/விளை பயன்கள்**

- எம்.பில். ஆய்வுக்கட்டுரை
- பால் உற்பத்தியை அதிகரித்தல்
- பாலின் தரத்தை அதிகரித்தல் (உள்ளடங்கியுள்ள பக்டீரியா அளவினை குறைத்தல்)
- நோய்களற்ற ஆரோக்கியமான விலங்குகள்
- கன்றுகள் இறப்பு வீதத்தினை குறைத்தல்
- விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்
- சிறந்த விலங்கு வேளாண்மை முகாமைத்துவ செயன் முறைகளை விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தலின் மூலம் விவசாயிகளின் விழிப்புணர்ச்சியை வளர்த்தல்




கருத்திட்டம் அமுலாக்க முன்னர் கொட்டிலின் பக்கத் தோற்றம்



கருத்திட்டம் அமுலாக்கம் செய்த பின்னர் மாட்டுக் கொட்டில்

**2. மானிய இலக்கம்: RG/2006/TFRD/04**

**கருத்திட்ட தலைப்பு:** பேராசிரியர். எஸ். பிரேமரட்ன, விலங்கு விஞ்ஞான பீடம், விவசாய பீடம், பேராதெனிய பல்கலைக்கழகம், பேராதெனிய.

**மானியம் பெறுநர்:** பேராசிரியர், எஸ். பிரேமரட்ன, விலங்கு விஞ்ஞான திணைக்களம் விவசாய பீடம் பேராதெனிய பல்கலைக்கழகம் பேராதெனிய

**கருத்திட்ட இட அமைவு:** விலங்குனவாக பயற்றின் தாவர இலை உணவு விருத்தி செய்தல்

**கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்:** விலங்குணவாக பயற்றின தாவர வகை உணவு விருத்தி செய்தல்



**கருத்திட்டத்தின் பெறுபேறுகள்/விளைபயன்கள்**

- எம்.பில் ஆய்வுக் கட்டுரை
- கிளிரிசீடியா இலை, தேங்காய் மற்றும் அரிசி தவிட்டினை சேர்த்து கிளிரிசீடியா விலங்குணவு
- கிளிரிசீடியா விலங்குணவை தயாரிக்க ஒரு முறைமை
- கிளிரிசீடியா இலையை விலங்குணவாகதயாரித்தல் தொடர்பில் விவசாயிகளின் விழிப்புணர்ச்சியை வளர்த்தல்

**3. மானிய இலக்கம்: RG/2007/W&E/03**

**கருத்திட்ட தலைப்பு: நடைமுறையில் சாத்தியமான உபகரணங்களுக்கான சாய உணர்வூட்டப்பட்ட சூரிய கலங்களை உருவாக்குவது பற்றிய ஆய்வு**

**மானிய பயன் பெறுநர்:** கலாநிதி. வி.பி.எஸ். பெரேரா இரசாயனவியல் திணைக்களம் திறந்த பல்கலைக்கழகம்

**கருத்திட்டத்தின் விஞ்ஞான நோக்கெல்லை**

சாய கூருணர்வுடைய ஒளிமின் இரசாயன சூரிய கலத்துடனும் திண்ம நிலையிலுள்ள சூரிய பலகத்துடன் தொடர்புடைய பிரச்சனைகளை இக்கருத்திட்டம் விளிக்கின்றது. இந்தச் சோதனையின் போது, DSSc களுடன் தொடர்புள்ள பிரச்சனைகளாவன தீர்வு செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டதுடன் விஞ்ஞானிகளும் சரியாக தெளிவு படாத சில பிரச்சனைகளையும் தெரிவு செய்து கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டன.

**இக்கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்**

- மின் பகுப்பாய்வு ஒழுகலையும் சாயம் தரமிழக்கப்பட்டவையும் தீர்வு செய்தல்
- ஒளி மின் இரசாயன சூரிய கலங்களுக்கு உலோக கம்பி சட்டகத்தை அச்சிடல்
- DSSc களில் ஒளி மின் வலியளவு மற்றும் ஒளி மின்சாரம் தரமிழக்கப்படலின் காரணம்

- திண்ம நிலை DSSc களில் உயர் வீத மீள் இணைப்புகளின் காரணத்தை அறிந்துக் கொள்ளல்

**இக்கருத்திட்டத்தின் தேடல்களும்/ விளைவுகளும்**

- எம்.பில் ஆய்வுக் கட்டுரை
- Dssc களின் மின் பகுப்பாய்வு ஒழுகலை தடுப்பதற்கு ஒரு முறை
- மின் பகுப்பாய்வின் மேற் படுகை மற்றும் ஆவியாதலை தடுக்கவும் ஒரு முறை
- வலு இழப்பை தடுப்பதற்கு சூரிய பலகத்தின் பரந்த பரப்பெல்லையில் CTO கண்ணாடியின் தடுப்பினை குறைப்பதற்கு ஒரு முறை
- ஒளி அழுத்தத்தின் அழிவும் அதைத் தொடர்ந்த ஒளி ஓட்டத்தின் காரணமும் ஏற்றக் காவிகளின் மீளிணைப்பை ஏற்படுத்தும் நனோ பளிங்கு குறை கடத்தி பண்டங்களின் மேற்பரப்பிலும் எல்லைகளின் கைப்பற்றப்பட்ட நிலையிலும் கண்டுபிடிக்கப்படுகின்றது.
- திண்ம நிலையிலுள்ள மின்கலங்களில் ஒளிக்கு குணகம் உயர்வாக இருந்த போதிலும் அதன் மின்னணுவியல் வாழ்வு காலமானது மிகவும் குறுகியது என்பதை சான்றுடன் உறுதியுடன் கூறலாம்

## 4. மானிய இலக்கம்: RG/2007/SI/02

**கருத்திட்ட தலைப்பு:** சமிக்ஞ்சை மானியின் வடிவமைப்பும் நிர்மாணிப்பும்

**மானிய பெறுநர்** - கலாநிதி. கெ.டி.ஆர். ஜகத் குமார, கலாநிதி. எ.யு.எ.டபிள்யு. குணவர்தன, கலாநிதி. டிசாலா உடவலவ மின்னியல் மின்னணுவியல் எந்திரவியல் திணைக்களம், எந்திரவியல் பட்டம், பேராதெனிய பல்கலைக்கழகம்.

**கருத்திட்ட குறிக்கோள்கள்:** பிரதானமாக இலங்கையில் கட்டுருவாக்கம் செய்யக்கூடிய RF சக்தி /வலு அகலப்பட்டையின் வடிவமைப்பு.

**கருத்திட்ட விளைவுகள்:**

300 – 1300 MHz (UHF) நிறமாலைக்கான முதல் கட்ட மூலமாதிரியானது நிர்மாணிக்கப்பட்டதுடன் இது மூன்று கட்டங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன சமிஞ்ஞை பெறுகை சக்தி மதிப்பீட்டு கூறு, மேலும் கீழும் மாற்றக் கூடிய மைக்ரோ வேவ் மாற்றீடு, குறைந்தளவு பாரமுடைய அகலப்பட்டை ஆன்டெனா என்பன கருத்திட்ட காலப்பகுதியில் கீழ் குறிப்பிடப்பட்ட கூறுகள் வெற்றிகரமாக செய்யப்பட்டதுடன் சோதிக்கவும் பட்டது.

- மைக்ரோவேவ் சுற்று மேல் மாற்றுக்கு – UHF லிருந்து 2.7 GHz வரை, விம்ப மறுவிலக்குடன்.
- மைக்ரோவேவ் சுற்று கீழ் மாற்றுக்கு 2.7 GHz இலிருந்து 1MHz
- USB சமிக்ஞ்சை வாசிப்பும் காட்சியகமும்
- 1MHz டிஜிட்டல் மணிக் கூண்டு
- அகலப்பட்டை கொக்கி அமைப்பு உள்ள ஆன்டெனா
- Frequency auto – Scanner

- 1MHz high gain amplifier மீடிறன் தானியங்கி நுட்பமாக பரிசோதிக்கும் 1MHz உயர்வுடைய ஒலி பெருக்கி
- 5v, 12v மற்றும் 18v உடைய ஒழுங்கிசைவு மின் விநியோக சாதனம்

இக்கருத் திட்டத்தை பூரண நிறைவுக்கு கொண்டு வரும் போது பெறப்பட்ட தீர்மானமானது, அகலப்பட்டை மைக்ரோவேவ் சுற்றுகள், ஆன்டெனாக்கள் மற்றும் உயர் விரைவுடைய டிஜிட்டல் சுற்றுக்கள் என்பனவற்றை பேராதெனிய பல்கலைக்கழகத்தில் உள்ள DEEE ஆய்வு கூடத்தில் விருத்தி செய்யலாம் என்பதாகும்.



Gain measurement கட்டம் 1இனை மாற்றுதல்

## 5. மானிய இலக்கம்: RG/2007/SI/03

**கருத்திட்ட தலைப்பு:** உயரத்தை சீராக்கக்கூடிய தேங்காய் பறிக்கும் கம்பம்

**மானியம் பெறுநர்:** திரு.எச்.எம். சுகததாச சமகி கைத்தொழில், கும்புக்வேவ, நெகம்பஹா

**குறிக்கோள்கள்:**

8 அடியிலிருந்து 10 அடிவரைக்கும் அது போன்று 60 இலிருந்து 80 அடிவரைக்கும் உயரமுள்ள தென்னை மரத்திலிருந்தோ அல்லது காய்களை தரக்கூடிய வேறு மரத்திலிருந்தோ காய்களை பறிப்பதற்கு உயரத்தை சீராக்கக்கூடிய கம்பம் ஒன்றினை விருத்திசெய்தல்.

**கருத்திட்ட விளைவுகள்**

எச்.எம். சுகததாசவினால் விருத்தி செய்யப்பட்ட உயரத்தை சீராகக்க்கூடிய தோல் காய் பறிக்கக்கூடிய கம்பமானது, தற்பொழுது நடப்பில் பயன்படுத்தப்படும் மூங்கில்/மரத்தடிகளை விட மிகவும் சூழல் நட்புரிமை உடையது. இதன் தொழில்நுட்ப செயலாற்றுகையும் மிகவும்

சிறப்பானது என்பதுடன் இக்கருது கோளானது அதிபுலமைச் சொத்தினால் பாதுகாக்கப்படல் நிமித்தம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

## 6. மானிய இலக்கம்: RG/2008/SI/01

**கருத்திட்ட தலைப்பு:** நாட்டிற்குள் கால்வாய், நதி போன்ற நீர் வழியில் பயணம் செய்யக்கூடிய விதத்தில் சூழல் நட்புடன் கூடிய மோட்டர் படகு ஒன்றினை உற்பத்தி செய்தல்

**மானியம் பெறுநர்:** திரு. கெ.ஐ.கெ. கருணாதிலக, தெமோதர வீதி, தேவமுல்ல,
கொவின்ன

**குறிக்கோள்கள்:** கால் வாய், நதி போன்ற நீர் வழிகளின் கரையை சேதப்படுத்தாது பயணம் செய்யக் கூடிய விதத்தில் சூழல் நட்புடன் கூடிய ஒரு மோட்டார் படகின் வடிவமைப்பும் விருத்தியும்.

**கருத்திட்ட விளைவுகள்:**

50 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய பாதுகாப்புடைய இந்த மோட்டார் படகானது திரு. ஜி.ஐ. கருணாதிலகவினால் விருத்தி செய்யப்பட்டதுடன் அதன் கள பரீட்சார்த்த சோதனையும் மேற் கொள்ளப்பட்டது. புத்தாக்குனரின் கருத்தானது, இப்படகு சூழல் நட்புடையது என்பதும் நீர் வழியின் வரப்பினை ஆகக்குறைந்தளவே சேதப்படுத்துகிறது என்பதுமாகும்.






களுத்துறையில் உள்ள ‘கலா நிதியில்’ சூழல் நட்புடைய மோட்டார் படகினை ஆரம்பித்தல்

## சர்வதேச தொடர்பிணைப்பு பிரிவு (ILD)

### 1. விஞ்ஞான தொழில்நுட்ப மனித வள செயற்றிறனை மேம்படுத்துதல்

#### 1.1. தேசிய விஞ்ஞான மன்ற பிரயாண மானியம்

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளானது, இலங்கை விஞ்ஞானிகளுக்கு அவர்களது ஆய்வுத் தேடல்களை சர்வதேச முன்னரங்கில் முன்வைப்பதற்கும் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான விஞ்ஞான அறிவினையும் அத்துடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் உலகம் மேற்கொண்ட முயற்சிகளுடன் தொடர்புடைய சாதனைகள், விருத்திகள் மற்றும் அநுபவங்கள் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பினை வழங்குதல் ஆகும். 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய விஞ்ஞான மன்றமானது 7.7 மில்லியன் ரூபாய் பெறுமானமுள்ள 37 பிரயாண மானியங்களை (121 விண்ணப்பங்கள் செயன்முறையாக்கம் செய்யப்பட்டன) வழங்கியுள்ளது. 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஆறு மானியங்களின் பெறுமதி 0.5 மில்லியன் ரூபாய் ஆகும்.

#### 1.2. வெளிநாட்டு விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (OSTP)

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கானது உயர் ஆய்வு கூட ஆராய்ச்சித் திறனிலும் மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப அநுபவங்களிலும் அத்துடன் வெளிநாடுகளில் உள்ள மிகச் சிறந்த நிலையங்களில் விஞ்ஞான போதனை மற்றும் தொடர்பாடல் திறன் என்பவற்றில் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்கத்தில் செயற்றிறனை மேம்படுத்துதல் என்பதினால் இந்நிகழ்ச்சித் திட்டமானது 2011 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டது.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது கல்வி நிலையங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், அரச அமைப்புகள் என்பவற்றில் உள்ள விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப ஆளணியினரையும் அல்லது கைத்தொழில் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களில் உள்ள ஆளணியினர் ஆகியோர்களை குறிக்கோளாக கொண்டிருப்பதுடன் இந்நிகழ்ச்சித் திட்டமானது இலங்கைக்கான விஞ்ஞான தொழில்நுட்ப திறமுறையில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதாய் இனங்காணப்பட்ட பரப்பெல்லைகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றது.

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய விஞ்ஞான மன்றமானது 21 OSTP மானியங்களை (29 விண்ணப்பங்கள் செயன்முறையாக்கம் செய்யப்பட்டுள்ளது) ரூபாய் 1.8 மில்லியன் செலவில் வழங்கியுள்ளது.

#### 1.3. இளம் விஞ்ஞானிகளுக்கான வருடாந்த TWAS/ தேசிய விஞ்ஞான மன்ற விருது

உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் எண் கணித ஆராய்ச்சித் துறைகளில் மிகச் சிறந்த ஆராய்ச்சியினை சாதித்த இளம் விஞ்ஞானிகளுக்கு வருடாந்தம் விருது வழங்கும் திட்டத்தை நிறுவிய விஞ்ஞானத்திற்கான மூன்றாம் உலக கல்வியகம் (TWAS) துடன் தேசிய விஞ்ஞான மன்றம் ஒத்திசைகின்றது. சகல விருதுகளும் US$ 2000 பெறுமதியான காசுப் பரிசை கொண்டிருப்பதுடன் இது விஞ்ஞானத்திற்கான மூன்றாம் உலக கல்வியகத்தினால் வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு விருதுகளுக்கும் உரிய சான்றிதழானது தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்படுகின்றது. ஆராய்ச்சியில் மிகத் திறமையான தரத்தை எய்தமைக்கும் மற்றும் இளம் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கும் முகமாகவுமே இவ்விருதுகள்

வழங்கப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டின் விருது தொடர்பில் தேசிய விஞ்ஞான மன்றமானது 08 விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும் 2011 ஆம் ஆண்டின் TWAS/தேசிய விஞ்ஞான மன்ற விருதினை பெற்றுக் கொள்வதற்கு இந்த விண்ணப்பங்களில் எதுவுமே உரிய தரத்தை உடையதாய் இல்லை

## 2. சர்வதேச கூட்டிணைப்புகள்

கூட்டிணைப்பின் மூலம் பெறப்பட்ட சிறந்த பெறுபேறுகள் மற்றும் ILD யின் செயற்பாடுகள் ஆகியவற்றின் மூலம் விஞ்ஞான சமூகமானது தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் விரிவடையச் செய்வதில் பங்களிப்பு செய்கின்றது.

### 2.1. STEPAN

#### 2.1.1. தேசிய புத்தாக்க முறைமை: தொழிற்பாட்டு திறமுறைகள் மற்றும் முகாமைத்துவ விடயங்கள் பற்றிய சர்வதேச பயிற்சிப் பட்டறை மற்றும் முறை சார் பற்ற சபைக் கூட்டமும்

தேசிய புத்தாக்க முறைமை: தொழிற்பாட்டு திறமுறைகள் மற்றும் முகாமைத்துவ விடயங்கள் பற்றிய சர்வதேச பயிற்சிப் பட்டறையானது 2011 நவம்பர் மாதம் 2 – 3 ஆம் திகதிகளில் கொழும்பிலுன்ன கலதாரி ஹோட்டலில் இடம் பெற்றது. இப்பயிற்சிப் பட்டறைக்கு தாய்லாந்து, கொரியா, சீனா, இந்தியா, அவுஸ்திரேலியா, மாலைத்தீவு, பாகிஸ்தான், மலேசியா, பிலிப்பைன், இரான், ஸ்ரீலங்கா ஆகிய 11 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதைவிட, பாரிஸில் உள்ள யுனெஸ்கோ மற்றும் ஜகர்தாவில் உள்ள யுனெஸ்கோ என்பவற்றிலிருந்து உள்ளடங்கலாக 50 பங்கு பெறுநர்கள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துக் கொண்டனர். இப்பயிற்சிப் பட்டறையானது தேசிய புத்தாக்க முறைமையின் கருது கோள்கள், அதன் ஆராய்ச்சி முறைகள், பகுப்பாய்வுகள், பகுப்பாய்வு கருவிகளின் பயன்பாடு, உரை பெயர்ப்பு மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பத்தில் சாதனையை ஏற்படுத்திய ஏனைய நாடுகளிடமிருந்து அவை பற்றிய விளக்கங்கள் என்பன பற்றிய தெளிவான புரிந்துணர்வை பெற்றுக் கொள்ளுதல் ஆகும். அத்துடன் தலைவர் வருகை தராத காரணத்தினால் முதலாவது நாளின் இரண்டாவது கூட்டத் தொடரின் பின்னர் (2011.11.02) STEPAN தொடர்பில் ஒரு முறை சாரா கூட்டமொன்று இடம் பெற்றது. இக்கூட்டமானத ஜகர்தாவில் உள்ள யுனெஸ்கோவினை சேர்ந்த திருமதி. முசாமி நகர்தா மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் சர்வதேச பிரிவின் தலைவர் திருமதி. அநுஷா அமரசிங்க ஆகியோரினால் நடுநிலைமை வகிக்கப்பட்டது.

### 2.2. சார்க்

#### 2.2.1. சார்க் பணிக்குழுவின் நான்காவது கூட்டம்

உயிர் தொழில்நுட்பம் பற்றிய நான்காவது கூட்டமானது 2011 ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி கொழும்பிலுள்ள கலதாரி ஹோட்டலில் இடம் பெற்றது. இக்கூட்டமானது ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம் மற்றும் ஸ்ரீலங்கா ஆகிய ஆறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. இக்கூட்டத்திற்கு செயலகத்தின் பணிப்பாளரும்

கலந்துக் கொண்டார் பணிக் கூட்டத்தொடரானது தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திருமதி. தஹரா விஜயதிலகவினால் தலைமைத்துவம் வகிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு இலங்கையில் இடம் பெற்ற உயிர் தொழில்நுட்பம் பற்றிய பணிக்குழுவின் மூன்றாவது கூட்டத்தின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைப்புகளின் செயற்படுத்துகையின் முன்னேற்றம் பற்றி பிரதிநிதிகள் மீளாய்வு செய்ததுடன் அது தொடர்பில் பரிந்துரைத்தனர்

## 2.3. விஞ்ஞான ஒன்றியத்திற்கான சர்வதேச மன்றம் (ICSU)

2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 – 18 வரை இடம் பெற்ற ஆசியா மற்றும் பசுபிக்கிற்கான ICSU-UNESCO Rio+20 பிராந்திய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பயிற்சிப் பட்டறையில் தேசிய ICSU செயற்குழுவின் தலைவர் கலாநிதி. எம்..என். ஜயசூரிய கலந்துக் கொண்டனர்.

சமுதாய, பொருளியல், மற்றும் அபிவிருத்தியில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பொது தொழில்நுட்பங்களை இனம் காணும் ஒரு முன்னறியும் கருவி என்ற வகையில் ஒரு பயிற்சிப் பட்டறை 2011 ஒக்டோபர் மாதம் 27 – 29 ஆம் திகதி வரை இடம் பெற்றது. இது தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் கூட்டிணைவுடன் மேற்கொள்ளப்பட்டது. மேன்ஸ்டர் பல்கலைக்கழத்தை சேர்ந்த, ஒசாகன் செரிடஸ் மற்றும் ஒஸ்ரியாவினைச் சேர்ந்த திருமதி. எல்காடெல் ஆகியோர் ICSU வினால் இனம் காணப்பட்ட பயிற்சிப் பட்டறையின் வள ஆளணியினர் ஆவார்.

தகமை வாய்ந்த உள்ளூர் வள ஆளணி குழு ஒன்றினை விருத்தி செய்தல் மற்றும் முன்னறி செயற்பாடுகளை நடாத்துதல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை கண்காணிக்கக்கூடிய செயற்றிறனையும் விருத்தி செய்வதற்கு நடாத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையில் விஞ்ஞான தொழில்நுட்ப துறையில் கடமையாற்றும் 35 – 40 வயதிற்குட்பட்ட 30 பங்கு பெறுநர்கள் பங்கு பற்றினர்.

## 2.4. இலங்கை விஞ்ஞானிகளின் உலகளாவிய முன்னரங்கு : வலையமைப்பு மற்றும் அறிவுப் பகரலின் ஊடாக இலங்கைக்கு அதிகாரமளித்தல் பற்றிய சர்வதேச மாநாடு – 2011 டிசம்பர் மாதம் 13 – 15 ஆம் திகதிகளில்

விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய விஞ்ஞான மன்றமானது, யுனெஸ்கோவுடன் கூட்டிணைந்து, நாட்டின் பின் பிணக்கு பொருளியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கு மிகவும் சிறந்த அறிவினை கொண்ட தாய் நாடு துறந்த விஞ்ஞானிகளின் அறிவினை பெற்றுக் கொள்வதற்கு இலங்கை விஞ்ஞானிகளின் உலகளாவிய முன்னரங்கினை ஒழுங்கமைப்பு செய்தது. இம் முன்னரங்கின் பிரதான இலக்கானது, தாய் நாடு துறந்த விஞ்ஞானிகளையும் நம் நாட்டு விஞ்ஞானிகளையும் ஒரு இடத்தில் ஒன்று சேர்த்து வலுவான தொடர்பிணைப்பை தாபிப்பதுடன், தேசத்தினை விருத்தி செய்யும் நோக்குடன் தொழில்நுட்பத்தினை அடிப்படையாக ஆராய்ச்சியினை மேம்படுத்துவதற்காக அறிவினை பகிர்ந்துக் கொள்ள வலையமைப்பை கட்டியெழுப்புதல்.

இன்றைய நிலையில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திகளில் 1.5% மட்டுமே உயர் தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்டவை. பின் பிணக்கு அபிவிருத்தி சூழ் நிலையில் ஒரு மணித்தியாலத்தின் தேவைப்பாடனாது நவீன போக்குகளுடன் ஈடுகொடுக்கும் வகையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கையின் நிபுணத்துவம் மற்றும் புத்தாக்கத்தை அடிப்படையாக கொண்டு புதிய சந்தை வாய்ப்புக்கள் உருவாக்கப்படலும் வேண்டும். ஆகவே இந்த முன்னரங்கானது பொருளியல் வளர்ச்சிக்கான தொடர்ச்சியான கூட்டிணைவிற்கு ஒரு முதலீடாகும்.

**முன்னரங்கு**

2011 டிசம்பர் மாதம் 13,14,15 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம் பெற்ற உலக முன்னரங்கில் தாய்நாடு துறந்து புலம் பெயர்ந்த விஞ்ஞானிகளும் , வெளிநாட்டினை சேர்ந்த விஞ்ஞானிகளுமாக 39 பேர், 225 உள்ளூர் விஞ்ஞானிகள் தனியார் மற்றும் பொதுத் துறையினைச் சேர்ந்த கொள்கை அமைப்பாளர்கள் பங்குதாரர் கைத்தொழிற்துறையாளர்கள் மற்றும் வியாபார துறையினர் ஆகியோர் பங்கு பற்றினர்.

முன்னரங்கானது தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் கௌரவ அமைச்சர். பவித்ரா வன்னியாராய்ச்சி விஞ்ஞான விவகாரங்களின் சிரேஸ்ட அமைச்சர் கௌரவ. திஸ்ஸ விதாரண, யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம் திரு. பிரீத்தி பெரேரா மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் பணிப்பாளர் ஆகியோரினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

தாய் நாடு துறந்த மற்றும் வெளிநாட்டு விஞ்ஞானிகள் ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, அவுஸ்ரேலியா, நியுசிலாந்து, ஐயர்லாந்து, ஜப்பான், ஹொங்கொங், சிங்கப்பூர், இந்தியா, கொரியா, தாய்வான், பிரான்ஸ்,, நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவார். முதல் நாளின் காலைப் பொழுதானது திறப்பு விழா வைபவத்திற்காக செலவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு ஒவ்வொருவரும் பங்கு கொள்ள வேண்டிய கூட்ட நிகழ்வுகள், குழு கலந்துரையாடல்கள் மற்றும் பிரதான குறிப்புகள் பற்றிய விளிப்புரைகள் என்பன இடம் பெற்றன. ஒவ்வொருவரும் பங்கு கொள்ள வேண்டிய கூட்ட நிகழ்வுகளாவன கொள்கை மற்றும் பொது தொனிப்பொருளுக்குரிய பிரயோகம் பற்றிய அறிமுகப்படுத்துகைகளை உள்ளடக்கும். குழு கலந்துரைடயாடல்களாவன, அதிக விசேடத்துவம் மிகு விஞ்ஞான பரப்பெல்லைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விஞ்ஞானிகள், நிறுவகங்கள் மற்றும் அத்தகைய பரப்பெல்லைகள் மற்றும் அத்தகைய பரப்பெல்லைகளில் விசேட அவதானம் செலுத்திய கைத்தொழிற்துறைகள் ஆகிய விடயங்களை உள்ளடக்கும்.

முன்னரங்கின் இறுதி நாளான்று “Inno-Vestor” உடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டது இந்த செயற்பாட்டில், புத்தாக்குனர் மற்றும் செயலூட்டம் மிகு முதலீட்டாளர்கள் ஒன்றாக ஒரு பொது தள மேடைக்கு, பொது தனியார் துறை தொழில்நுட்பவியலாளர்கள், துறையினர், வியாபார சமூகத்தினருடன், கொண்டு வரப்படுவர். தேசிய விஞ்ஞான மன்றத்தின் முயற்சிகளாவன பலரால் உயர்ந்த அளவில் மெச்சப்பட்டதுடன் அம்முயற்சிக்கு வாழ்த்துக்களும் வழங்கப்பட்டன. இந்த முன்னரங்கானது, எதிர்காலத்தில் நடாத்தப்படக்கூடிய இத்தகைய முன்னரங்குகளில் முதன்மை இடத்தை வகிக்கக் கூடியது, என்பதுடன் இடம் பெற்ற பொது கலந்துரையாடல்களாவன பிரயோசனம் மிக்கதாய் இருந்தது. அவற்றுக்குள் நாட்டின்

பொருளியல் தேவைப்பாடுகளிற்கு தொழில்நுட்பங்களை ஆரம்பித்தல் மற்றும் பூரணப்படுத்தப்பட்டு பாவனைக்கு தயாராக உள்ள தொழில்நுட்பங்களுக்கான புதிய செல்வழிகள் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கக் கூடிய கூட்டிணைப்புகளையும் முயற்சிகளையும் வலுப்படுத்தல் என்பன உள்ளடங்கி இருந்தன. முன்னரங்கின் போது புதிய கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தக் கூடிய விதத்தில் தெரிவு செய்யப்பட்ட சில பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

**சக்தி, சுகாதார நலன், விவசாயம், சுற்றுலாத்துறை, நுகர்வுப் பொருட்கள், ஏற்றுமதி போன்ற வேறுபட்ட துறைகளின் ஊடாக பொருளியல் அபிவிருத்தியை பிரதானமாக கொண்ட தேசிய அக்கறையை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அமைந்த முன்னரங்கின் பிரதான கருப்பொருள்கள் (கீழே காட்டப்பட்டுள்ளவை)**

- o நெநோ தொழில்நுட்பம் மற்றும் நெநோ சாதனம்
- o உயிர்த் தொழில்நுட்பம்
- o தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- o Green சக்தி தொழில்நுட்பம்
- o உயர் வடிவமைப்பு மற்றும் உற்பத்திகள்
- o இயற்கை வளங்கள்
- o உணவும் நீர்க்காப்பும்

**கீழ் குறிப்பிடப்பட்டவற்றின் பிரதான விளைவுகள்**

- விஞ்ஞானத்தில் மிகச் சிறப்பான தேர்ச்சியை பெற்றுக் கொள்வதற்காகவும் அறிவு இடைவெளியை ஈடுகட்டவும் வெளிநாட்டு நிறுவனங்களுடனும் /விஞ்ஞானிகளுடன் பங்குடமையை வளர்த்தல்.
- கைத்தொழிற்துறை சார் ஆராய்ச்சியை மேம்படுத்தல்
- உள்ளூர் விஞ்ஞானிகளை வெளியுருக்கு அனுப்புதலிற்கு அவர்களை பயிற்றுவிக்கும் பொருட்டு இணையத்தை பயன்படுத்தல்
- அதிபுலமை சொத்தினை மேம்படுத்தவும் பயன்படுத்தவும் ஒரு தள மேடை
- பயனுறுதி மிகு கூட்டிணைப்பிற்கு பாதை வகிக்கின்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட திறமுறைகளும் முறைகளும், அறிவுப் பகிர்வும் தொழில்நுட்ப மாற்றீடும்
- கூட்டிணை செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு ஒரு நுழைவு வாயிலை தாபிப்பதற்கான நன்கு விருத்தி செய்யப்பட்ட திட்டம்

## 2.5. தேசிய மனிதன் மற்றும் உயிர் கோளவியல் (MAB) நிகழ்ச்சித் திட்டம்

### 2.5.1. கண்டியை ஒரு உயிர் கோளவியல் ஒதுக்கீடாக பெயர் குறிப்பீடு செய்தல்

கண்டியை ஒரு உயிர் கோளவியல் ஒதுக்கீடாக பெயர் குறிப்பீடு செய்தல் தொடர்பில் கலந்துரையாடல்களும் அறிமுகப்படுத்துகைகளும் மேற் கொள்ளப்பட்டன இந்நோக்கத்திற்காக நியமனம் செய்யப்பட்ட உப குழுவானது இது தொடர்பில் தன்னை தயார் படுத்தி பணியாற்றுகிறது.

### 2.5.2. மன்னார் உயிர் கோளவியல் ஒதுக்கீட்டினை தாபித்தல்

தாபிக்கப்பட்ட மன்னார் உயிர் கோளவியல் ஒதுக்கீட்டு வளைகுடாவினை பெற்றுக் கொள்வதற்கு முன் ஆயத்த பணிகள் செய்யப்பட்டதுடன் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலுள்ள பாக்கு நீரிணையில் ஒரு எடம்ஸ் பாலம் (சேதுபாலம்) ஒன்றை கட்டுதல் தொடர்பிலான சாத்தியக் கூறுகளும் ஆராயப்பட்டன. மன்னார் உயிர் கோளவியல் ஒதுக்கீட்டினை பெயர் குறிப்பீடு செய்தல் தொடர்பில் பணியாற்ற பத்து பேர்களை கொண்ட உப செயற்குழு நியமனம் செய்யப்பட்டது.

மன்னாரினை உயிர் கோளவியல் ஒதுக்கீட்டு பிராந்தியமாக பிரேரணை செய்வதில் உள்ள உயிரியல், தொல் பொருளியல், கலாச்சாரம் சம்பந்தப்பட்ட விடயங்களை கலந்துரையாடும் நோக்குடன் தேசிய விஞ்ஞான மன்றத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற முதலாவது பங்குதார் கூட்டத்தில் பிரேரிக்கப்பட்ட மன்னார் உயிர் கோளவியல் ஒதுக்கீட்டில் பங்கு உள்ள வேறுபட்ட நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் மற்றும் பிரேரிக்கப்பட்ட மன்னார் உயிர் கோளவியல் ஒதுக்கீட்டில் ஆராய்ச்சி மற்றும் அளவளாய்வினை மேற் கொண்டவர்கள் உள்ளடங்கலாக 35 ஆளணியினர் பங்கு பற்றினர்.

### 2.5.3. நக்கில்ஸ் உயிர் கோளவியல் ஒதுக்கீடு பற்றிய பெயர் குறிப்பிடலை பாரிசில் உள்ள யுனெஸ்கோவிற்கு சமர்பித்தல்

நக்கிள்ஸ் மலைத் தொடரை சர்வதேச உயிர் கோளவியல் ஒதுக்கீடாக பெயர் குறிப்பீடு செய்தல் பற்றிய வரைவானது, உசாவுனரால் தயாரிக்கப்பட்டது. யுனஸ்கோவின் புதிய வழிகாட்டல்களிற்கு அமைவுற, உயிர் கோளவியல் ஒதுக்கீடானது, இருப்பு நிலையை பொறுத்த வரையில் நிலைமாற்ற வலயமாக வரையறுக்கப்பட்டுள்ளது. நிலைமாற்ற வலயமாக வரையறுக்கப்பட்டிருப்பதினால். இங்கு மக்கள் வாழ்வதற்கு ஏதுவான நிலை இருப்பதுடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான சமூக அபிவிருத்திற்குரிய பணிகளும் மேற்கொள்ளப்படக் கூடிய ஒரு சூழ் நிலையும் உள்ளது. வனம் பேணுகை திணைக்களமானது, நக்கிள்ஸ் மலைத் தொடரின் நிலைமாற்ற வலயம் எனப்படும் பிரதேச எல்லையினை வரையறை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளது. இந்த எல்லை வரையறை செய்யப்படுதல் முடிவுக்கு வரும் வரை நக்கிள்ஸ் மலைத் தொடரினை உயிர் கோளவியல் ஒதுக்கீடாக்குதல் தொடர்பில் சமர்பிக்கப்பட்டமையானது, எதுவித முடிவுக்கும் வரப்படாது உள்ளது.

### 2.5.4. உசங்கொடவினை புவிப்பூங்காவாக பெயர் குறிப்பீடு செய்தல்

பெயர் குறிப்பிட்டு செயன்முறையினை விரைவு படுத்தலிற்கு ஒரு வழியினை கண்டுபிடிப்பதற்காக, பணயப் பொருளாளர்களினை உள்ளடக்கிய ஒரு தொகுப்பு கலந்துரையாடல்களாவன, சூழலியல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சில் இடம் பெற்றது. இந்த பிரதேசமானது ஒரு தேசியப் பூங்காவாக வர்த்தகமானியில் தரப்பட்டது. உப செயற்குழுவானது பெயர் குறிப்பீட்டு ஆவணங்களை இறுதி நிலைக்கு கொண்டு வந்தது.

## விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை பிரிவு (SPD)

### 1. அறிமுகவுரை

மீளாய்வுட்குட்பட்ட காலப்பகுதியில் சகலருக்கும் விஞ்ஞானம் என்ற தொனிப் பொருளின் கீழ், விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை பிரிவானது பள்ளிக் கூட சமூகம் மற்றும் பொது மக்களுக்கு விஞ்ஞானத்தை தொடர்ந்து பிரபல்யப்படுத்துகிறது.

**முனைப்பான விடயங்கள்**

- **மிஹிமண்டல கட்புல தொகுப்பானது, இரு சர்வதேச மற்றும் தேசிய விருதுகளை வென்றது.**
  - மன்தன் விருது தென் ஆசியா 2011
  - விசேட சிறப்பு விருது – e – Swahhimani 2011
- **பள்ளிக் கூட விஞ்ஞான சங்கங்கள்:** இவ்வருட காலப் பகுதியில் 141 பள்ளிக் கூட விஞ்ஞான சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. ஒரு வருட காலப்பகுதியில் உயர் எண்ணிக்கையான சங்கங்கள் பதிவு செய்யப்பட்டமையை இது காட்டுகிறது. தமிழ் மொழி மூலமான பள்ளிக் கூடங்களிலிருந்து 87 விஞ்ஞான சங்கங்கள் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை காட்டியது.
- **குடும்ப விஞ்ஞான நிகழ்ச்சித் திட்டம்:** பாலர் பாடசாலை பள்ளி மாணவர்களுக்கும் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கும் விஞ்ஞானத்தை போதிப்பதற்காக தாமே செய்து அறிகின்ற முறையில் அதாவது அநுபவ வழிமுறையின் கீழ் செயற்பாடுகள் நாட்டில் முதல் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது இந்த நிகழ்ச்சித் திட்டமானது ஹின்டாகலயில் உள்ள சீவலி மஹா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.
- **நெநோ தொழில்நுட்பத்தில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டம்:** நெநோ தொழில்நுட்பத்தில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது கட்டம் பூரணப்படுத்தப்பட்டது. மாகாண விஞ்ஞான பணிப்பாளர், வலய விஞ்ஞான பணிப்பாளர்கள், நாட்டின் சகல மாகாணங்களையும் உள்ளடக்கியதாய் சேவையிலுள்ள ஆலோசகர்கள் ஆகிய 315 பேர் 6 பயிற்சிப் பட்டறைகளின் ஊடாக பயிற்று விக்கப்பட்டனர்
- **ஒலிம்பியாட் சம்மேளனம்:** நாட்டிற்குள் சகல ஒலிம்பியாட் செயற்பாடுகளை கூட்டிணைப்பதற்கும் மற்றும் இவ்விடயம் தொடர்பிலாக தேசிய மட்டத்தில் உள்ள முழு மொத்த பொறுப்பினையும் பொறுத்துக் கொள்ளவும் இலங்கை ஒலிம்பியாட் சம்மேளனம் தாபிக்கப்பட்டது. இது தொடர்பிலான வரைவு விருத்தி செய்யப்பட்டது.
- **இலங்கை தேசிய விஞ்ஞான நிலையம்:** சிங்கப்பூர் விஞ்ஞான நிலையம் வழங்கிய கண்காட்சிப் பொருட்களுடன் விஞ்ஞான பணி காட்சியொன்று தாபிக்கப்பட்டது. தாமே செய்துப் பார்க்கின்ற அநுபவ அறிவினை பெறக்கூடிய வசதியை வழங்கிய கண்காட்சி இலங்கையில் நடந்தது இதுவே முதல் தடவையாகும்.
- **விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்ட போட்டி (SPRC) :** முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் SPRC ஆனது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காட்டியது இம்முறை

47 கருத்திட்டங்கள் இறுதிப் போட்டியில் போட்டியிட்டன. கருத்திட்டங்களும் பெரிய அளவில் ஒரு முன்னேற்றத்தை காட்டியது.

## 2. பிரசுரிப்புகள்

### 2.1. விதுரவ விஞ்ஞான சஞ்சிகை

இந்த சஞ்சிகையின் 28 ஆம் தொகுதியின் மூன்று பிரசுரிப்புகளும் (சகல மூன்று மொழிகளிலும்) உரிய நேரத்தில் பிரசுரிக்கப்பட்டன. இந்த பிரசுரிப்புகளாவன, ஒவ்வொரு நாளும் வாழ்க்கைக்கு இரசாயனம், மரபுரிமையியல், தொடர்ச்சியான அபிவிருத்திக்கு தற்காலம், எதிர்காலம் மற்றும் புத்தாக்கம் பற்றியவிபரங்களை தரும் ஆக்கங்களாவன, இத்துறைகளில் மிகவும் சிறப்புடைய நிபுணர்களினால் எளிய மொழி நடையில் மாணவர்களால் கூட விளங்கிக் கொள்ளக் கூடிய விதத்தில் எழுதப்பட்டுள்ளது. தொகுதி 27 இன் விசேட வெளியீடான தமிழ் பதிப்புரு காலநிலை மாற்றம், தணிப்பும் இளைப்பாக்கமே பற்றியும் மற்றும் தொகுதி 27 இன் இலக்கம் 02 ஆன ஆங்கில பதிப்புருவானது, தேசிய அபிவிருத்திக்கான கடல் வளங்கள் என்பதை பற்றியும் 2011 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டன. ஒவ்வொரு பதிப்புருவினதும் பிரதிகளாவன தேசிய விஞ்ஞான மன்றத்துடன் பதிவு செய்துக் கொண்ட பள்ளிக் கூட விஞ்ஞான சங்கங்களிடையேயும் (446) பல்கலைக்கழக விஞ்ஞான நூலகங்களிடையேயும் (25), வள நிலையங்களிடையேயும் (240) பகிரப்பட்டது.

### 2.2. வித்யா செய்தி மடல்

இவ்வருட காலப்பகுதியில் இடம் பெற்ற தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற்பாடுகள் அதாவது தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் நிறுவகத்தின் அண்மைக் காலத்தில் இடம் பெற்ற நிகழ்வுகள் போன்ற தகவல்களை உள்ளடக்கி விதாதா செய்தி மடலின் நான்கு பதிப்புருக்கள் ஜனவரி, ஏப்ரல், ஜுலை மற்றும் ஒக்டோபர் மாதங்களில் பிரசுரிக்கப்பட்டது. அத்துடன் இச்செய்தி மடலானது மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் வழங்கிய ஆராய்ச்சி மானியங்கள், பூரணப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மானிய கருத்திட்டங்கள், மற்றும் வழங்கப்பட்ட பிரயாண மானியங்கள் என்பவற்றை உள்ளடக்கும். ஒவ்வொரு பதிப்புருவினதும் 250 பிரதிகளுக்கும் மேல் தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற்குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக நூலகங்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவகங்கள் என்பனவற்றிக்கிடையே பதிரப்பட்டது.

### 2.3. விஞ்ஞான புத்தகத் தொகுதி

இவ்வருட காலப்பகுதியில் விஞ்ஞான புத்தகத் தொகுதியின் கீழ் ශ්‍රී ලංකාවේ ආක්‍රමණශීලී ශාක என்ற நூல் பிரசுரிக்கப்பட்டது. விஞ்ஞான புத்தகத் தொகுதி நூல்கள் பிரசுரிக்கப்படலின் நோக்கானது, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பில் மக்களிடையே பரவியுள்ள வாசிப்பு சாதனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படல் வேண்டும் என்பதாகும்.

## 3. பள்ளிக்கூட விஞ்ஞான சங்க (SSS) நிகழ்ச்சித் திட்டம்

2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறாக நோக்குகையில் பதிவு செய்யப்பட்ட பள்ளிக்கூட விஞ்ஞான சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 630 ஆகும். 2011 ஆம் ஆண்டில்

மேற்கொள்ளப்பட்ட புதிய பதிவுகள் 141. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய ஊடகங்களில் பதிவு செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை முறையே 53, 81, 01 ஆகும். 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், தமிழ் மொழி மூலம் பதிவு செய்யப்பட்ட பள்ளிக்கூட விஞ்ஞான சங்கங்களின் எண்ணிக்கையில் குறிப்பிட்டளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க கூடியதாக இருந்தது. 2010 ஆம் ஆண்டில் தமிழ் மொழி மூலம் பதிவு செய்யப்பட்டவை வெறும் 03 ஆக இருக்கும் அதே வேளையில் 2011 ஆம் ஆண்டில் அது 87 ஆக அதிகரித்துள்ளது.

## 3.1. பள்ளிக் கூடங்களுக்கு சேவை – நடப்பு விடயங்களை பற்றிய விரிவுரை தொகுப்பு

பள்ளிக் கூடங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட 15 வது விஞ்ஞன தின நிகழ்ச்சித் திட்டங்களின் போது, உள்ளூர் விஞ்ஞானிகளின் சேவையானது பதிவு செய்யப்பட்ட பள்ளிக் கூடங்களுக்கு வழங்கப்பட்டது. இதன் நோக்கானது விஞ்ஞான தொழில்நுட்பத்தில் வேறுபட்ட துறைகளில் ஏற்பட்ட அண்மித்த அபிவிருத்திகள் பற்றிய அறிவினை மாணவர்களுக்கு வழங்குவதாகும். பள்ளிக் கூடங்களின் கோரிக்கைகளுக்கு இணங்க 01 தொனிப் பொருளில் விரிவுரைகள் வழங்கப்ட்டன. அவையாவன, (1) மனிதனும் சூழலும், (2) சூழலில் மனிதனின் தாக்கம், (3) நெநோ தொழில்நுட்பம் (4) இயந்திர சமுதாயத்துடன் தொடர்புற்ற உற்பத்திகள், (5) மின்னலும் இடியும், (6) காடுகள்: உங்கள் சேவையில் இயற்கை, (9) இரசாயனவியல்: எமது வாழ்வும் எதிர்காலமும், (10) தேசிய விஞ்ஞான மன்றமும் பள்ளிக் கூட சமுதாயமும் என்பனவாகும்.

## 3.2. இடை பள்ளிக்கூடங்களுக்கிடையேயான விஞ்ஞான சங்க நிகழ்ச்சித் திட்டங்கள்

நவம்பர் மாதத்தில் கொண்டாடப்பட தீர்மானித்திருந்த உலக விஞ்ஞான தினமானது 2012 ஜனவரி மாதம் கொண்டாடப்படுவதாக தள்ளிப் போடப்பட்டது. எவ்வாறாயினும் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய போட்டிகளாவன, ஏற்கனவே திட்டமிட்ட படி ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்த தலைப்பான "தொடர்ச்சியான அபிவிருத்திக்கு புத்தாக்கம்" என்பதாகும் இப்போட்டியின் நோக்கானது, விஞ்ஞான துறைகளின் வேறுபட்ட துறைகளில் ஏற்பட்டுள்ள அண்மித்த அபிவிருத்திகளையும் மற்றும் நாளாந்த செயற்பாட்டில் விஞ்ஞான அறிவினை பிரயோகப்படுத்தலையும் மேம்படுத்துதல் ஆகும் மேற் கூறப்பட்ட தலைப்பின் கீழ் பின்வரும் போட்டிகள், பதிவு செய்யப்பட்ட விஞ்ஞான சங்கங்களிடையே இடம் பெற்றன.

- குறும் விஞ்ஞான நாடகம்
- விஞ்ஞானியாக பாத்திர மேற்று நடித்தல்
- கைகளால் செய்யப்படும் பதாகைகள்
- டிஜிட்டல் கதை கூறல்
- விஞ்ஞான புனைக் கதை

விஞ்ஞானிகளாக பாத்திரமேற்று நடித்தல் மற்றும் குறும் விஞ்ஞான நாடகம் என்பன முறையே மஹரகமயில் உள்ள தேசிய கல்வி நிறுவகத்தில் ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதியும் மற்றும் பௌத்த கலாச்சார நிறுவகத்தில் ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதியும் இடம் பெற்றது. இறுதிப் போட்டிக்கான போட்டியாளர்கள், இலங்கையில், காலி - ஸ்ரீ தம்மா வித்தியாலய, டபுதுவ, கண்டி – அடிப்படை கற்கைகள் நிறுவகம், அநுராதபுர –

திறந்த பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பில் தேசிய கல்வி ஆகிய நான்கு இடங்களில் நடாத்திய செய்மதி நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக தெரிவு செய்யப்பட்டனர். நடுவர் குழாமானது விஞ்ஞானிகள், ஊடாக ஆளணியினர், ஓவியர்கள் மற்றும் தேசிய விஞ்ஞான மன்ற பிரதி நிதிகளை உள்ளடக்கும். கையால் செய்யப்பட்ட பதாகைகள், டிஜிட்டல் கதை கூறல், விஞ்ஞான புனைக் கதை தொடர்பிலான போட்டிகள் தேசிய விஞ்ஞான மன்ற வளாகத்தில் இடம் பெற்றது. வெற்றிப் பெற்றவர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

## 3.3. சிறந்த செயலாற்றுகையை காண்பித்த பள்ளிக் கூட விஞ்ஞான சங்கங்களுக்கு விருது வழங்கல்.

2010 ஆம் ஆண்டில் உயர் செயலாற்றுகையை காண்பித்த கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிக் கூடங்களுக்கு சான்றிதழுகளும் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. பெற்றுக் கொள்ளப்பட்ட நட்சத்திரங்களின் எண்ணிக்கையே செயலாற்றுகை மதிப்பீட்டு கருவியாகும். தேசிய விஞ்ஞான மன்றத்துடன் பதிவு செய்யப்பட்ட பள்ளிக் கூட விஞ்ஞான சங்கங்களை ஊக்குவிக்கும் முகமாக வருடாந்தம் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைபெறுகிறது. இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் மாணவர்களின் செயற்றிறனை அதிகப்படுத்துவதாக அமைகிறது.

1. ஸ்ரீ சங்கமித்தா மகளிர் தேசிய பாடசாலை, மாத்தளை – 5 நட்சத்திரம்
2. டட்லி சேனாநாயக வித்தியாலயம், கொழும்பு 05 – 05 நட்சத்திரம்
3. ஞானோதய மஹா வித்தியாலயம், களுத்துரை - 05 நட்சத்திரம்
4. ஸ்வர்ண ஜயந்தி மஹா வித்தியாலயம், கேகாலை - 05 நட்சத்திரம்
5. விக்ரமபாகு மத்திய கல்லூரி, கம்பஹா - 05 நட்சத்திரம்
6. ரத்னவாள மகளிர் வித்தியாலயம், கம்பஹா - 05 நட்சத்திரம்
7. ஹரிஸ்சந்திர தேசிய பாடசாலை, நீர் கொழும்பு - 05 நட்சத்திரம்

## 3.4. பள்ளிக்கூட மாணவர்களிடையே விஞ்ஞானத்தை மேம்படுத்தும் ஆசிரியர்களுக்கான விருது.

தேசிய விஞ்ஞான மன்றத்துடன் பதிவு செய்துள்ள பள்ளிக்கூட விஞ்ஞான சங்கங்களின் ஆசிரியர்கள், விஞ்ஞானத்தை பள்ளிக்கூட மாணவர்களிடையே பரப்புவதற்கு வழங்கிய பங்களிப்பினை அடிப்படையாக கொண்டு அவ் ஆசிரியர்கள் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படுகின்றனர் இது பற்றிய வகையில் 2010 ஆம் ஆண்டில் வெற்றி பெற்ற ஆசிரியரான, கேகாலையில் உள்ள ஸ்வர்ண ஜயந்தி மஹா வித்தியாலயத்தை சேர்ந்த திருமதி. டி வந்தி களுஆராய்ச்சிக்கான விருது, 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

1. திருமதி. டி.டி. பிரேமகாந்தி, டட்லி சோநாயக்க கல்லூரி, கொழும்பு 05
2. திரு. எச்.எச். திலகரட்ன, விக்ரமபாகு மத்திய கல்லூரி, கம்பொல
3. திருமதி. பி.எல். சந்திரிக்கா லலனி, ஹரிஸ்சந்திர கல்லூரி, நீர் கொழும்பு
4. திரு. பி.ஜெ.எல்.ஜி. நோநிஸ், டி. மெசனட் கல்லூரி, கந்தானை
5. திருமதி. எச்.எம்.சி. பண்மெனி மெனிக்கே, மலியாதேவ வித்தியாலயம், குருநாகல்

மதிப்பிற்குரிய சான்றிதழ்களை பெற்றவர்கள் பற்றிய விபரங்கள் வருமாறு.

1. திரு. டி.எ. லலிதா டி சில்வா, ஸ்ரீ தம்மா கல்லூரி, லபுதுவ, காலி
2. திருமதி. எல்.எ.எ. புஸ்பகாந்தி, ஸ்ரீ நிசங்க மத்ய மஹா வித்தியாலயம், இதுல் கொடகந்த

## 3.5. விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தியமைக்காக பேராசிரியர். எம்.டி.எம். ஜிப்ரி ஞாபகார்த்த விருது

விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை பிரிவு தொடங்கப்பட்ட ஆண்டான 2005 ஆம் ஆண்டிலிருந்து அப்பிரிவுக்குரிய ஆலோசனை குழுவின் தலைவராக கடமையாற்றிவரும் பள்ளிக் கூட விஞ்ஞான சங்க நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக வேறுபட்ட விஞ்ஞான செயற்பாடுகளை தேசிய மட்டத்தில் ஆரம்பித்து வைத்தவருமாகிய காலஞ்சென்ற பேராசிரியர். ஜிப்ரி அவர்களை கௌரவிக்கும் முகமாக விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தியமைக்கான தேசிய விருதானது விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தியமைக்கான பேராசிரியர் எம்.டி.எம். ஜிப்ரி ஞாபகார்த விருது எனப் பெயரிடப்பட்டது. பொது மக்களுக்கு விஞ்ஞானத்தை தேசிய மட்டத்தில் வழங்கினார் என்ற சேவைக்காக இவ்விருதானது 2011 ஆம் ஆண்டில் கலாநிதி. துலக் துஷித ரனசிங்கவினால் வெற்றிக் கொள்ளப்பட்டது.

## 3.6. நாடகங்களின் ஊடாக விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்துதல் பற்றிய ஆசிரியர் பயிற்சி செயலமர்வு

நாடகங்களின் ஊடாக விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்துதல் என்ற தொனிப் பொருளின் கீழ் மத்திய மாகாணத்தை சேர்ந்த ஆசிரியர்களுக்கான ஒரு பயிற்சி செயலமர்வானது, அடிப்படை கற்கைகள் நிறுவகத்துடன் கூட்டிணைந்து 2011.06.17 ஆம் திகதி ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. பயிற்சி செயலமர்வானது, கண்டியிலுள்ள அடிப்படை கற்கை நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் செய்யப்பட்டது. மத்திய மாகணத்தை சேர்ந்த 18 பள்ளிக் கூடங்களைச் சேர்ந்த 25 ஆசிரியர்கள் இந்தப் பயிற்சி செயலமர்வில் கலந்துக் கொண்டனர் இந்தப் பயிற்சிப் பட்டறையானது, ஒரு ஓய்வு பெற்ற நாடக ஆசிரியரும், ஒரு பொது நலவாய விருது வெற்றி பெறுநரும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் மானியம் பெறுநர்களில் ஒருவருமான வரக்கானெடியாவினால் நடாத்தப்பட்டதுடன் இரு விஞ்ஞான தொடர்பாடலாளர்களான, கலாநிதி, ஜயந்த வட்டாவிதனாகே மற்றும் திரு. துஷித மலலசேகர என்போரினார்களால் இப்பயிற்சி செயலமர்விற்கு உறுதுணை வழங்கப்பட்டது.

சமுதாயத்திற்கு விஞ்ஞான கருது கோள்களை இலகுவாகவும் மற்றும் ஏற்றுக் கொள்ளும் விதத்திலும் செய்வதில் நாடகத்தின் பங்களிப்பு எனும் விடயத்தின் செயல்முறை சார் அநுபவத்தை இந்தப் பயிற்சிப் பட்டறை வழங்கியது. இந்தப் பயிற்சி செயலமர்வின் மூலம் பள்ளிக்கூட விஞ்ஞான போட்டிகளில் போட்டியிடக் கூடிய தரத்தை விட அதிக தரமுடையதாக நாடகத்தை வடிவமைக்கவும் மற்றும் மாணவர்களின் செயலூட்டல் திறனை சிறந்த முறையில் பயன்படுத்தக் கூடிய அறிவினையும் ஆசிரியர்கள் பெறுகின்றனர்.

## 4. பள்ளிக் கூட சமுதாயத்தினரிடையே விஞ்ஞான ஆராய்ச்சியை மேம்படுத்துதல்.

### 4.1. விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்ட போட்டிகள்

#### 4.1.1. விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்ட போட்டிகள் 2010.

2010 ஆம் ஆண்டிற்குரிய விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்ட போட்டிகளாவன 2011. ஜனவரி மாதம் 20 ஆம் திகதி தேசிய விஞ்ஞான மன்றத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. போட்டிக்கு முன்பு 2009 ஆம் ஆண்டு மாணவர்களினை வழி நடத்தவும் கருத்திட்டத்தை முன்னேற்றவும் மூன்று பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. 2010 ஆம் ஆண்டிற்கான இலங்கை விஞ்ஞான மற்றும் எந்திரவியல் சந்தையில் போட்டியிட்ட 16 கருத்திட்டங்களில் சிறந்நதாக பத்து கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டது. கருத்திட்டங்களாவன விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை பிரிவின் தலைமைத்துவ பதவியினை வகிக்கும் திருமதி. சுனெத்ரா பெரேரா, பேராசிரியர். ஜானித லியனகே, கலாநிதி. மயூரி விஜயசிங்க, கலாநிதி. மஹேஸ் எதிரிசிங்க, கலாநிதி. ஜி.எ.எஸ். பிரேம குமார ஆகியோரினால் வழி நடாத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது.

#### 4.1.2. விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்ட போட்டி 2011

இந்நிகழ்ச்சித் திட்டத்தை வலுப்படுத்தலும் மேம்படுத்தலும் 2011 ஆம் ஆண்டில் பல புதிய தீர்வுகளும் திறமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் பெறுபேறாக முன்னைய வருடத்துடன் ஒப்பீட்டு பார்க்கையில் 2011 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட கருத்திட்டங்களின் தரத்திலும் அளவிலும் குறிப்பிட்டு சொல்லத்தக்கதொரு முன்னேற்றம் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நடாத்தவுள்ள இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை 47 இதில் 2010 ஆம் ஆண்டிற்குரியவை 16 ஆகும். இதைவிட மாணவர்களால் விஞ்ஞான முறைகள் திருப்தியளிக்கக்கூடிய விதத்தில் பின்பற்றப்பட்டுள்ளன. என்பதுடன் அறிமுகப்படுத்துகை திறனும் குறிப்பிடத்தக்களவு முன்னேறியுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கருத்திட்டத்தின் தரமும் பெரிதளவில் முன்னேறியுள்ளது.

### 4.2. இலங்கை விஞ்ஞான மற்றும் எந்திரவியல் சந்தை (SLSEF)

#### இலங்கை விஞ்ஞான மற்றும் எந்திரவியல் சந்தை – 2010

2010 ஆம் ஆண்டிற்குரிய இலங்கை விஞ்ஞான மற்றும் எந்திரவியல் சந்தையானது, 2011, பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதி இலங்கை எந்திரவியலாளர்கள் நிறுவகத்தின் (IESL) கேட்போர் கூடத்தில், IESL, இன்டல் EM (தனியார்) நிறுவகம் மற்றும் கல்வி அமைச்சின் கூட்டிணைவுடன் மேற்கொள்ளப்பட்டது. இந்த சந்தையில் IESL இனால் நடாத்தப்பட்ட வருடாந்த போட்டியில் (JIY) கனிஷ்ட புத்தாக்குனர் என்ற போட்டியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒன்பது புத்தாக்கங்களும் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்ட போட்டியிலிருந்து (SPRC) தெரிவு செய்யப்பட்ட பத்து புத்தாக்கங்களும் சந்தைக்கு முன்வைக்கப்பட்டன. கருத்திட்டமானது, மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் (PGIM) பணிப்பாளர் பேராசிரியர். ரிஸ்வி ஷெரீவீனால் தலைமைத்துவம் வகிக்கப்பட்ட ஏழு பேர் அடங்கிய

குழுவினரால் மதிப்பீடு செய்யப்படும், SLSEF 2010 இலிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட மூன்று கருத்திட்டங்களும் தெரிவு செய்யப்பட்டதுடன், அவை 2011 மே மாதம் 8 – 13 ஆம் திகதி வரை அமெரிக்காவில் உள்ள வாஸ் ஏஞ்சலில் இடம் பெற்ற 2011 ஆம் ஆண்டிற்கான சர்வதேச விஞ்ஞான எந்திரவியல் சந்தையில் போட்டியிட்டன.

| மாணவர்களின் பெயர் | கருத்திட்டம் | பள்ளிக்கூடம் |
|---|---|---|
| சிறுவன். ஆர்.எம்.எ.பி. கீர்த்திரட்ன | Drill press with cordless laser centering device | வித்யாரட்ன வித்தியாலய கண்டி |
| சிறுவன். டி.எஸ். திலகரட்ன | Computer port program | ஆனந்தா கல்லூரி கொழும்பு 10 |
| செல்வி. எச்.எம்.என். சசின்தா சுபசிங்க<br>செல்வி. எச்.எம்.என். புத்தினி சுபசிங்க | வேறுபட்ட தாவர பிரித்தெடுப்புகளை பயன்படுத்தி கரப்பான் பூச்சிகளை முற்றாக கட்டுப்படுத்த ஒரு சோதனை | சங்கமித்தா பாலிகா தேசிய பாடசாலை மாத்தளை |

## 4.3. விதுநெத நிகழ்ச்சித் திட்டம்

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் எண்கணித கல்வி பற்றிய தேசிய செயற்குழுவின் கீழ் விதுநெத நிகழ்ச்சித் திட்டமானது, கனிஸ்ட இரண்டாம் நிலை மாணவர்களின் (வகுப்பு 6 – 9) நுண்ணாய்வு திறனை மேம்படுத்தவும் மற்றும் அவர்களை விஞ்ஞான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு ஊக்கப்படுத்தும் முகமாகவும் நடாத்தப்பட்டது. 2011, ஜுன் மாதம் இந்நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டதுடன் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 04 பயிற்சி செயலமர்வுகள், ஹங்வெல கல்வி வலயத்தை செர்ந்த 30 கிராமிய பாடசாலைகளிலிருந்தான 31 ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்டது. ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் மாணவர்கள் பாடசாலையில் ஆராய்ச்சி கருத்திட்டங்களை முன்னெடுத்தனர். இறுதி பயிற்சி செயலமர்வின் போது 17 பள்ளிக் கூடங்களால் 34 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதிக் கட்டமானது, சிறந்த படைப்புகளும் மற்றும் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களும் முன்னளிப்பு செய்யப்பட்டமை ஆகும்.

## 4.4. குடும்ப விஞ்ஞான நிகழ்ச்சித் திட்டம்.

ஒரு கல்வி சார் நிகழ்ச்சித் திட்டம் என்ற வகையில் குடும்ப நிகழ்ச்சித் திட்டத்தில் பிள்ளைகளும், பெற்றோர்களும் விஞ்ஞான செயற்பாடுகளை தாமே செய்வதன் மூலம் இச்செயற்பாடு தொடர்பிலான அநுபவ அறிவினை பெற்றுக் கொள்வார்கள் என்ற அடிப்படையில் முதல் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இளம் பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களுக்கு விஞ்ஞானத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தல் வேண்டும் என்பது இந்நிகழ்ச்சித் திட்டம் விசேடமாகக் கொண்ட குறிக்கோள் ஆகும். விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் எண்கணித கல்வி பற்றிய தேசிய செயற்குழுவின் உறுப்பினராக

கலாநிதி சுனெத்ரா கருணாரட்ன, ஹன்டகலயில் உள்ள சீவலி மகா வித்தியாலயத்தை சேர்ந்த 60 பாலர் வகுப்பு மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் இந் நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தினார். இவ்வருட காலப்பகுதியில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்று பருவ கூட்டத் தொடர்கள் சிறப்பாக நடந்தன. இன்னும் ஏழு கூட்டத் தொடர்கள் 2012 ஆம் ஆண்டில் தொடர்ந்து நடாத்தப்படும்.

## 5. பள்ளிக் கூடங்களுக்கான விஞ்ஞான கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்.

### 5.1. பள்ளிக் கூடங்கள், கைத்தொழிற் துறைகள் மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவகங்களிடையே தொடர்பிணைப்பை தாபித்தல்.

இச் செயற்பாடு தொடர்பில் 2010 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பணியானது தொடரப்படுகிறது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு கைத்தொழிற்துறையாளர்கள் எவ்வாறு பங்களிப்பை வழங்கப் போகின்றார்கள் என்பதனை கலந்துரையாடும் பொருட்டு கைத்தொழிற்துறை பிரதிநிதிகளுடன் ஒரு கூட்டம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இக் கூட்டத்தின் முடிவில் பதினொரு கைத்தொழிற்துறையாளர்கள் பங்கு பெறுதலிற்கு தமது விருப்பத்தை தெரிவித்ததுடன் மாணவர்கள் தமது தொழிற்சாலைக்கு வருகை செய்வதற்கும் விருப்பம் தெரிவித்தனர். அது போன்று தொழிற்சாலைக்கு விஜயம் செய்வதற்கு முன்னரும் பின்னரும் நிரப்பப்படுவதற்கு ஒரு படிவம் தயாரிக்கப்பட்டது. இதன் மூலம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பயனாக எந்தளவு தூரத்திற்கு மாணவரின் அறிவும் திறனும் வளர்ந்துள்ளது என்பதை மதிப்பீடு செய்யலாம். இவ்விடயம் தொடர்பில் பள்ளிக் கூடங்களுக்கு அறிவுச் செய்வதற்கும் அவர்களை நிறுவகத்துடன இணைப்பதற்கும் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இச் செயற்பாடு தொடர்பில் மாகாண மற்றும் வலய விஞ்ஞான பணிப்பாளர்களுக்கு பள்ளிக் கூட மாணவர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் கைத்தொழிற் துறையில் அடிப்படை விஞ்ஞான கருதுகோள்களின் பிரயோகத்தை அறிந்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2. ஒலிம்பியாட் சம்மேளனம்.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் துணையுடன் 2011 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி இலங்கை ஒலிம்பியாட் சம்மேளனம் தாபிக்கப்பட்டது. நாட்டிற்குள் நடக்கும் சகல ஒலிம்பியாட் செயற்பாடுகளில் கூட்டிணைவதற்கும் சகலவற்றையும் உள்ளிட்டதாய் தேசிய மட்டத்தில் இவ்விடயம் சம்மந்தப்பட்ட பொறுப்பினை தாங்கிக் கொள்வதற்கும் இச்சம்மேளனத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பாரளுமன்ற சட்டத்தின் ஊடாக சட்டப்படி இச் சம்மேளனம் தோற்றுவிக்கப்படுவதற்கு ஒரு வரைவுச் சட்டம் முறை வடிவமாக்கம் செய்யப்பட்டது.

#### பதிவுக் கட்டணம்.

மூன்று ஒலிம்பியாட் வேட்பாளர்கள் முறையே 12வது ஆசிய பௌதிக ஒலிம்பியாட்டிலும் (இஸ்ரேல்) சர்வதேச தகவல் போட்டியிலும் (தாய்லாந்து) மற்றும் 8வது சர்வதேச கனிஸ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியிலும் (தென் ஆபிரிக்கா) பதிவு செய்வதற்கான அனுசரணையை தே.வி மன்றம் வழங்கியது.

### 5.3. நெநோ தொழில்நுட்பத்தில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டம்.

மீளாய்வுட்குட்பட்ட காலப்பகுதியில் நெநோ தொழில்நுட்பத்தில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது கட்டமானது வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது. மாகாண விஞ்ஞான கூட்டிணைப்பாளர்கள், வலய விஞ்ஞான பணிப்பாளர்கள், நாட்டின் சகல மாகாணங்களையும் உள்ளடக்கியதாய் சேவையிலுள்ள ஆலோசகர்கள் ஆகிய 315 பேருக்கு நெநோ தொழில்நுட்பமும் அதன் பிரயோகம் பற்றிய அறிவினை வழங்குவதற்கு ஆறு பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டத்தை பேராசிரியர் கெ.எம். நலின் டி சில்வா மற்றும் கலாநிதி ரோஹிணி டி சில்வா (இரசாயனவியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம்) கலாநிதி ரொஹான் முனசிங்க (மின்னணுவியல் தொலை தொடர்பாடல் திணைக்களம், மொறட்டுவ பல்கலைக்கழகம்) மற்றும் கலாநிதி சாந்த அமரசிங்க (. இலங்கை நெநோ தொழில்நுட்ப தனியார் நிறுவகம் (சிலின்டெக்)) ஆகியோர் முன்னெடுத்தனர். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்குகளில் ஒன்றாவது, பள்ளிக் கூடங்களில் சாதாரணதர உயர்தர பாடத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள புதிய பகுதிகள் தொடர்பிலான அறிவினை பங்கு பெறுநர்களுக்கு வழங்கலாகும்.

### 5.4. இலங்கை தேசிய விஞ்ஞான நிலையம் “விஞ்ஞான பணி” கண்காட்சி.

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சுடனும் சிங்கப்பூரில் உள்ள விஞ்ஞான நிலையத்துடனும் கூட்டிணைந்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட “விஞ்ஞான பணி” கண்காட்சியானது 2011 ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 01 ஆம் திகதி வரை பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ‘C’ கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டது. காட்சிப் பொருட்களாவன சிங்கப்பூர் விஞ்ஞான நிலையத்தினால் இலவசமாக எதுவித கட்டணமுமின்றி வழங்கப்பட்டது.அவையாவன கள ஒளிர் மின் விளக்குகள், ஒளி திரிபுத் தோற்றம், எண்கணிதம் மற்றும் காந்த வகைகள். இக்கண்காட்சியின் நோக்கானது மாணவர்களுக்கு இவ் விஞ்ஞான நிலைய சூழலை பற்றிய தொரு அனுபவத்தை பெற்றுக் கொள்ள வாய்ப்பினை வழங்கலாகும். பள்ளிக் கூட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சில விஞ்ஞான கண்காட்சிப் பொருளின் துணையுடன் மாணவர்கள் சில விஞ்ஞான ரீதியிலான கருது கோள்களின் மெய்த் தன்மையை தாமே செய்துப் பார்த்து செயல் முறை ரீதியிலான அறிவினை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தனர். இத்தகைய தன்மையில் இலங்கையில் இடம் பெற்ற முதலாவது கண்காட்சி இதுவே ஆகும்.

இக் கண்காட்சிக்கு கிட்டதட்ட 3000 பள்ளிக் கூட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கிட்டத்தட்ட 1500 பொது மக்கள் என்போர் கலந்துக் கொண்டனர் மற்றும் கலந்துக் கொண்டவர்கள் எழுதிச் சென்ற குறிப்புகள் கண்காட்சியினை பாராட்டுவதாகவும் கண்காட்சியின் மூலம் அவர்கள் பெற்றுக் கொண்ட அறிவினை மெச்சுவதாகவும் இருந்தது.

## 6. விஞ்ஞானத்தை பற்றி பொதுமக்களின் புரிந்துணர்வை அளவாய்தல்.

‘விஞ்ஞானத்தை பற்றி பொது மக்களின் புரிந்துணர்வை அளவாய்தல்’ பணி தொடரப்பட்டது. கொழும்பு மற்றும் குருநாகல் மாவட்டத்தில் தரவுச் சேகரிப்பானது பூரணப்படுத்தப்பட்டது. கட்டமைப்பு ரீதியிலான கேள்விக் கொத்தினை அடிப்படையாகக் கொண்டு பொது மக்கள்

உள்ளடங்கலாக 554 பேரிடமிருந்தும் மற்றும் 645 மாணவர்களிடத்திருந்தும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. ஒரு தொழில்நுட்ப அறிக்கை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 7. பொது மக்களுக்கான விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை நிகழ்ச்சித் திட்டம்.

### 7.1. விருதுகளை வெற்றிக் கொண்ட மிஹிமண்டல கட்புல தொகுப்புகள்.

#### 7.1.1 மின் - ஸ்வாப்ஹிமனி விசேட சிறப்பு விருது.

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு 2011/11/22 ஆம் திகதி நடந்த மின் - ஸ்வாப்ஹிமனி விருது வைபவத்தில் மின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்ற பகுதியின் கீழ் விஞ்ஞானப் பிரபல்யப்படுத்துகை பிரிவினால் விருத்தி செய்யப்பட்ட மிஹிமண்டல கட்புல தொகுப்புகள்(13 ஆவணங்கள்) விசேட சிறப்பு விருதினை வென்றெடுத்தது.

#### 7.1.2 மன்தன் விருது தென் ஆசியா 2011.

2011 டிசம்பர் மாதம் 1ஆம் மற்றும் 2ஆம் திகதிகளில் இந்தியாவில் புதுடில்லியில் ஹெபிடட் நிலையத்தில் நடந்த விருது வைபவத்தில் மின் விஞ்ஞான பகுதியின் கீழ் ''மன்தன் விருது தென் ஆசியா 2011'' எனும் சர்வதேச விருதினை மிஹிமண்டல கட்புல தொகுப்புகள் வென்றெடுத்தது. இத்தகைய ஒரு விருது இந்தியாவில் வழங்கப்பட்டமை இதுவெ முதல் தடவையாகும்.

## 8. பொது மக்களுக்கு விஞ்ஞான தொடர்பாடல் பற்றிய பயிற்சிப்பட்டறை.

"பொது மக்களுக்கு விஞ்ஞான தொடர்பாடல்" எனும் தொனிப் பொருளில் இரு நாள் பயிற்சிப்பட்டறையானது 2011/8/18, 19 ஆம் திகதிகளில் ரஜரட பல்கலைக் கழகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. சமூகத்தினரின் தின வாழ்வில் விஞ்ஞானத்தை ஒரு பகுதியாக்குவதற்கு சமூகத்திற்கும் (பொது மக்கள்) விஞ்ஞானிகளுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கு விஞ்ஞானிகளை விஞ்ஞான தொடர்பாடலாராக பயிற்றுவித்தலே இதன் நோக்காகும். இப் பயிற்சிப்பட்டறையில் பல்கலைக் கழகங்களை சேர்ந்த 30 விஞ்ஞானிகள் மற்றும் வட மத்திய மாகாணத்தை சேர்ந்த விஞ்ஞான நிறுவகங்கள் என்பன இப் பயிற்சிப்பட்டறையில் கலந்துக் கொண்டனர். இந் நிகழ்ச்சித் திட்டமானது 2005 ஆம் ஆண்டில் இடம் பெற்ற 100 விஞ்ஞானிகளை ஒரு தொகுதி விஞ்ஞான தொடர்பாடலாளராக உருவாக்குவதற்கு மேற்கொண்ட பயிற்சியில் ஒரு பகுதியாகும். இப் பயிற்சிப்பட்டறையில் வள ஆளணியினராக திரு.பேர்சி ஜயமான (முன்னைய பிரதம பதிப்பாசிரியர், லங்காதீப) கலாநிதி.ஜயந்த வட்டா விதானகே, திரு.துஷிதா மழலசேகர மற்றும் கலாநிதி.பாலித பண்டார ஆகியோர் கலந்துரையாடல்கள் மற்றும் செயல்முறை சார் பயிற்சிகளை உள்ளடக்கியது.

## 9. தேசத்திற்கு மகுடம் 2011 கண்காட்சியில் தேசிய விஞ்ஞான மன்ற சாவடி.

2011 பெப்ரவரி மாதம் 04-10 வரை புத்தளயில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 2011 ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் தேசிய விஞ்ஞான மன்றம் சிறப்பாக பங்கு

பற்றியது. தே.வி மன்றமானது 2011 மற்றும் 2012 தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு இணைவாக விருத்தியை நோக்கிய பல நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பற்றியது.

### 9.1. 2011 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சிக்கு இணைவாக ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட விஞ்ஞான தின நிகழ்ச்சித் திட்டங்கள்.

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சுடன் கூட்டிணைந்து இரு விஞ்ஞான தின நிகழ்ச்சித் திட்டங்களாவன தம்பவில மற்றும் புத்தளயை சேர்ந்த பள்ளிக் கூட மாணவர்களுக்காக முறையே 2011/01/07 மற்றும் 2011/01/21 ஆம் திகதிகளில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இந்த இரு நிகழ்ச்சித் திட்டங்களிலும் கலந்துக் கொண்ட பங்கு பெறுநர்களின் எண்ணிக்கை 250 ஆகும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கானது தெரிவு செய்யப்பட்ட சில தலைப்புக்களில் விஞ்ஞான அறிவை பள்ளிக்கூட மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்குதலும் மற்றும் பள்ளிக் கூட சமுதாயினத்தினருக்கு தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஆற்றப்படும் சேவைகளை பற்றி அறியப்படுத்தலும் ஆகும். விதுரவ விஞ்ஞான சஞ்சிகையில் (தொகுதி 27, விசேட வெளியீடு, சிங்கள பதிப்புரு) பிரதிகள் பங்கு பெறுநர்களிடையே பகிரப்பட்டது மனித செயற்பாடுகள் மற்றும் சூழல் பாதுகாப்பு பற்றியும் (கலாநிதி. ஜயந்த வட்டவிதானகே) தொற்றாத நோய்கள் பற்றியும் (திரு. துஷித மலலசேகர) தேசிய விஞ்ஞான மன்றமும் பள்ளிக் கூட சமுதாயமும் பற்றியும் (கெ.ஜி. ஜானக கருணாசேகர) மற்றும் நெநோ தொழில்நுட்பம் பற்றியும் (கலாநிதி. ரொஹான் முனசிங்க) அறிமுகப்படுத்துகைகள் செய்யப்பட்டன.)

### 9.2. 2012 தேசத்திற்கு மகுடத்திற்கு இணைவாக ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட விஞ்ஞான தின நிகழ்ச்சித் திட்டங்கள்

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சுடன் கூட்டிணைந்து இருநாள் விஞ்ஞான தின நிகழ்ச்சித் திட்டங்களாவன (பொது மக்களுக்காக குறிப்பாக விவசாயிகளுக்காக) அநுராதபுரத்தில் உள்ள ரம்பாவேல மற்றும் கெபிதிகொலேவா ஆகிய இடங்களில் 2011 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் மற்றும் நவம்பர் 15 ஆம் திகதிகளில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இரு நிகழ்ச்சித் திட்டங்களிலும் கலந்துக் கொண்ட பங்கு பெறுநர்களின் மொத்த எண்ணிக்கை 200 ஆகும். நாளாந்த வாழ்க்கையில் எவ்வாறு விஞ்ஞானத்தை பயன்படுத்தலாம் (கலாநிதி. ஜயந்த வடவிதானகே), சுகாதாரமான வாழ்க்கை முறை (திரு. துஷித மலலசேகர) வறல் வலயங்களில் நீர்பாசன விவசாயம் (கலாநிதி. பி.பி. தர்மசேன), வறண்ட வலயங்களில் நிலவுகின்ற சிறு நீரக நோய் (கலாநிதி. பாலித பண்டார) போன்ற தலைப்புகளில் அறிமுகப்படுத்துகைகள் செய்யப்பட்டன.

## 10. ஊடக நிறுவனத்துடன் கூட்டிணைந்து முன்னெடுக்கப்பட்ட தேசிய விஞ்ஞான மன்ற நடவடிக்கைகள்

### 10.1. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (SLRC)

- 2010 ஆம் ஆண்டில் பள்ளிக் கூடங்களுக்கிடையே இடம் பெற்ற பள்ளிக் கூட விஞ்ஞான சங்க போட்டியில் வெற்றிப் பெற்ற இரு பள்ளிக் கூட நாடகங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் ரூபவாஹினி அலைவரிசைகளின் ஊடாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்த இரு நாடகங்களும் பொலநறுவையில் உள்ள

மெதிரிகிரிய சென்றல் மற்றும் மாத்தளையில் உள்ள ஸ்ரீ சங்கமித்தா மகளிர் தேசிய பாடசாலையிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டதுடன் அவை 2011.03.03 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டது.

- தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற்பாடுகளை ரூபவாஹினி செய்திகளின் ஊடாக பிரசுரிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

### 10.2. இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC)

தேசிய விஞ்ஞான மன்றத்தின் சேவையை பிரசுரிக்கும் முகமாக 08 நிகழ்ச்சிகள் "கலந்துரையாடல்கள்" முறையின் கீழ் சுபரதி (Subarathi) நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

### 10.3. விஜயா புதினப் பத்திரிகை

விஜயா சிறுவர் புதினப் பத்திரிகையில் பல ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று தேசிய விஞ்ஞான மன்றத்தின் சேவைகளை பற்றி விளக்கமாக கூறியது, மற்றைய மூன்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆராய்ச்சி தேடல்கள் மற்றும் மானியம் பெறுநர் பற்றிய விபரங்களை தந்தது. ஆக்கங்களாவன பிள்ளைகளுக்கு விளங்கக் கூடிய விதத்தில் எளிய மொழி நடையில் எழுதப்பட்டிருந்தது. ஆக்கங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு.

I. தேசிய விஞ்ஞான மன்றம் (விஜயா புதினப் பத்திரிகை 2012.04.05)

II. இலங்கையில் நீரிழிவு நோயை தடுத்தலும் அந்நோயினால் ஏற்படக்கூடிய அனர்த்த விளைவுகளும் (RG/2005/HS/16) ஆராய்ச்சி குழுவின் ஒரு உறுப்பினரான வைத்தியர். பிரசாத் கடுவலவுடன் மேற் கொண்ட ஒரு கலந்தரையாடலை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டது. (விஜயா புதினப் பத்திரிகை 2011.05.24)

III. இலங்கையில் நீரியல் நச்சுத் தன்மை பற்றிய உயிரியல் கண்காணிப்பில் ஒரு செயலூட்டம் மிகு கருவி என்ற வகையில் உணவுக்கு பயன்படும் மீனான தலபத் பற்றி ஒரு மதிப்பீடு (RG/2003/Zoo/05) பேராசிரியர். அசோகா பதிரட்னவுடனான கலந்துரையாடல்களின் அடிப்படையில்

IV. இலங்கை பூப்பாத்திகளிலிருந்து மருந்தகவியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்ற ஆக்கக்கூறுகள் (RG/2005/FR/02) பேராசிரியர். வெரன்ஜா கருணாரட்னவுடனான கலந்துரையாடலை அடிப்படையாக கொண்டது.

## 11. சிங்கப்பூரில் உள்ள விஞ்ஞான நிலையத்திற்கு விஜயம் செய்தல்

விஞ்ஞான நிலையத்தின் தொழில்நுட்ப செயற்குழுவின் உறுப்பினரான கலாநிதி. ஜயந்த வட்டாவிடனகே மற்றும் விஞ்ஞான நிலையத்தின் தொழில்நுட்ப செயற்குழுவின் விஞ்ஞான அலுவலரும் கூட்டிணைப்பாளருமான திரு. கெ.ஜி. ஜானக கருணாசேன ஆகியோர் 2011, ஜுன் மாதம் 01 ஆம் மற்றும் 02 ஆம் திகதிகளில் சிங்கப்பூரில் உள்ள விஞ்ஞான நிலையத்திற்கு விஜயம் செய்ததை தொடர்ந்து, இலங்கையிலும் விஞ்ஞான பணி பிரயாண

கண்காட்சியினை ஒழுங்கமைப்பு செய்யும் படி பரிந்துரைத்தனர். எளிய விஞ்ஞான கருது கோள்கள் பற்றிய விளக்கங்களை தாமே அறிந்துக் கொள்ளும் வகையில் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது.

## விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சி பிரிவு (STPRD)

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சிப் பிரிவின் பணியானது, தேசமெங்கிலும் உள்ள கொள்கை அமைப்பாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம், கல்வி மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய துறைகள் பற்றிய தகவல்களை வழங்குதலும் அத்துடன், நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய வகையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தில் முக்கியமான விடயங்கள் தொடர்பில் சமூகத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல். இதனைத் தொடர்ந்து தேசிய விஞ்ஞான மன்றமானது நாடளாவிய ரீதியில் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை பாரமெடுத்ததுடன் அவற்றில் காணப்படும் பிரச்சனைகள், அவற்றின் நிலைமை என்பவற்றினை அறிந்துக் கொண்டு பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் உரிய பரிந்துரைப்புகளை கொள்கை முறை வடிவமாக்கம் மற்றும் திட்டமிடல் செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொண்டது. இதை விட பிரிவானது விஞ்ஞான தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பரப்பெல்லைகள் தொடர்பில் வேறுபட்ட தரவுத்தளங்களை பேணுவதுடன் அவை இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கியதாகவும் இருக்கின்றது. இத்தரவுத்தளங்களாவன கொள்கை திட்டமிடல் பணயப் பொருளாளர்கள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், வெளிநாட்டு நன்கொடையாளர்கள், கொள்கை திட்டமிடல் உறுப்பினர்கள் ஆகியோருக்கு மிகவும் பயனுடையதாக உள்ளது.



### 1. தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அளவளாய்வு

பிரிவானது வழமைப் போல் அதனது தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அளவளாய்வுகளை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை 2004 ஆம் ஆண்டிலிருந்து மேற் கொண்டு வருகிறது. இந்த அளவளாய்வானது, நாட்டின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் நிலையினை ஆராய்ச்சி அபிவிருத்திக்கு மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மற்றும் செலவினங்கள் என்ற அடிப்படையிலும் மனித வளங்களின் அடிப்படையிலும் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் விளை பயன்கள் என்ற அடிப்படையிலும் அறிக்கை செய்கிறது.

2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி அளவளாய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்கள் அடிப்படையில் நோக்குகையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களின் சுட்டிகள் என்பன ஆகும். அவை இலங்கை விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்க புள்ளி விபரவியல் கைந்நூல் 2008 இல்

பிரசுரிக்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டுக்குரிய ஆராய்ச்சி அபிவிருத்தி அளவளாய்வினை பற்றிய தொழில்நுட்ப அறிக்கை 2011 ஆம் ஆண்டில் தொகுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு மே மாதம், தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அளவளாய்வு 2010 பற்றிய நான்காவது அளவளாய்வானது தொடங்கப்பட்டது. இந்த அளவளாய்வானது 2010 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய தரவுகளை சேகரித்தது. 2011 ஆம் ஆண்டில் தரவுகளாவன, உயர் கல்வித்துறை, விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்கள், ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் வெளியூர் அரச சார்பற்ற அமைப்பாண்மைகள் ஆகிய இடங்களை உள்ளடக்கும் வகையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன கைத்தொழிற்துறையின் தரவுகள் சேகரிப்பானது, குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரவியல் திணைக்களத்துடன் கூட்டிணைந்து 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

## 2. விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க கொள்கை ஆராய்ச்சி கருத்திட்டம்

### 2.1. இலங்கையில் மகளிர் விஞ்ஞானிகள் பற்றிய சுவடு ஆய்வு.

இலங்கையில் வேறுபட்ட துறைகளில் பெண்கள் விஞ்ஞானிகளின் பங்களிப்பினை அறிவதற்கும் அவர்களால் முகம் கொடுக்கப்படும் பிரச்சனைகள், தடைகள் என்பன பற்றி அறியவும் அளவளாய்வு மேற் கொள்ளப்பட்டது. தரவு சேகரிப்பானது பகுப்பாய்வு செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட்டது. கொள்கை பரிந்துரைப்புகளுடன் தொழில்நுட்ப அறிக்கையானது 2011 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்டது.

### 2.2. சிறிய நடுத்தர கைத்தொழிற்துறை தொகுதி ஆய்வுகள்

#### 2.2.1. காளானை அடிப்படையாக கொண்ட கைத்தொழிற்துறை பற்றிய விடய ஆய்வு.

இந்த ஆய்வானது, புத்தாக்க செயன்முறையை நுண்ணாய்வு செய்யவும் புரிந்துக் கொள்ளவும் மற்றும் காளான் வேளாண்மையுடன் தொடர்புற்ற வகையில் நிறுவன சூழ்நிலை அத்துடன் நாட்டில் காளானை அடிப்படையாக கொண்ட கைத்தொழிற்துறை பற்றிய விபரங்கள் ஆகியவற்றை அறிந்துக் கொள்ள 2010 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த ஆய்வானது நிலவும் காளான் வேளாண்மையுடன் தொடர்புடைய அரச நிறுவனங்கள், அமைச்சுகள், ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்கள் சிறிய நடுத்தர வியாபார முயற்சிகளை மேம்படுத்தும் கொள்கை திட்டமிடல் அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், அரச சார்பற்ற அமைப்பாண்மைகள், ஏற்றுமதியாளர்கள், வேளாண்மையாளர்கள் மற்றும் இந்த செயற்பாட்டில் சம்பந்தப்பட்டுள்ள ஏயை சகலர் ஆகியோரின் முறையான செயற்பாடு தொடர்பில் தன் அவதானத்தை செலுத்துகிறது. தரவுகளாவன அ) இந்த தொடர்பிணைப்புக்களில் உள்ள வலுக்கள் மற்றும் பலவீனங்கள் ஆ) இந்த முறைமையில் உள்ள தடைகளும் பிரச்சனைகளும் (இ) ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப இடைவெளிகள் என்பவை தொடர்பில் தீர்வுகளை பெறுவதற்கு பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆய்வானது 2011 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டதுடன் கைத்தொழிற்துறையை மேம்படுத்துவதற்கு தேவையான கொள்கை பரிந்துரைப்புகளுடன் தொழில்நுட்ப அறிக்கை விருத்தி செய்யப்பட்டது.

### 2.2.2. மூங்கில் சார் உற்பத்திகளை பற்றிய விடய ஆய்வு

இலங்கையில் மூங்கிலை சார்ந்த சிறிய நடுத்தர கைத்தொழிற்துறை ஆய்வானது, பகிர்வு, தொடர் பிணைப்புகள் மற்றும் இலங்கையில் மூங்கில் சார் சிறிய நடுத்தர கைத்தொழிற்துறையில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் அத்துடன் இக்கைத்தொழிற்துறையில் உள்ள பிரச்சனைகள், தடைகள் மற்றும் இந்த கைத்தொழிற்துறையில் ஆராய்ச்சி தொழில்நுட்ப இடைவெளிகள் என்பவற்றை அறிந்துக் கொள்ள ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆய்வு தொடர்பிலான தரவு சேகரிப்பானது 2011 மே மாதம் தொடங்கப்பட்டு 2012 ஆம் ஆண்டும் தொடரப்படும். 2012 ஆம் ஆண்டில் கருத்திட்ட முடிவில், இக்கருத்திட்டத்தை விருத்தி செய்வதற்கும் நிலைத்திருப்பதற்குமான கொள்கை பரிந்துரைப்புகள் தொடர்புடைய அதிகாரிகளுக்கு கூறப்பட்டது.

## 2.3. 1998 – 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட தேசிய விஞ்ஞான மன்ற ஆராய்ச்சி மானியங்கள் பற்றிய மதிப்பீடு: செயன்முறை, விளைவுகள், விளைபயன்கள் மற்றும் சமுக பொருளியல் தாக்கம்.

2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த ஆராய்ச்சி கருத்திட்டமானது, i) அறிவினை உருவாக்கலும் தொழில்நுட்ப பிறப்பாக்கலும் ii )விஞ்ஞான தொழில்நுட்ப செயற்றிறன் நிர்மாணம் மற்றும் ஆராய்ச்சி, அபிவிருத்தி, புத்தாக்கம் ஆகிய முக்கிய பரப்பெல்லைகளில் சம்பந்தப்படுவதற்கு தேசிய ஆராய்ச்சி முறைமையினை நிலைத்திருக்கச் செய்தல் iii) தேசிய உற்பத்தி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் தர முன்னேற்றம் அத்துடன் விஞ்ஞான தொழில்நுட்ப தகவல் பிறப்பாக்கல், சேகரிப்பு, செயன்முறை மற்றும் பரப்புதல். ஆகிய விடயங்களின் அடிப்படையில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆராய்ச்சி மானியத்திட்டங்கள் பற்றிய ஒரு விரிவான மதிப்பீட்டினை நடாத்துகிறது.

பிரிவினால் ஒரு முன்னோடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த முன்னோடி ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில், இந்த ஆய்வுக்காக நியமனம் செய்யப்பட்ட உபசெயற்குழுவின் வழிகாட்டல்களின் கீழ், ஒரு விரிவான ஆராய்ச்சி கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. 2011, டிசம்பர் மாதம் இக்கருத்திட்ட பிரேரணையானது, தேசிய விஞ்ஞான மன்றத்தின் முகாமைத்துவ சபைக்கு அங்கீகரிப்பிற்காக சமர்பிக்கப்பட்டது.

## 3. விஞ்ஞான தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஏனைய தரவுத்தளங்கள்

- தம் தாய்நாட்டைத் துறந்து (இலங்கை) புலம் பெயர்ந்த விஞ்ஞானிகள் - கருத்திட்டம் நடைப்பெற்றுக் கொண்டிருப்பதுடன் வருடம் பூராவும் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.
- தொழில்நுட்பவியல் நபர்கள் பற்றிய தரவுத்தளங்கள் - 2011, மே மாதம் தரவுச் சேகரிப்பு தொடங்கப்பட்டு தொடரப்படுகின்றது.
- க.பொ.த. உயர்தர விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களை பற்றிய தரவுத்தளம் - 2011, ஜுன் மாதம் தரவு சேகரிப்பு தொடங்கப்பட்டது. எனினும் தற்போது பதவியினரில் உயர் பற்றாக்குறை காரணமாக தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.
- இலங்கையிலுள்ள புத்தாக்குனர் பற்றிய தரவுத்தளம் - கருத்திட்டம் நடைப்பெற்றுக் கொண்டிருப்பதுடன் வழமை போல் தகவல்கள் இற்றைப்படுத்தப்படுகின்றது.

## 4. விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை பற்றிய போட்டிற்குரிய ஆராய்ச்சி மானியம்

இவ்வருட காலப்பகுதியில் விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சி தொடர்பில் 04 மானிய விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில் கீழே தரப்பட்டவாறு நிதியீடு செய்தலிற்கு இரு கருத்திட்டங்கள் அநுமதிக்கப்பட்டன.

| மானிய இலக்கம் | மானியம் பெறுநர்/நிறுவகம் | கருத்திட்ட தலைப்பு/காலவரையறை | மொத்த ஒதுக்கீடு |
|---|---|---|---|
| RG/2011/STP/01 | கலாநிதி. பராக்கிரம சமரதுங்க கொள்கை கற்கைகள் நிறுவகம் | தாவர வகைகள் மற்றும் கமக்காரர்களின் பாரம்பரிய அறிவினை பாதுகாப்பதில் அதிபுலமைச் சொத்துரிமை - இலங்கையில் அரிசி பற்றிய ஒரு விடய ஆய்வு | 702,400 |
| RG/2011/STP/02 | பேராசிரியர். அஜித் டி அல்விஸ் மொறட்டுவை பல்கலைக்கழகம் | இலங்கையில் போக்குவரத்து துறைக்கு உயிர் எரி பொருள் பற்றிய விரிவான ஆய்வு - காபன் வியாபாரத்திற்கு தொழில்நுட்ப பொருளாதார மற்றும் தேசிய வாய்ப்பு | 2,967,000 |

## 5. சமூக விஞ்ஞானத்தில் தேசிய செயற்குழு.

2011 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட சமூக விஞ்ஞானத்திற்கான தேசிய செயற்குழுவானது மூன்று வருட காலத்திற்கு அதனது செயல் திட்டத்தை தயாரித்தது. இச்செயல் திட்டமான விசேடமாக, நாட்டில் சமூக விஞ்ஞான ஆராய்ச்சியை மேம்படுத்தவையும் மற்றும் தேசிய அபிவிருத்தியை நோக்கி இணைந்து செயற்படுவதற்கு சமூக விஞ்ஞானிகளின் பணியை பெற்றுக் கொள்வதனையும் உள்ளடக்கியுள்ளது. 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயற்குழுவானது கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து பூரணப்படுத்தியது.

**5.1. தேசிய ரீதியாக முக்கியமாக முன்னுரிமை அளிக்கப்பட வெண்டிய ஆராய்ச்சி பரப்பெல்லைகளை தொகுத்தல்.**

**5.2. இளம் விஞ்ஞானிகளுக்காக “சமூக விஞ்ஞான ஆராய்ச்சியும் மற்றும் விரிவான ஆராய்ச்சி பிரேரணை விருத்தியும்” எனும் தலைப்பில் இரு நாள் பயிற்சி செயலமர்வானது 2011 நவம்பர் மாதம் 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் நடாத்தப்படல்**

**5.3. டிசம்பர் மாதம் 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் செயற்குழு உறுப்பினர்கள் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் இரு வானொலி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பெறல் (சுபராதி – Subarathi) சிங்கள தேசிய சேவையில், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கருப்பொருளின் கீழ்**

i. சமூக விஞ்ஞான ஆராய்ச்சியும் தேசிய அபிவிருத்தியும்

ii. சமூக விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் தேசிய முன்னுரிமைகள்

## 6. “தேசிய புத்தாக்க முறைமை தொழிற்பாட்டு திறமுறைகள் மற்றும் முகாமைத்துவ அம்சங்கள்” பற்றிய STEPAN சர்வதேச பயிற்சிப் பட்டறை (2011, நவம்பர் 02,03)

விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை ஆசிய வலையமைப்பிற்கான (STEPAN) தலைமைத்துவ பதவியை தேசிய விஞ்ஞான மன்றம் 2008 ஒக்டோபரிலிரந்து 2011 நவம்பர் வரையான 03 வருட காலப்பகுதிக்கு வகிக்கின்றது. விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சி பிரிவும் மற்றும் சர்வதேச தொடர்பிணைப்பு பிரிவும் கூட்டிணைந்து “தேசிய புத்தாக்க முறைமை, தொழிற்பாட்டு திறமுறைகள் மற்றும் முகாமைத்துவ அம்சங்கள்” எனும் தலைப்பில் ஒரு சர்வதேச பயிற்சிப் பட்டறையை 2011 செப்டெம்பர் மாதம் 2,3 ஆம் திகதிகளில் கொழும்பிலுள்ள கலதாரி ஹோட்டலில் ஒழுங்கமைத்தது. இலங்கை உட்பட STEPAN உறுப்புரிமை நாடுகள் 11 இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டன. கீழ் குறிப்பிடப்பட்ட பிரச்சனைகள் இனங்காணப்பட்டதுடன் அவை பயிற்சிப் பட்டறையில் அதிகாரபூர்வமாக அறிக்கை செய்யப்பட்டது.

- இலங்கையில் தேசிய புத்தாக்க திறனில் செல்வாக்கு செலுத்தும் வேறுபட்ட விடயங்களின் ஆய்வினை முன்னெடுப்பதில் முக்கியத்துவம் செலுத்துதல்
- புத்தாக்க செயன்முறையில் அதிக இலக்கினை செலுத்தும் விதமாக பல்கலைக்கழக கல்வியை பொருந்தச் செய்தல்
- பெறுமானம் சேர்க்கப்பட்ட ஏற்றுமதி உற்பத்திகளுக்கு சலுகைக் கட்டணங்கள், தேசிய மட்டத்திலான ஏற்றுமதிகளுக்கு ஊக்குவிப்புகளை வழங்கல், ஆக்கப்பூர்வான திறனை மேம்படுத்துவதன் மூலம் கல்வி மற்றும் உயர் கல்வி முறையினை விருத்தி செய்தல், பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் தொழில் முயலுனர் திறன் விருத்தி பற்றிய பாடத்தை உள்ளடக்கல்
- நாட்டிற்கு உரித்துடைய NIS இனை வலுவுடைய தாக்குவதற்கான தொழிற்பாட்டு திறமுறைகளினை விருத்தி செய்தல்
- NIS கற்கையை விருத்தி செய்யும் போது ஆராய்ச்சி தொடர்பிலான விடயங்களை உள்ளடக்குவதில் அவதானம் செலுத்துதல்
- புத்தாக்கத்தில் பணயப் பொருளாளரின் தொடர்பிணைப்பை வலுப்படுத்துதல் மற்றும் யுனெஸ்கோ புதிய கண்டுபிடிப்பு விருது போன்ற ஒரு குறித்துரைக்கப்பட்ட புதிய பட்டத்தின் கீழ் புத்தாக்கங்கள் அங்கீகரிக்கப்படுவதற்கும் விருது பெறுவதற்கும் யுனெஸ்கோ இப்புத்தாக்கம் தொடர்பிலான விடயங்களில் ஈடுபடலிற்கு முக்கியத்துவம் வழங்கல்

## 7. பிரதான விளைவுகள்

### 7.1. தொழில்நுட்ப அறிக்கைகள்

- இலங்கையில் விஞ்ஞான தொழில்நுட்பத்தில் கலாநிதி பட்டம் பெற்றவர்கள் பற்றிய சுவடு ஆய்வு
- இலங்கையில் மகளிர் விஞ்ஞானிகளின் சுவடு ஆய்வு

### 7.2. பிரசுரிப்புகள்

**சீதா ஐ. விக்ரமசிங்க (2011).** இலங்கயில் சிறிய நடுத்தர வினை முயற்சிகளின் நிலையும் விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவன வலையமைப்பின் ஊடாக அவர்களின்

புத்தாக்க விளைவளவை மேம்படுத்துதல் *Tech Moniter* 2011 ஜுலை, ஆகஸ்ட், pp 11 – 19.

**8. தேசிய மற்றும் நிறுவனரீதியிலான செயற்குழுவில் பதவியினர் பிரதிநிதித்துவம் செய்தல்**

- கலாநிதி. சித்ரா ஐ. விக்ரமசிங்க, STPRD/தலைவர் அவர் ஆற்றிய கடமைகளாவன:

  i. கொழும்பு 07 வித்யா மந்திரியாவில் அமைந்துள்ள இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் பிரிவு-டி யின் 2011 ஆம் ஆண்டின் தலைவர் (வாழ்க்கை மற்றும் நில விஞ்ஞானம்) மற்றும் சபை உறுப்பினர்

  ii. நுகே கொடநாவலயில் அமைந்துள்ள தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் சிரேஸ்ட விஞ்ஞான முன்னரங்கில் 2011 ஆம் ஆண்டில் உறுப்பினர்

- கலாநிதி. பி.ஆர்.எம்.பி. டில்ருக்ஷி, விஞ்ஞான அலுவலர்/ STPRD அவர் ஆற்றிய கடமைகளாவன:

  i. கொழும்பு 07 வித்யா மந்திரியாவில் அமைந்துள்ள இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் பிரிவு-டி யின் 2011 ஆம் ஆண்டின் தலைவர் (வாழ்க்கை மற்றும் நில விஞ்ஞானம்)

**9. பதவியினர் மேலதிக பாடத்திட்ட செயற்பாடுகளில்**

- **கலாநிதி. சித்ரா ஐ. விக்ரமசிங்க, STPRD** யின் தலைவர் தொடர்ந்தும் அவரது சேவைகளாவன வறுமாறு வழங்கப்பட்டன.

  i. இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தின் சஞ்சிகையிள் உதவி பதிப்பாசிரியர்

  ii. 2009 ஆம் ஆண்டிலிருந்து தேசிய விஞ்ஞான மன்றத்தின் சிறு தருவித்து வழங்கல் செயற்குழுவின் தலைவர்

  iii. விஞ்ஞான கல்வியில் முது விஞ்ஞான மானி பட்டத்துக்கு தம்மை பதிவு செய்த ஒரு மாணவனுக்கும், பேராதெனிய பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானத்தில் பட்டப்பின் நிறுவகத்தில் தம்மை பதிவு செய்த ஒரு மாணவனுக்கும் கருத்திட்ட கண்காணிப்பாளர்

     அ) திருமதி. சுஜீவ பொல்கம் பொல – PGIS/SE/MSc/BE/08/07 – பூரணப்படுத்தப்பட்டது.

     ஆ) திரு. சபாநாயகம் அஹிலன் - PGIS/SE/MSc/PE/08/05 – ஆய்வுக் கட்டுரை சமர்பிக்கப்பட்டது.

- **கலாநிதி. பி.ஆர்.எம்.பி. டில்ருக்ஷி, விஞ்ஞான அலுவலர்** அவர் ஆற்றிய கடமைகளாவன:

  i. தேசிய விஞ்ஞான மன்றத்தின் தரமுகாமைத்துவ முறைமையின் பிரதான குழுவின் உறுப்பினர்

  ii. எம்.பில். மாணவர் ஒருவரின் கருத்திட்ட கண்காணிப்பாளர் (முழு நேரம்) பேராதெனிய பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின் படிப்ப நிறுவகத்தின்

உயிர் இரசாயனவியல் மற்றும் மூலக் கூற்றுக்குரிய உயிரியல் கல்விச் சபையில் பதிவு செய்யப்பட்டவர்.

## தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையம் (NSLRC)

### 1. அறிமுகவுரை

மீளாய்வுட்குட்பட்ட காலப்பகுதியில் தேசிய விஞ்ஞான நூலக வள நிலையமானது, இலங்கை விஞ:ஞான தொழில்நுட்ப தகவல் வலையமைப்பின் குவிவுமுனைப் புள்ளியாக தொடர்ந்தும் செயற்படுகிறது. புதிய தொழில்நுட்பவியல் விருத்திகளுக்கு இணைவாக பாவனையாளர்களின் மாறுபடும் தேவைகளுக்க்கு ஏற்ப சேவைகளை வழங்கும் வகையில் வருட காலப்பகுதியில் பல திறமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அவை சேர்த்துக்கொள்ளவும் பட்டன.

**முக்கிய விடயங்கள்** - இவ்வருட காலப்பகுதியில் கீழ் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்கள் சாதிக்கப்பட்டன.

**இலங்கை விஞ்ஞான சுட்டி:** இலங்கை விஞ்ஞான சுட்டி தரவுத்தளத்ததை முழுத் தொகுதி ஆவணங்களின் டிஜிட்டல் நூலகமாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாவன, வருடகாலப்பகுதியில் ஒரு விரைவான வளர்ச்சியினை காட்டியது. 2011 டிசம்பர் 31இல் உள்ளவாறாக நோக்குகையில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் LAN இனூடாக நுழையக்கூடிய முழுத்தொகுதி ஆவணங்களின் மொத்த எண்ணிக்கை 23553ஆக பதிவு செய்யப்பட்டுள்ள அதே வேளையில் இது தரவுத்தளத்தில் பதியப்பட்ட ஆவணங்களின் மொத்த எண்ணிக்கையில் 39% ஆகும்.

**தேசிய டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கருத்திட்டம்:** தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைமைத்துவத்தின் கீழ் 5 வருடகால வரையறையை உள்ளடக்கிய தேசிய டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கருத்திட்டத்தின் நோக்கமானது, நாட்டில் நிறுவகங்கள் மற்றும் நூலகங்களில் உள்ள உள்ளூரில் பிறப்பிக்கப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப ஆவணங்களை டிஜிட்டல் மயப்படுத்துதலாகும். இதன் நோக்கமானது, புத்தாக்கம் மற்றும் உற்பத்தி ஆராய்ச்சியை மேம்படுத்தும் நோக்குடன் நாட்டிலுள்ள சகல விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனங்களும் பார்க்ககூடிய விதத்தில் தொடறரா சேவையில் விஞ்ஞான ஆராய்ச்சி பற்றிய ஆவணங்களை வழங்க முடியும்.

**E – Swabhimani விருது:** இலங்கை தகவல் தொடர்பாடல் முகவர் நிலையத்தினால் (ICTA) ஒழுங்கு செய்யப்பட்ட e – Swabhimani 2011 ஆம் ஆண்டின் விருது வைபவத்தில் SLSI தரவுத்தளமானது மின் விஞ்ஞான வகுதியின் கீழ் விசேட சிறப்பு பரிசினை வென்றெடுத்தது.

**தேசிய மின் அறிவுக்களஞ்சியம்:** தொடறரா சேவையில் பிரசுரிக்கப்பட்டுள்ள சஞ்சிகைகள் (சகல வற்றையும் உள்ளடக்கியதாய்) மற்றும் உள்ளூரில் பிரசுரிக்கப்பட்ட பல ஏனைய ஆவணங்களை தேடக் கூடிய தேடல் வசதியுடன் தாபிக்கப்பட்டுள்ளது.

**நிறுவனங்களின் தேசிய வலையமைப்பு:** மின் - அறிவுக்களஞ்சியங்களின் தேசிய வலையமைப்புகளினை வலுப்படுத்தப்படல்.

**இலங்கை விஞ்ஞான முன்னேற்ற தரவுத்தளம்:** இலங்கை விஞ்ஞான முன்னேற்ற தரவுத்தளமானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை காட்டியது. குடந்த 25 வருட காலப்பகுதியில் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தில் வாசித்த சகல ஆவணங்களையும் தரவுத்தளத்தில் இடும் பணியானது பூரணப்படுத்தப்பட்டதுளு.

## 2. தரவுத்தள விருத்தி

### 2.1. இலங்கை விஞ்ஞான சுட்டி

மீளாய்வுட்குட்பட்ட காலப்பகுதியில் இலங்கை விஞ்ஞான சுட்டியின் தரவுத்தளமானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை காட்டியது. பதிவுகளின் எண்ணிக்கை மற்றும் தரவுத்தளத்தில் உள்ள முழுத் தொகுதி ஆவணங்கள் இரண்டுமே, உயர் வளர்ச்சி வீதத்தை காட்டியது. பதிவுகள் சேர்க்கப்பட்டு முழுத்தொகுதி ஆவணங்கள் ஏற்றம் செய்யப்பட்டன. அத்துடன் வருட காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டவை 5616 மற்றும் முழுத் தொகுதி ஆவணங்கள் 7086 என்பனலாம்.

2006 ஆம் ஆண்டிலிருந்து அதாவது இது தாபிக்கப்பட்ட காலத்திலிருந்து தரவுத்தளமானது படிப்படையாக முழுத் தொகுதி ஆவணங்களை உள்ளடக்கிய ஒரு தரவுத்தளமாக விருத்தி செய்யப்பட்டு வருகிறது. 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டின் உயர் வளர்ச்சி வீதம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2011. டிசம்பர் 31 இல் உள்ளவாறு நோக்குகையில், தரவுத்தளத்தில் உள்ள ஆவணங்களில் 59% (23553 ஆவணங்கள்) தேசிய விஞ்ஞான மன்றத்தின் LAN இனூடாக நுழைவதற்கு முடியும். இவற்றுள் 15 உள்ளூர் சஞ்சிகைகளுக்கு இணையத்தின் ஊடாக நுழையக் கூடிய வசதி உண்டு இவ்வாறு பிரசுரிப்பு செய்யப்படுவதற்கு ஏனைய பிரசுரிப்பாளர்களிடமிருந்து பதிப்புரிமை அநுமதியை பெற்றுக் கொள்வதற்காக செயன்முறைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.






## 2.2. இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் தரவுத்தளம் (SLAAS)

வருட காலப்பகுதியில் SLAAS தரவுத்தளமானது ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை காட்டியது. 2011. டிசம்பர் 31 இல் SLAAS தரவுத்தளமானது 8311 உருப்படிகளின் பதிவினை காட்டியது. 2011 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட பதிவுகளின் எண்ணிக்கை 3601 ஆகும். கடந்த 25 வருடங்களில் 1976 – 2010 இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் பருவக் கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்ட சகல ஆவணங்களினதும் விபரங்களும் இங்கு உள்ளடக்கப்படும். 1987 – 2010 வரையிலுள்ள காலப்பகுதிக்குரிய பதிவுகளாவன மேலும் பிரித்தெடுப்புகளை இணைத்ததன் மூலம் இன்னும் விரிவாக்கம் செய்யப்பட்டது. இணையத்தின் ஊடாக இத்தரவுத் தளத்திற்கு நுழையலாம்

## 2.3. ஆராய்ச்சி மானிய தரவுத்தளம் (RGRA)

RGRA தரவுத்தளமானது சீரமைக்கப்பட்டதுடன் RGRA விற்கான இணைய இடைமுகமானது விருத்தி செய்யப்பட்டது. 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறாக பதிவு செய்யப்பட்ட மொத்த பதிவுகளின் எண்ணிக்கை 1881 ஆகும். முழுத் தொகுதி அறிக்கைகளும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் LAN இனூடாக நுழையக் கூடிய எண்ணிக்கையுள்ள ஆவணங்களின் எண்ணிக்கை 967 ஆகும்.

## 2.4. புதினப் பத்திரிகை ஆக்கங்களின் தரவுத்தளம்

வருட காலப்பகுதியில் சேர்க்கப்பட்ட ஆக்கங்களின் எண்ணிக்கை 1587 ஆக இருக்கும் அதே வேளையில் 2011. டிசம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த பதிவுகளின் எண்ணிக்கை 20250 ஆகும்.

## 2.5. SLSTIC பட்டியல்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதிவுகளின் எண்ணிக்கை 26777

## 2.6. தேசிய மின் - அறிவுக்களஞ்சியம்

ஏனைய உள்ளூர் மின் - அறிவுக்களஞ்சியங்களின் பதில் தேடல் வசதியானது தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப, தேசிய விஞ்ஞான மன்றத்தின் e – repository யில் ஒரு சஞ்சிகையை நோக்கிய தேடலானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சஞ்சிகைகளை தேடலிற்கு உதவும். விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அவர்களுடைய ஆய்வுக் கட்டுரைகளுக்கு இலகுவாக தகவல்களை பெற்றுக் கொள்ள மின் - அறிவுக்களஞ்சியமானது பெரிய அளவிலான சேமிப்பதற்கு மாற்றீடு செய்யப்பட்டது. அதிக வசதியானதும் மற்றும் பயனுடைய இடைமுகத்தை தருவதற்கு இதன் இடைமுகமானது முன்னேற்றப்பட்டது.

# 3. சேவைகள்

தேசிய விஞ்ஞான நூலக வள நிலைய தரவுத்தளமானது சகல உள்ளூர் நூலகங்களுக்கும், வலையமைப்புக்களுக்கும் தொடறரா விசேட தரவுத்தளத்திற்கும் ஒரு மத்திய நுழைவு வாயிலாக தொடர்ந்தும் தனது சேவையை ஆற்றி வருகிறது. ஆராய்ச்சியாளர்களின் வசதிகளுக்கு ஏற்ப உள்ளூர் மற்றும் வெளியூர் வளங்களுடன் அதிக பயனள்ள தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 3.1. நடப்பு விழிப்புணர்ச்சி சேவைகள்

நாடெங்கிலுமுள்ள 4000 ஆராய்ச்சியாளர்களை சென்றடையும் வகையில் Scinno Tech - மின் செய்திமடலின் ஊடாக ஒவ்வொரு மாதமும் ஒரு நடப்பு விழிப்புணர்ச்சி சேவையானது வழங்கப்பட்டது. NSLRC இற்கு ஒவ்வொரு மாதமும் சேர்த்துக் கொள்ளப்பட்ட 40 புதிய உருப்புகள் பற்றிய விபரங்கள் இச் சேவையின் ஊடாக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கல்வியியலாளர்களின் Desk Top இற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

### 3.2. ஆவண தேடல் சேவை

பாவனையாளர்களின் தேடல்களுக்கு பதிலளிக்கும் முகமாக 316 ஆவண தேடல்கள் மேற் கொள்ளப்பட்டதுடன், 120 கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டது. தேடல்களாவன உள்ளூர் மற்றும் சர்வதேச தரவுத்தளங்களில் மேற்கொள்ளப்பட்டது. ஆவண தேடல் மற்றும் நோக்கம் சேவைகளுக்கு இணைவாக ஒரு நகல் மறுபதிவு ( Copy duplication) சேவையானது வழங்கப்பட்டது.

### 3.3. நூலக பட்டியலை பெற்றுக் கொள்ளல்

கீழ் குறிப்பிடப்பட்ட மூன்று நிறுவனங்களின் தொடறரா பட்டியலானது தேசிய விஞ்ஞான மன்றத்தின் சேமிப்பகத்திற்கு சேர்க்கப்பட்டது. தேசிய விஞ்ஞான மன்றத்தின் செமிப்பகத்தில் சேர்க்கப்பட்ட விடயங்களை விஞ்ஞான சமூகம் சேர்த்தல் மூலம் அறிவுப் பகிரப்படும்.

- மனித உரிமைகள் ஆய்விற்களின் நிலையம்
- குடும்ப திட்டமிடல் சபை
- மத்திய சுற்றாடல் அதிகார சபை

### 3.4. வருகை செய்வோர்

தாம் இருக்கும் இடத்தில் இருந்தே தேசிய விஞ்ஞான மன்றத்தின் தரவுத்தளத்தையும் அது போன்று நூலகத்திலிருக்கும் வருகை செய்யக்கூடிய வசதி இருப்பதால் கடந்த இரண்டு வருடங்களாக நூலகத்திற்கு வருகை செய்வோரின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் வருகை செய்தோரின் எண்ணிக்கை 124 ஆகும்.

### 3.5. கருத்தரங்குகள்

“தகவல் தொழில் சார்பியலாளருக்கான ஒழுக்கம்” எனும் தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சிப் பட்டறையில் 52 பேர் கலந்துக் கொண்டனர்.

## 4. சேகரிப்பு விருத்தி

176 புதிய புத்தகங்கள் மறறும் அறிக்கைகள் சேர்க்கப்படுவதன் மூலம் NSLRC சேகரிப்பானது விருத்தி செய்யப்பட்டது. புத்தாக்கம் மற்றும் நெநோ தொழில்நுட்பம் ஆகிய துறைகள் சம்மந்தமாக புதிய புத்தகங்கள் வாங்கப்படுவதில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது. தேசிய விஞ்ஞான மன்றம் நிதியீடு செய்த ஆராய்ச்சி மானியங்கள் தொடர்பில் 09 இறுதி அறிக்கைகள் பெறப்பட்டன. நூலகமானது வருடம் பூராவும் 65 சஞ்சிகை தலைப்புகளை (உள்ளூர்/வெளியூர்) தொடர்ந்து பெற்றுக் கொண்டிருந்தது. இவ்வரிசையில் “புத்தாக்க முக்கியத்துவம்” எனப்படும் புதிய சஞ்சிகை ஒன்று சேர்க்கப்பட்டது.

**சர்வதேச தரவுத்தளத்திற்கு நுழைவு:** கீழ் குறிப்பிடப்பட்ட சர்வதேச தரவுத்தளத்திற்கு நுழைவு வசதி வழங்கப்பட்டது.

**HINARI முழுத் தொகுதி சஞ்சிகைத் தரவுத்தளம்:** HINARI நிகழ்ச்சித் திட்டமானது சுகாதார நிறுவனமானது பிரதான பிரசுரிப்பாளர்களுடன் இணைந்து வழங்கப்படுகிறது. அத்துடன் இந்நிகழ்ச்சித்திட்டமானது, உயிர் மருத்துவம், மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய தறைகளில் பிரதான சஞ்சிகைகளுக்கு நுழைவு வசதியை தருகிறது. HINARI யின் ஊடாக 8500 சஞ்கிகைகளுக்கும் 7000 மின் புத்தகங்களிற்கும் நுழைவு வசதி வழங்கப்படுகிறது.

**AGORA முழுத் தொகுதி தரவுத்தளம்:** AGORA நிகழ்ச்சித்திட்டமானது உணவு மற்றும் விவசாய அமைப்பாண்மையானது பிரதான பிரசுரிப்காளர்களுடன் இணைந்து வழங்கப்படுகிறது இந்நிகழ்ச்சித் திட்டமானது உணவு, விவசாயம் சுற்றாடல், விஞ்ஞானம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூக விஞ்ஞானம் என்பவற்றுடன் தொடர்புடைய சேகரிப்புகளை அணுகுவதற்கு துணைமை செய்கிறது.

## 5. தேசிய டிஜிட்டல் கருத்திட்டம்

உள்ளூர் நூலகங்களில் காணப்படும் விஞ்ஞான தொழில்நுட்ப ஆவணங்களை டிஜிட்டல் முறைக்கு மாற்றுவதன் மூலம் விஞ்ஞான சமுதாயினத்தவருக்கு இலகு நுழைவு முறை வழங்கப்படவே இக்கருத்திட்டத்தின் நோக்காகும். 5 வருட காலவரையறை கொண்ட இத்தேசிய கருத்திட்டம் 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன் முதல்கட்டம் 06 நிறுவனங்களின் நூலகத்தை டிஜிட்டல் முறைக்கு மாற்றுவதாகும். அந்நிறுவனங்களாவன, தெங்கு ஆராய்ச்சி நிறுவகம், விவசாய ஆராய்ச்சி கொள்கை மன்றம், நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர். சி. கிளார்க் நிறுவகம், விவசாயத்திற்கான பட்டப்பின் நிறுவகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம், என்பனவாகும். இக்கருத்திட்டத்தின் வளர்ச்சியை மதிப்பீடு செய்வதற்கு ஒரு வழி நடத்தும் செயற்குழு நியமனம் செய்யப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவகத்திற்கும் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்படுவதற்கு ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையும் தயார் செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட நூலகங்களுக்கு 2009 ஆம் ஆண்டில் இவ்விடயம் தொடர்பில் பயிற்சிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சாதனங்களை டிஜிட்டல் மயப்படுத்தலானது தகவல் தொழில்நுட்ப பிரயோகங்களை மேம்படுத்தல்.

## 6. SLISTNET நூலகங்களில் தகவல் தொழில்நுட்ப பிரயோகங்களை மேம்படுத்தல்

**6.1. மென்பொருள் பகிர்வு:** நாட்டிலுள்ள நூலகங்களுக்கிடையே CD/ISIS (வின்டோஸ் பதிப்புரு) நூலக முகாமைத்துவ மென்பொருளின் 32 பிரதிகள் பகிரப்பட்டன.

### 6.2. பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்/பயிற்சிப் பட்டறை

**6.2.1. WINISIS பயிற்சிப் பட்டறைகள்:** வருட காலப்பகுதியில் 29 நூலகங்களை பயிற்றுவிப்பதற்கு WINISIS மென்பொருளின் அடிப்படை பிரயோகம் தொடர்பில் 03 பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

**6.2.2. Open Archives இனை விருத்தி செய்வதற்கான D – Space மென்பொருள் பற்றிய பயிற்சிப்பட்டறை:** ஆசிய பிராந்தியத்தில் உள்ள நூலகங்கள்/தகவல் தொழில்நுட்ப தொழில் சார்பியலாளருக்காக D – Space மென்பொருள் பற்றிய பிராந்திய பயிற்சிப் பட்டறையானது 2011. ஜுலை மாதம் 27 – 30 ஆம் திகதி வரை ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டமானது யுனெஸ்கோ வினால் அநுசரணை

செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் மலேசியா, தாய்லாந்து, கம்போடியா, வவஸ், வியட்நாம், நேபாள் மற்றும் ஈரான் நாடுகளைச் சேர்ந்த ஒன்பது பேர் பங்குபற்றினர். உள்ளூர் பங்கு பெறுநர்களின் எண்ணிக்கை நான்கு ஆகும். D – Space திறந்த மூலக மென்பொருளை பற்றிய அறிவை வழங்கவே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்காகும். ஐக்கிய இராச்சியத்தினை சேர்ந்த INASP (International Network for the Availability of Scientific Periodicals) இந்நிகழ்ச்சித் திட்டத்தின் இணை அநுசரணையாளர் ஆவார். இப்பயிற்சிப் பட்டறையின் வள அளணியினராக, இந்தியாவில் பங்களூரில் உள்ள புள்ளி விபரவியல் நிறுவகத்தினைச் சார்ந்த பேராசிரியர். எ.ஆர்.டி. பிரசாத் மற்றும் கலாநிதி. டேனிகா மெடாலி என்போர் கலந்துக் கொண்டனர்.

## 7. பிரசுரிப்புகளும் அறிமுகப்படுத்துகைகளும்

தேசிய விஞ்ஞான நூலக வள நிலையத்தின் தலைவரான திருவதி. சுனெத்ரா பெரேரா தேசிய விஞ்ஞான மன்றத்தின் "தகவல் நுழைவு வாயில்" என்ற தலைப்பின் கீழ் ஒரு அறிமுகப்படுத்துகை மற்றும் செய்முறை விளக்கமளிப்பினை AGRINET இல் 2011.09.30 ஆம் திகதி முன்வைத்தார். கருத்தரங்கானது, விவசாய ஆராய்ச்சி கொள்கை மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

**நிர்வாகப் பிரிவு**

தேவைப்படக் கூடிய சேவைகளை வழங்கவும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் முக்கிய செயற்பாடுகளை உச்சபட்ச அளவில் பூரண நிறைவேற்றம் செய்யவும் நிர்வாகப்பிரிவானது கீழ் வரும் பிரதான செயற்பாடுகளை செய்கிறது.

- பொது நிர்வாகம்
- மனித வள முகாமைத்துவம்
- சொத்து முகாமைத்துவம்
- தேசிய விஞ்ஞான மன்றத்தின் தருக்க ரீதியிலான தேவைப்பாடுகள்

மேலும் அது அரச மற்றும் நியதிச் சட்ட அமைப்புகள் என்பவற்றிக்கு இடையேயான தொடர்பிணைப்பை வலுப்படுத்தவும் முயற்சிகளை எடுக்கிறது. மேலும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணியினை சாதிப்பதற்காக தொழில் பெறுநரின் பங்களிப்பினை மேம்படுத்த உதவும் வகையில் அவர்களின் திறன் மற்றும் உற்பத்தி திறனை விருத்தி செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டது.

**1. பதவியினர்**

தேசிய விஞ்ஞான மன்றமானது அதனது அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலைப்பிரிவில் 144 பேர்கள் உள்ளடக்கமாக இருந்த போதிலும் மன்றம் அதனது பதவியினர் வலுவாக 94 பேரை கொண்டுள்ளது. இதில் 23 பேர் விஞ்ஞான அலுவலர் ஆவார்.

2011.12.31 இல் உள்ளவாறு முதல் நிலை பதவியினர் பற்றிய விபரங்கள் இணைப்பு 3 இல் தரப்பட்டுள்ளது.
வருட காலப்பகுதியில் 01 நிறை வேற்று உறுப்பினர் இராஜினாமா செய்தார்.

**1.1. புதவியினரின் பிரதிநிதித்துவம்**

பதினொரு வெளிநாட்டு கூட்டங்கள், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகளில் தேசிய விஞ்ஞான மன்றத்தை பதவியினர் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இதை விட வேறுபட்ட தேசிய மற்றும் நிறுவன ரீதியிலான செயற்குழுக்களிலும் பதவியினர் தேசிய விஞ்ஞான மன்றத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்

மேலும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பதவியினர் உள்ளூர் கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், மாநாடுகளில் கலந்துக் கொள்வதன் மூலம் தேசிய விஞ்ஞான மன்றத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

**2. தர முகாமைத்துவ முறைமையை மீண்டும் நிறுவல் (QMS)**

தேசிய விஞ்ஞான நிலையத்திற்கான தர முகாமைத்துவ முறைமையினை மீண்டும் நிறுவுதலானது 2011 ஆம் ஆண்டும் தொடரப்பட்டது. தர முகாமைத்துவ முறைமையினை மீண்டும் நிறுவும் பணியானது, 2009, நவம்பர் மாதம் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளரின் வழிகாட்டலிக் கீழ் மேற் கொள்ளப்பட்டது. இந்த முறைமையினை மீண்டும் தாபிக்கும் பொறுப்பு தொடர்பில் ஒவ்வொரு பிரிவினையும் ஒருவர் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 12 பேர் உள்ளடங்கிய ஒரு இணைக்குழு தாபிக்கப்பட்டது. ISO 9001:2008 சான்றிதழை குறிக்கோளாக கொண்டு 2011 ஆம்

ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. நேரம் மற்றும் பதவியினரில் இருந்த தட்டுப்பாடு காரணமாக 2011 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட சில நடவடிக்கைகள் செய்யப்படவில்லை

- நியம தொழிற்பாட்டு செயன்முறைகளை மீளாய்தலும் இற்றைப்படுத்தலும்
- பிரதான ஆவண பட்டியலையும் தர பதிவு அமைவுருவினையும் தயாரித்தல்
- ISO சான்றுபடுத்தப்பட்ட ஹோமாகம பிரதேச செயலகத்திற்கு QMS கள விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது
- குறிமுறையிடலின் ஒரு பகுதி பூரணப்படுத்தப்பட்டது.

## நிதிப் பிரிவு

நிதி தொடர்பிலான சகல செயற்பாடுகளும் நிதிப் பிரிவினால் நிர்வாகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் மன்றமானது அதனது சகல நிதிச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை நிதி ஒழுங்கு விதிக்குள் அடங்கும் வகையிலும் மற்றும் உரிய நேரத்தில் கொடுப்பனவு நிச்சயம் செய்யப்பட்டதாய் வினைத்திறன் மிகு நிதிச் சேவையினை வழங்கக் கூடியதாகவுள்ளது.

### 1. நிதிப் பிரிவின் பிரதான செயற்பாடுகள்.

- கணக்கியல் புத்தாக்கங்களை பேணல் - நிலையான சொத்து பதிவேடு, பொது பேரேடு, மானிய பேரேடு, இருப்பு புத்தகம் என்பன.
- வருடாந்த நிதிக் கூற்றுகள், மதிப்பீடுகள் உள்ளடங்கலாக நிதி அறிக்கைகளை தயாரித்தலும் உரிய திகதியில் அவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சமர்பித்தலும்
- நிறுவனத்தின் சகல பிரிவுகள் தொடர்பிலும் மேற் கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகளை மேற் கொள்ளல்.
- சம்பளங்கள், மேலதிக நேர கொடுப்பனவு போன்ற பொதுக் கொடுப்பனவுகளை மேற் கொள்ளல்
- களஞ்சியத்தை பேணல்
- பிரசுரிப்புக்களுக்கான களஞ்சியத்தை பேணல், பிரசுரிப்புகளை விற்றல் இவற்றுடன் பிரசுரிப்புகளுக்கான விற்பனை நிலையங்கள் கண்காட்சிகள், புத்தக விற்பனை சந்தை என்பவற்றை ஒழுங்கு செய்தல்

### 2. பிரிவின் மனித வலு

நிர்வாக/நிதி தலைமைத்துவம், கணக்காளர், கணக்கியல் அலுவலர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர்கள் என்போர் பிரிவின் மனித வலு ஆவார்கள்

## அச்சிடல் அலகு

தேசிய விஞ்ஞான மன்றத்தின் சகல பிரிவுகளினதும் செயற்பாடுகளுக்கு அச்சிடல் அலகு பக்கதுணை செய்கின்றது.

அச்சிடல் அலகானது 2010 ஆம் ஆண்டில் 25 பிரசுரிப்புகளையும் 63 ஏனைய அச்சிடல் வேலைகளையும் செய்த அதே வேளையில் இவ்வருடம் 20 பிரசுரிப்புகளையும் 80 ஏனைய அச்சிடல் வேலைகளையும் செய்துள்ளது.

### 3. தகவல் தொழில்நுட்ப அலகு

அமைப்பாண்மையின் செயற்பாடுகளுக்கு உறுதுணை செய்யும் விதத்தில் தகவல் தொழில்நுட்ப பிரிவானது, உயர் தொழில்நுட்பவியல் செயற்பாடுகள் தொடர்பில் தனது பூரண ஆதரவை வழங்குகிறது.

தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு வலை பி எஸ் ஸீ வசதிகள், இணையத்தள தரவுத்தள வசதிகள், இறுதிப்பாவனையாளர் மின்னணுவியல் தொடர்பாடல் ஆகிய வசதிகளை இவ்வலகு வழங்குகிறது தொழில்நுட்ப வசதியை மேம்படுத்தவும் இத்துறையில் எதிர்கால தேவைப்பாடுகளை முன்னறிந்து கொள்ளலும் இவ்வலகின் பொறுப்பாகும்.

இவ்வருட காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கனணிப் பள்ளிக்கூடத்துடன் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு ஒரு

ஒருங்கிணைக்கப்பட்ட தொடறரா மென் பொருள் தீர்வினை விருத்தி செய்தலாகும். நிதி, நிர்வாகம், விஞ்ஞான பிரிவின் பிரதான செயற்பாடுகள் இக்கருத்திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக மன்றத்தின் வலைக்கடப்பீடமும் மீள் வடிவமைப்பு செய்யப்பட்டு நிறுவப்படும்.

**உள்ளக கணக்காய்வு அலகு**

அமைப்பாண்மையின் சிறந்த ஆளுமையை உறுதிப்படுத்தும் உள்ளக கட்டுப்பாடுகளை பேணுவதற்கு உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. நேரடியாக முகாமைத்துவ சபை/தலைவருக்கு அறிக்கை செய்யும் உள்ளக கணக்காய்வாளர் வருட காலப்பகுதியில் கீழ் வரும் விடயங்கள் தொடர்பில் விசேட அவதானத்தை செலுத்தி அவரது கடமைகளை ஆற்றினார்.

- அமைப்பாண்மையின் மீதான பொது உள்ளக கட்டுப்பாடுகள்
- விஞ்ஞான செயற்பாடுகளில் முன்னேற்றம்
- பிரசுரிப்புகளின் விற்பனையினை கூர்ந்து அவதானித்தல்
- கடன் படுநர், கடன் கொடுத்தோர், முற்பண கொடுப்பனவுகளில் தொடர்ச்சியான பரிசோதனை
- விநியோகத்தர்கள் தொடர்பில் கையாளப்படும் போது, கேள்வி பத்திர செயன்முறைகளை ஒத்திசைதல்
- களஞ்சிய செயன்முறைகளின் செயற்படுத்துகை

**செயலாற்றுகை தொடர்பில் கணக்கியல் அலுவலரின் அவதானிப்புகள்**

**நடப்பு செலவினம்**

ரூபாய். 000

| | **மதிப்பீடு** | **செலவினம்** |
|---|---|---|
| தனி ஆள் வேதனாதிகள் | 46,520 | 44,710 |
| ஏனைய நடப்பு செலவினம் | 30,480 | 24,121 |
| | 77,000 | 68,831 |

நடப்பு செலவினத்திற்கு திறை சேரியிடமிருந்து பெற்றுக் கொண்ட நிதியம் ரூபாய். 68,951

| | **மூலதன செலவினம்** | **மதிப்பீடு செலவினம்** | **திறை செரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற நிதியம்** |
|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் 133–02–05–03-2201 | **300,000** | **110,710** | **154,948** |

**துணை ஒதுக்கீடு**

| | |
|---|---|
| IDRC | 5,864 |
| யுனெஸ்கோ | 1,402 |

**வருமானம்** **379**

**வருட காலப்பகுதயில் கிடைக்கப் பெற்ற நிதியங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவினம் பற்றிய விபரங்கள்.**

| | **விபரணம்** | **2011 செலவினம்** |
|---|---|---|
| 1 | ஆராய்ச்சி மற்றும் ஏனைய விஞ்ஞான பணிகளுக்கான மானியம் | 46,122 |
| 2 | விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சிப் பிரிவு | 1,412 |
| 3 | தொழில்நுட்ப பிரிவு | 8,303 |
| 4 | தேசிய விஞ்ஞான நூலக வள நிலையம் | 2,653 |
| 5 | விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை பிரிவு | 5,118 |
| 6 | சர்வதேச தொடர்பிணைப்பு பிரிவு | 19,058 |
| 7 | தகவல் தொழில்நுட்ப பிரிவு | 2,004 |
| 8 | அலுவலக தளபாட பொருத்துகளும் கருவிகளும் | 4,493 |
| 9 | மூலதன சொத்துக்களை புனரமைத்தல் | 885 |
| 10 | வாகனங்கள் | 4,800 |
| 11 | பணிப்பாளர் அலுவலக செலவினம் | 4,986 |
| 12 | ஒழுங்கிணைக்கப்பட்ட மென் பொருள் நிகழ்ச்சித் திட்டம் | 2,999 |
| 13 | இலங்கையில் வட மத்திய மாகணத்தில் குரோனிக் சிறு நீரக நோய் பற்றிய மதிப்பீடும் ஆய்வும் | 46,000 |
| 14 | தேசிய விஞ்ஞான நிலையம் | 4,303 |
| 15 | வெளிநாடு விசெட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 1,812 |
| | **மொத்தம்** | **154,948** |

**நிதிச் சிக்கல்கள்**

அரசு நிதியங்களினை சார்ந்துள்ள தேசிய விஞ்ஞான மன்றம் ஒரு நிதி வழங்கும் நிறுவனம் ஆகும். 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய வரவு செலவு திணைக்களமானது நடப்பு செலவினத்திற்கு ரூபாய் 68.9 மில்லியன் ரூபாயையும் மூலதன செலவினத்திற்கு ரூபாய் 215.9 மில்லியனையும் விடுவிக்கும் படி பரிந்துரைத்தது. திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களமானது பரிந்துரைப்பு செய்யப்பட்டதில் நடப்பு செலவினத்திற்கு 68.9 மில்லியன் ரூபாயை விடுவிப்பு செய்த போதிலும் மூலதன செலவினத்திற்கு 110.7 மில்லியனை மட்டுமே விடுவிப்பு செய்தது. இதனால் டிசம்பர் மாதத்தில் அநுமதிக்கப்பட்டவற்றில் ஒரு சில கருத்திட்டங்களுக்கு மட்டுமே மானியம் வழங்கக் கூடியதாக இருந்தது.

தேசிய விஞ்ஞான மன்றமானது, நெநோ தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளை விருத்தி செய்ய ஒழுங்கு முறையான சட்டகத்தை விருத்தி செய்வதற்கு IDRC விடமிருந்து 5.9 மில்லியன் ரூபாயையும் D – Space Open மென் பொருளை பயன்படுத்தி மின் - அறிவுக்களஞ்சிய விருத்திக்கான பிராந்திய பயிற்சிப் பட்டறைக்கு யுனெஸ்கோவிடமிருந்து 1.4 மில்லியனையும்

உலகளாவிய முன்னரங்கிற்காக UNDPP மற்றும் யுனெஸ்கோ விடமிருந்து 2.0 மில்லியன் ரூபாயையும் பெற்றுக் கொள்ள கூடியதாக இருந்தது.

| வருடம் | அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு | திருத்தப்பட்ட ஒதுக்கீடு | பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியம் | ஆங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 0% | திருத்தியமைக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 0% |
|---|---|---|---|---|---|
| | ரூபா.000 | | | | |
| 2007 | 307,500 | 257,500 | 153,999 | 50.08 | 59.80 |
| 2008 | 320,000 | 297,600 | 138,653 | 43.33 | 46.59 |
| 2009 | 217,192 | 184,613 | 68,350 | 31.47 | 37.00 |
| 2010 | 238,000 | 238,000 | 107,000 | 44.96 | 44.96 |

## முகாமைத்துவ சிக்கல்கள்

- கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை சார்ந்தவர்களே அடிப்படையில் ஆராய்ச்சி மானியங்களின் பயனாளிகளாவார் என்பதுடன் ஆராய்ச்சியானது அந்த ஆராய்ச்சி நிறுவனங்களின் அந்தந்த திணைக்களத் தலைவர்களின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் என்பதுடன், இவ்விடயம் தொடர்பில் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு நேரடி கட்டுப்பாடு இல்லை. மானியத்திட்டங்களை பொறுத்த வரையில் தெளிவான வழிகாட்டல் அறிவுறுத்தல்கள் இருந்த போதிலும், மானியம் பெறுநரின் நிறுவகத்தின் சில செய்முறைகள் மற்றும் முறைகள் காரணமாக கருத்திட்டங்கள் உரிய நேரத்தில் செயற்படுத்துகை செய்யப்படுதலானது ஓரளவு தூரத்திற்கு பாதிப்புற்றிருக்கின்றது. ஆராய்ச்சியாளர்களால முகம் கொடுக்கப்படும் பிரச்சனைகளை விளிப்பதற்கு தேசிய விஞ்ஞான மன்றமானது அதன் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் செயன்முறைகள் மற்றும் முறைமைகளை மேம்படுத்துகிறது.

- தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வெளிநாட்டு நிதியங்களை பெற்றுக் கொள்வதற்கு பெரிதளவில் செயலூட்டளவு இருந்த போதிலும் பல வித காரணங்களால் அச்செயற்பாட்டிற்கு தடங்கல் ஏற்பட்டது

<u>**2011. டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான வருமான செலவினம்**</u>

ரூபா.000

| **வருமானம்** | **2011** | **2010** | | |
|---|---|---|---|---|
| அரசமானியம் | 68,951 | 60,976 | | |
| **ஏனைய வருமானம்** | | | | |
| பெறப்பட்ட வட்டி | 201 | 195 | | |
| சில்லறை வருமானம் | 53 | 25 | | |
| பிரசுரிப்புகளின் விற்பனை | (1,127) | (1,639) | | |
| நிழற்பிரதி பெறுகைகள் | 18 | 47 | | |
| இணைய உறுப்புரிமை கட்டணம் | 24 | 14 | | |
| NSLRC வருமானம் | 39 | 9 | | |
| நிலையான சொத்து விற்பனை மூலம் பெறுகைகள் | 3 | 166 | | |
| மேலதிக ஒதுக்கீடுகள் | 123 | 8,682 | | |
| பள்ளிக் கூட விஞ்ஞான சங்கங்களிடமிருந்து பெறுகைகள் | - | - | | |
| வெளியிடங்களுக்கு அச்சிடல் மூலம் பெறுகைகள் | 42 | - | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 8855 | 9,283 | | |
| | | | 77,182 | 77,758 |

| | | | | |
|---|---|---|---|---|
| **செலவினம்** | | | | |
| **தனி ஆள் வேதனாதிகள்** | | | | |
| சம்பங்களும் படிகளும் | 38,559 | | 34,695 | |
| ஊழியர் சேமலாப நிதியம் | 4,211 | | 4,054 | |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 842 | | 811 | |
| ஓய்வூதிய பணிக் கொடைக்கு ஒதுக்கீடு | 2,983 | | 1,450 | |
| மேலதிக நேரம் | 709 | | 617 | |
| விடுமுறை கொடுப்பனவு | 43 | | 49 | |
| சீருடை | 108 | | 111 | |
| பதவியினர் பயிற்சி | 185 | | 448 | |
| | **47,640** | | **42,235** | |
| பிரயாணம் | 496 | | 338 | |
| விநியோகம் | 2,697 | | 913 | |
| பேணல் | 1,618 | | 3,159 | |
| ஒப்பந்த சேவைகள் | 8,235 | | 7,845 | |
| ஏனையவை | 10,315 | | 8,715 | |
| பெறுமான தேய்வு | 10,840 | | 9,832 | |
| | **34,201** | 81,841 | **30,802** | 73,037 |
| **மிகை, பற்றாக்குறையை விஞ்சிய வருமானம்** | | | | |
| அதி விசேட உருப்படிகளுக்கு முன்பு | | (4,659) | | 4,721 |
| அதி விசேட உருப்படிகள் | | - | | |
| (தேறிய நட்டம் அல்லது இழப்பு) | | | | |
| தேறிய மிகை / காலப்பகுதிக்குரிய நட்டம் | | (4,659) | | 4,721 |

<u>**2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை**</u>

(விரிவான ஐந்தொகை இணைக்கப்பட்டுள்ளது)

| | | | | |
|---|---|---|---|---|
| **சொத்துகள்** | **2011** | | **2010** | ரூபா.000 |
| **நடப்பல்லாத சொத்துகள்** | | | | |
| சொத்து ஆதனம் கருவிகள் | 442,743 | | 335,553 | |
| | | 442,743 | | 335,553 |
| முதலீடுகள் | | 661,522 | | 631,522 |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | | |
| இருப்பு சரக்கு | 4,096 | | 5,214 | |
| வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகள் | 17,246 | | 10,528 | |
| முற்பண கொடுப்பனவு | 1,024 | | 17,379 | |
| காசும் காசிற்கு சமனானவையும் | 13,351 | | 33,811 | |
| | | 35,717 | | 66,959 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,139,982** | | **1,034,000** |

**தேறிய சொத்துகள் / பொறுப்புகள்**

**மூலதனமும் ஒதுக்கீடுகளும்**

| | | | | |
|---|---|---|---|---|
| திரட்டப்பட்ட நிதியம் | 6,256 | | 21,476 | |
| ஒதுக்கீடுகள் / மீள் பெறுமான ஒதுக்கீகள் | 422,549 | | 316,061 | |
| அரச மானியம் | 661,552 | | 631,522 | |
| | | 1,090,327 | | 969,059 |
| **நடப்பல்லாத பரிப்புகள்** | | | | |
| பணிக் கொடை ஒதுக்கீடு | 19,178 | | 17,294 | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 21,074 | | 37,811 | |
| | | 40,252 | | 55,105 |
| **நடப்பு பரிப்புகள்** | | | | |
| கொடுக்கப்பட வேண்டியவைகள் | 2,835 | | 6,676 | |
| நிலுவைச் செலவினங்கள் | 6,568 | | 3,167 | |
| | | 9,403 | | 9,843 |
| | | **1,139,982** | | **1,034,007** |

## காசுப்பாய்ச்சல் கூற்று – 2011

| | **2011** | **2010** ரூபா.000 |
|---|---|---|
| <u>**தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் கூற்று**</u> | | |
| செலவினத்திற்கு மிகையான தேறிய மிகை வருமானம் | (4,659) | 4,721 |
| கூட்டுக: தே.வி.ம. நிதியம் முன்னையவருட சீராக்கல் | (270) | 33,037 |
| | **(4,929)** | **37,758** |
| <u>**சீராக்கங்களாவன**</u> | | |
| பெறுமானத் தேய்வு | (10,840) | (9,832) |
| பிரசுரிப்புகளுக்கான நட்டம் | (1,127) | (1,640) |
| வருட காலப்பகுதியில் செலுத்தப்பட்ட பணிக்கொடை | 1,099 | - |
| பணிக்கொடை ஒதுக்கீடு | (2,983) | (1,450) |
| ஐயக்கடன்களுக்கான ஒதுக்கீடு | 123 | 7,367 |

| | | | | |
|---|---|---|---|---|
| மேலதிக ஒதுக்கீடு | - | | 1,315 | |
| ஐயக்கடன் | - | | (1) | |
| நிலையான சொத்து விற்பனையில் இலாபம் | 3 | | 166 | |
| நிலையான சொத்து விற்பனையில் நட்டம் | - | | (19) | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 8,855 | | 9,283 | |
| பதிவழிக்கப்பட்ட சஞ்சிகைகள் மற்றும் நாளேடுகள் இருப்பு | (1,301) | | (1,307) | |
| நடைமுறை மூலதன மாற்றங்களுக்கு முன்பு தொழிற்பாட்டு இலாபம் / நட்டம் | **1,242** | | **33,876** | |
| வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகளின் தேறிய அதிகரிப்பு / குறைவு | 9,761 | | (2,230) | |
| இருப்பில் வீழ்ச்சி | 1,117 | | 1,291 | |
| வியாபாரக் கொடுப்பனவுகளில் தேறிய வீழ்ச்சி/ அதிகரிப்பு | (440) | | (7,409) | |
| தொழிற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசு | 10,438 | | (8,348) | |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு | | **11,680** | | **25,528** |

**<u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| செயற்பாடுகளிலிருந்து விளைவுகள் | (143,575) | | (110,403) | |
| சொத்துக்கள் கொள்வனவு | (4,482) | | (4,712) | |
| முதலீடுகள் | (30,000) | | (147,000) | |
| கட்டிட திருத்துகை தொடர்பில் மேலதிக ஒதுக்கீடு | - | | 10 | |
| கருவி விற்பனையில் பெற்றுக் கொண்ட வருமானம் | 5 | | 215 | |
| புத்தக விற்பனையில் பெற்றுக் கொண்ட வருமானம் | 404 | | 581 | |
| முதலீட்டு செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட காசு | | **(177,648)** | | **(261,309)** |

**<u>நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| அரச பங்களிப்பு | 110,710 | | 107,000 | |
| அரச மானியம் | 30,000 | | 147,000 | |
| வெளிநாட்டு உதவி | 4,797 | | - | |
| | | 145,507 | | 254,000 |

| | | |
|---|---|---|
| நிதிச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு | (20,461) | 18,219 |
| காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசிற்கு சமனானவையும் | 33,812 | 15,591 |
| காலப்பகுதியின் இறுதியில் காசும் காசிற்கு சமனானவையும் | **13,351** | **33,812** |

## கணக்குகளுக்கான குறிப்புகள்

### 1. பொது கணக்கீடு

நிதிக் கூற்றுக்களாவன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியற் கொள்கைகளுக்கு அமைவுற வரலாற்று கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்கீடுகளுடன் தொடர்புடைய அடிப்படை கணக்கியல் ஊக்கங்கள் மற்றும் கொள்கைகள் என்பன முன்னைய வருடத்தை போலவே இந்த வருடமும் மாறாது சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வருமானங்களாவன இனம் காணப்பட்டதும் சொத்துக்களுடன் தொடர்புடையதாகும், பெறுமானத் தேய்வை பொறுத்த வரையில் அவை, பிற்போடப்பட்ட வருமானமாக பேணப்பட்டிருப்பதுடன், இலங்கை கணக்கியற் சட்டம் 24 இற்கு அமைவுற சொத்தின் பாவனைக் காலத்தை கருத்திற் கொண்டு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

### 1.1. அலகு மூலதன நிதிய செலவினத்தை ஆவணமயப்படுத்துதல்

| | | ரூபா. |
|---|---|---|
| 1. | NSLRC கருவிகள் (நூலகம்) | 491,571,00 |
| 2. | NSLRC புத்தகங்கள் | 398,870,30 |
| 3. | அச்சிடப்பட்ட ஆவணங்களை டிஜிட்டல் கோப்புகளுக்கு மாற்றுதல் | 669,801,53 |
| 4. | ஆலோசனை சபை | 13,065.00 |
| 5. | NSLRC பதவியினர் பயிற்சி | 11,500.00 |
| 6. | தரவுத்தளம் | 637,370.00 |
| 7. | NSLRC பயிற்சிப் பட்டறைகளும் கருத்தரங்குகளும் | 157,365.02 |
| 8. | யூனியன் பட்டியல் தரவுத்தளம் | 273,688.29 |
| | | **2,653,231.14** |

### 1.2. ஆராய்ச்சி மற்றும் ஏனைய விஞ்ஞான பணிகளுக்கான மானியம்

ஆராய்ச்சி மானியம் பற்றிய ஒப்பந்த ரீதியிலான உடன் படிக்கையில் முறை வடிவமாக்கம் செய்யப்பட்டது போன்று ஆராய்ச்சி மானியத்தில் நிதியீடு செய்தலில் எமது கொள்கையானது மானியம் பெறுநர் பணியாற்றும் நிறுவகத்திற்கு தலணை அடிப்படையில் நிதியத்தை மாற்றீடு செய்தலாகும். அது போல குறிப்பிட்ட அந்த நிறுவனத்திடம் பாவிக்கப்படாது ஏதேனும் நிதியம் எஞ்சியிருப்பின் கருத்திட்டம்

பூரணப்படுத்தப்பட்ட பின்பு, மிகுதிப்பணமானது தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு திருப்பி செலுத்தப்படல் வேண்டும். மேலும் நிறுவனத்திற்கு மாற்றீடு செய்யப்பட்ட நிதியமானது, ஒரு செலவினமாக எம்மால் கருதப்படும். கருத்திட்டத்தின் முடிவில் நிறுவனத்திடம் பணம எஞ்சியிருப்பின் நாம் கடன் படுநர் ஒரு வரை உருவாக்குவோம்.

| | ரூபா. |
|---|---|
| ஆராய்ச்சி மானியம் மற்றும் ஏனைய விஞ்ஞான பணிகளுக்கான செலவினம் | 41,752,302.07 |
| ஆராய்ச்சி புலமை பரிசில்களும் இணையுரிமைகளும் | 3,629,410.00 |
| குரோனிக் சிறு நீரகநோய் கருத்திட்டம் | 46,000,000.00 |
| வருடத்திற்கான உண்மையான செலவினம் | 91,381,712.07 |
| நிலுவைச் செலவினம் | 741,254.63 |
| | **92,122,966.70** |

## 1.3. நானாவித நிதிய செலவினங்கள்

| | ரூபா |
|---|---|
| 1. சர்வதேச தொடர்புகள் | 7,639,644.72 |
| 2. விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை பிரிவு | 5,118,156.39 |
| 3. தகவல் தொழில்நுட்ப அலகு | 2,004,157.18 |
| 4. சொத்துக்களுக்கான புனருத்தாரணம், மேம்படுத்துகை | 885,265.84 |
| 5. பணிப்பாளர் அலுவலக செலவினம் | 4,985,987.95 |
| 6. விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சிப் பிரிவு | 1,412,278.02 |
| 7. தொழில்நுட்ப பிரிவு | 7,956,202.99 |
| 8. சர்வதேச தொடர்பிணைப்பு பிரிவு | 4,493,860.94 |
| 9. உலகளாவிய முன்னரங்கு | 6,926,145.00 |
| 10. IDRC தே.வி.ம செலவினம் | 347,140.00 |
| 11. ஒருங்கிணைக்கப்பட்ட மென் பொருள் நிகழ்ச்சித்திட்டம் | 2,999,000.00 |
| 12. சர்வதேச தொடர்பிணைப்புகள் | 1,811,766.69 |
| 13. தேசிய விஞ்ஞான நிலையம் | 4,303,443.04 |
| | **50,883,048.76** |

## 2. சொத்துக்களும் மற்றும் அவை மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படையும் பெறுமானத் தேய்விற்கான சொத்துக்களும் மற்றும் பெறுமானத் தேய்வும்.

பெறுமானத் தேய்வானது சொத்தின் கொள்விலையில் அல்லது அதன் மதிப்பீடு விலையில் முன்னைய வருடத்தை போலவே இந்த வருடமும் மாறாது நேர் கோட்டு முறையில் செய்யப்பட்டிருக்கின்றது. என்பதுடன் சொத்தானது அதனது மதிப்பீடு செய்யப்பட்ட

பாவனைக்கால முடிவில் பதிவழிக்கப்படுமாறு அதன் பெறுமாத் தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**சொத்துகளை மூலதனமாக்கல்**

மூலதன ஒதுக்கீட்டு செலவுக் கணக்கிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கருவிகளை மூலதனமாக்கல் என்பது அவ்வகையினை சார்ந்த கருவிகளை வரவு வைத்தலாகும்.

2003 ஆம் ஆண்டிற்கு முன்பு, தளபாடம் மற்றும் பொருத்துகள், அலுவலக கருவிகள் ஆகிய செலவுக் கணக்கில் இல்லாது வேறு செலவுக் கணக்கிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கருவிகள் அக்கருவிக் கணக்கை வரவு வைப்பதன் மூலமும் தொடர்புடைய தொகையினால் நிதியக் கணக்கினை செலவு வைப்பதன் மூலமும் கருவிகளாவன மூலதனமாக்கப்பட்டது. ஆனால் அவை விற்கப்படும் பொழுது அவற்றுடன் தொடர்புடையதாக விருந்த நிதியக் கணக்கு பாதிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டில் இது தொடர்பில் சீராக்கங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய விஞ்ஞான மன்றத்தினது வளாகம், கட்டிடம் மற்றும் 05 வாகனங்களாவன இவ்வருட காலப்பகுதியில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. மீள் மதிப்பீடானது பெறுமானமிடல் திணைக்களத்தினால் செய்யப்பட்டது பெறுமான மீள் மதிப்பீடானது, மீள் பெறுமான ஒதுக்கீடு கணக்கின் ஊடாக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

## 3 கடன்படுநர்

| | ரூபா. |
|---|---|
| மொத்த கடன்பட்டோர் | 10,722,754.68 |
| கழிக்க: ஐயக்கடன் கடன் ஒதுக்கீடு | - |
| | **10,722,754.68** |

3 வருடங்களுக்கும் அதிகமாக நிலுவையாக இருக்கும் கடன்கள் நிமித்தம் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4 பொறுப்புகள்

**கடன்கொடுத்தோர்**

கடன் கொடுத்தோர் தொகையான ரூபாய் 2,832,587,91 ஆனது பின்வறுமாறு பிரதி நிதித்துவம் செய்யப்படும்,

| | | ரூபா. |
|---|---|---|
| 1. | ஐரோப்பிய ஒன்றிய பயிற்சிப் பட்டறை | 9,804.00 |
| 2. | SIDA / RFC கணக்கு | 9,795.79 |
| 3. | SIDA | 608.05 |
| 4. | சில்லறை கடன் கொடுத்தோர் | 869,146.66 |
| 5. | பதவியினரில் கடன் கொடுத்தோர் | - |
| 6. | INSAP கணக்கு (2010) | 76,800.42 |
| 7. | சக்தியில் ஆராய்ச்சி கருத்திட்டம் | 24,476.05 |
| 8. | LOICZ / RFC | 1,501,109.86 |
| 9. | LOICZ | 91,387.49 |
| 10. | சமுக பாதுகாப்பு கொள்கையை பற்றிய தேசிய கருத்தரங்கு | 39,357.41 |
| 11. | இலங்கையில் நீர் துறை ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை இனம் காணுதல் | 68,047.52 |
| 12. | பந்தல தேசிய பூங்கா பற்றிய ஆய்வு – 2003 | 37,300.76 |
| 13. | IFAS செயற்குழு (2008) | 104,753.90 |
| | | **2,832,587.91** |

**5 (அ) பிரசுரிப்புகள்**

பள்ளிக் கூட மாணவர்களிடையே விஞ்ஞான அறிவினை வளர்ப்பதற்கே பிரதானமாக இவை பிரசுரிக்கப்பட்டன. அத்துடன் சமூகத்தினருக்கும் அது போன்று விஞ்ஞான சமூகத்தினர், கொள்கை அமைப்பாளர்கள், நீதியீடு நிறுவனங்களினதும் விஞ்ஞான அறிவினை வளர்ப்பதில் இவை பங்களிப்பு செய்கின்றன.

இதன் காரணமாக பல தடவைகளில் இப்பிரசுரிப்புகளாவன இலவசமாக அதாவது பள்ளிக் கூடங்கள் மற்றும் வேறுபட்ட அமைப்பாண்மைகளில் நடக்கின்ற விஞ்ஞானத்துடன் தொடர்புடைய போட்டிகளில் பரிசாக கொடுக்கப்படுகிறது. எவ்வாறாயினும் அவ்வாறு கொடுக்கப்படுபவை பணிப்பாளரின் அநுமதியிடனேயே கொடுக்கப்படுகின்றது.

2010 நவம்பர் 15 ஆம் திகதி முகாமைத்துவ சபையின் அநுமதியுடன் ஆறு மாத காலத்தை தாண்டிய நாட்குறிட் 83 சஞ்சிகைகளும் 50% இனால் விலை குறைக்கப்பட்டது, அது போன்று ஒரு வருட காலத்தை தாண்டிய சஞ்சிகைகளும் நாட் குறிப்பேடுகளும் பூஜ்ய விலைக்கு விலைக்கு குறைக்கப்பட்டது.

2011 ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி எடுக்கப்பட்ட முகாமைத்துவ தீர்மானத்தின் படி, சஞ்சிகைகள் மற்றும் நாட்குறிப்புகள் தவிர்ந்த ஏனையவை பூஜ்ய விலைக்கு மதிப்பீடு செய்யப்படும்.

## 5 (ஆ) பிரசுரிப்புகளின் விற்பனை

| | | ரூபா. |
|---|---|---|
| 1. | தேசிய விஞ்ஞான மன்ற நாட்குறிப்புகள் | 1,430.00 |
| 2. | ஏனைய பிரசுரிப்புகள் | 36,007.50 |
| 3. | SSR நாட்குறிப்புகள் | 1,700.00 |
| 4. | விதுரவ தொகுதி 23(1) | 6,710.00 |
| 5. | எம்.எ.பி. பிரசுரிப்புகள் | 2,395.00 |
| 6. | விதுரவ | 32,035.00 |
| 7. | உணவுக் காப்பு | 2,640.00 |
| 8. | இரைச்சல் மாசு | 400.00 |
| 9. | இலங்கை தேசிய வளங்கள் | 8,689.19 |
| 10. | இலங்கை வேடர்கள் | 4,465.64 |
| 11. | *Ficus bengalensis* | 312.87 |
| 12. | லங்காவே ஸ்வபாவிக விபத் | 2,691.28 |
| 13. | தொடர்ச்சியான விவசாயம் | 1,627.56 |
| 14. | முஹுது கலு உனா – விற்பனை | 200.00 |
| 15. | இலங்கையில் பாவிக்கப்படும் மருத்துவ தாவரங்களின் விற்பனை | 23,499.00 |
| 16. | கட்புல நாடகங்களின் விற்பனை | 675.00 |
| 17. | வித்யாவக எலவலு வகாவ | 4,847.60 |
| 18. | சிதியம் வித்யாவ | 3,970.40 |
| 19. | JNSF தொகுதி 35 விற்பனை | 260.00 |
| 20. | இலங்கை மருத்துவ தாவரங்களும் மற்றும் தனி வரைவு நூல் | (210.00) |
| 21. | சமதானத்திற்கு அணுக்கள் | (201.55) |
| 22. | ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான நிறுவனங்களுக்கு வழிகாட்டல் | (6,361.72) |
| 23. | தேசிய விஞ்ஞான மன்ற நாட்குறிப்பு தொகுதி 36 | 1,730.00 |
| 24. | JNSF தொகுதி 37 விற்பனை | 230.00 |
| 25. | அகந்துகா சாக விசேட | (5,863.80) |
| 26. | மாற்று சக்தியின் விற்பனை | 1,593.34 |
| 27. | சுதேச நீர் முகாமைத்துவத்தை அடிப்படையாக கொண்ட சுழலியல் முறைமை | 2,146.00 |
| 28. | இலங்கையில் நில நீர் நிலைமை | (5,722.50) |

| | |
|---|---|
| 29. JNSF தொகுதி 38 | (47.160.00) |
| 30. சிசு மற்றும் இளம் பிள்ளை போஷனை | (1,718.00) |
| 31. மருத்துவ மற்றும் வாசனை தாவரங்கள் | 2,530.00 |
| 32. இறப்பர் நோய்கள் பற்றிய விற்பனை | 5,340.00 |
| 33. சில அடிப்படை குறிப்புகள் விற்பனை | 2,300.00 |
| 34. ஸ்ரீலங்காவே சம்பத் | 3,045.57 |
| 35. பாரம்பரியமும் ஜீவனோபாயமும் | (2,590.00) |
| 36. இலங்கை விஞ்ஞான தொழில்நுட்ப புள்ளிவிபர இயல் சுட்டிகள் - 2008 | 395.00 |
| 37. சமூக விஞ்ஞான சஞ்சிகை 29/30 | 929.94 |
| 38. டி.வி.டிகளின் விற்பனை | 590.00 |
| 39. JNSF தொகுதி 39 விற்பனை | (221,124.14) |
| 40. ரிதிபானா விற்பனை | 1,191.24 |
| 41. கது கரயா சஹா நயம் | 1,429.40 |
| 42. SSR சஞ்சிகைகள் - தொகுதி 31 – 32 | (50,881.62) |
| 43. விதுரவ – தொகுதி 27 – 2 (த) விற்பனை | (60,207.77) |
| 44. விதுரவ – தொகுதி 27 விசேட வெளியீடு (ஆ) விற்பனை | (88,515.61) |
| 45. விதுரவ – தொகுதி 28 (ஆ) விற்பனை | (87,522.64) |
| 46. விதுரவ – தொகுதி 28 – 1 (த) விற்பனை | (115,483.11) |
| 47. விதுரவ – தொகுதி 28 – 2 (த) விற்பனை | (120,709.65) |
| 48. விதுரவ – தொகுதி 28 விசேடம் (சி) விற்பனை | 65.00 |
| 49. விதுரவ – தொகுதி 26 – 1 (த) விற்பனை | 470.00 |
| 50. விதுரவ – தொகுதி 26 (விசேட வெளியீடு) (த) விற்பனை | 520.00 |
| 51. விதுரவ – தொகுதி 27 I (ஆ) விற்பனை | 1,290.00 |
| 52. விதுரவ – தொகுதி 27 I (சி) விற்பனை | 2,565.00 |
| 53. விதுரவ – தொகுதி 27 I (த) விற்பனை | 285.00 |
| 54. விதுரவ – தொகுதி 27 – 2 (ஆ) விற்பனை | 1,185.00 |
| 55. விதுரவ – தொகுதி 27 – 2 (சி) விற்பனை | 1,819.41 |
| 56. விதுரவ – தொகுதி 27 (விசேட வெளியீடு) (சி) விற்பனை | (85,948.96) |

| | |
|---|---|
| 57. விதுரவ – தொகுதி 27 (விசேட வெளியீடு) (த) விற்பனை | (28,420.00) |
| 58. விதுரவ – தொகுதி 28 – 2 (ஆ) விற்பனை | (108,635.61) |
| 59. விதுரவ – தொகுதி 28 – 2 (சி) விற்பனை | (128,792.75) |
| 60. விதுரவ – தொகுதி 28 – 2 (சி) விற்பனை | (127,248.60) |
| 61. இலங்கையில் விலங்கினால் ஏற்படும் நோய்கள் பற்றிய குறிப்புகள் விற்பனை | (32.48) |
| | **(1,127,145.55)** |

## 5.1 தேசிய செயற்குழு செலவினங்கள்

| | | |
|---|---|---|
| | | **ரூபா.** |
| 1. | MAB நிகழ்ச்சித் திட்டம் தேசிய செயற்குழு | 45,378.00 |
| 2. | கனிய வளங்களின் தொடர்ச்சியான பாவணையில் தேசிய செயற்குழு | 17,500.00 |
| 3. | புத்தாக்க மற்றும் டெக்னோ வினைமுயலுமையில் தேசிய செயற்குழு | 35,500.00 |
| 4. | மனித எந்திரவியல், உயர் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் தேசிய செயற்குழு | 12,000.00 |
| 5. | உயர் திரவியங்களில் தேசிய செயற்குழு | 40,000.00 |
| 6. | மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய செயற்குழு | 14,000.00 |
| 7. | ICSu வில் தேசிய செயற்குழு | 17,500.00 |
| 8. | சர்வதேச பங்குடமையில் தேசிய செயற்குழு | 24,993.21 |
| 9. | அடிப்படை விஞ்ஞானத்தில் தேசிய செயற்குழு | 9,000.00 |
| 10. | ஒழுக்க நெறிக் கோவை மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பத்தில் தேசிய செயற்குழு | 35,500.00 |
| 11. | நெநோ தொழில்நுட்பத்தில் தேசிய செயற்குழு | 18,000.00 |
| 12. | ஆராய்ச்சி அபிவிருத்தியில் தேசிய செயற்குழு | 18,500.00 |
| 13. | நூலகம் மற்றும் தகவல் சேவையில் தேசிய செயற்குழு | 11,000.00 |
| 14. | RGB / GEN | 36,677.88 |
| 15. | விஞ்ஞான தொழில்நுட்ப எண் கணித கல்வியில் தேசிய செயற்குழு | 78,058.65 |
| 16. | சமூக விஞ்ஞானத்தில் தேசிய செயற்குழு | 105,917.62 |
| 17. | அடிப்படை ஆராய்ச்சி செயற்குழு | 30,000.00 |
| 18. | விவசாயம் மற்றும் உணவு விஞ்ஞான ஆராய்ச்சியில் தேசிய செயற்குழு | 28,000.00 |

| | |
|---|---|
| 19. நீர் மற்றும் சக்தியில் ஆராய்ச்சி செயற்குழு | 3,000.00 |
| 20. சூழலியல் மற்றும் உயிர் பல்வகைமையில் தேசிய செயற்குழு | 47,000.00 |
| 21. சமுத்திரம் மற்றும் கடல் விஞ்ஞானத்தில் தேசிய செயற்குழு | 29,000.00 |
| 22. விஞ்ஞான பிரபல்யப்படுத்துகையில் தேசிய செயற்குழு | 38,500.00 |
| 23. சுகாதார விஞ்ஞானத்தில் ஆராய்ச்சி செயற்குழு | 35,000.00 |
| 24. JNSF இன் பதிப்பாசிரியர் சபை | 90,067.00 |
| 25. உயிர்த் தொழில்நுட்பம் பற்றிய தேசிய செயற்குழு | 90.000.00 |
| 26. எந்திரவியல் மற்றும் உற்பத்தியில் தேசிய செயற்குழு | 19,000.00 |
| | **929,092.43** |

## 5.2 தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையம்

| | | ரூபா. |
|---|---|---|
| 1. | பேணல் மற்றும் திருத்துகை | 10,152.74 |
| 2. | உள்ளூர் மற்றும் வெளியூர் பருவ சஞ்சிகைகள் | 636,279.38 |
| 3. | காகிதம் மற்றும் அட்டை | 7,466.00 |
| 4. | நுகர்வுகள் | 17,564.25 |
| 5. | நானாவித செலவினங்கள் | 49,540.42 |
| 6. | ஆவண விநியோகிப்பு சேவை | 3,000.00 |
| | | **724,002.79** |

## 5.3 அச்சிடல் அலகு

| | | ரூபா. |
|---|---|---|
| 1. | நுகர்வு மற்றும் இரசாயனம் | 348,708.74 |
| 2. | காகிதாயிகள் மற்றும் அட்டை | 64,710.05 |
| 3. | பேணல் மற்றும் திருத்துகை | 71,490.20 |
| | | **484,908.99** |

6. தேசிய விஞ்ஞான மன்றமானது வரை. இலங்கை நெநோ தொழில்நுட்ப தனியார் நிறுவகத்திற்கு மாற்றீடு செய்வதற்கு 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் முறையே, ரூபாய் 79,521.675/= , ரூபாய் 65,000,000/=, மற்றும் ரூபாய் 65,000,000/= ஆகிய தொகைகளை தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து இத்தொகைகளாவன வரை. இலங்கை நெநோ தொழில்நுட்ப நிறுவகத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டது.

தேசிய விஞ்ஞான மன்றமானது நெந்கோ நிறுவகத்திற்கு மாற்றீடு செய்வதற்கு 2008, 2009, 2010 ஆம் வருடங்களில் முறையே ரூபாய் 92,000,000/=, ரூபாய் 248,000,000/=, மற்றும் 82,000,000 ஆகிய தொகைகளை தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொண்டதுடன் இத்தொகைகளை நெந்கோ நிறுவகத்திற்கு மாற்றீடு செய்தது.

2011 மார்ச் மாதம் 31 ஆம் திகதி இலங்கை தேசிய விஞ்ஞான மன்றமானது வரை. இலங்கை நெநோ தொழில்நுட்ப தனியார் நிறுவகத்துடன் இணைக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு வரை. இலங்கை நெந்கோ தனியார் நிறுவகத்திற்கு மாற்றீடு செய்யும் படி தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு வழங்கப்பட்ட ரூபாய் 30,000,000/=, பணமானது வரை. நெந்கோ தனியார் நிறுவகத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டது.

**7 ஊழியர் நன்மைகள்**

சகல ஊழியர்களும் ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்குள் உள்ளடக்கப்படுகின்றனர் வழமையான நலன்புரி வசதிகளுடன் ஊழியர்களுக்கு மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ திட்டமும் வழங்கப்படுகிறது.

**8 ஓய்வூதிய பணிக் கொடை**

ஓய்வூதிய பணிக் கொடை பொறுப்பு தொடர்பில் கணக்குகளில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

| | ரூபாய் |
|---|---|
| வருடத்தில் செலுத்தப்பட்ட தொகை | 1,099,372.50 |
| வருடத்தில் ஒதுக்கப்பட்ட தொகை | 2,983,350.00 |

9 பிரசுரிப்புகளுக்குரிய இருப்புகளாவன ரூபாய் 79,380/=, ஒப்படை அடிப்படையில் வெளியேறியது

10 தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு சொந்தமாக 06 வாகனங்கள் உண்டு

**11 2011 ஆம் ஆண்டில் திறை சேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியம்**

| | | |
|---|---|---|
| திரட்டப்பட்ட நிதியம் | ரூபா. | 110,710,000.00 |
| நடப்பு நிதியம் | ரூபா. | 68,951,000.00 |
| வெளிநாட்டு உதவி- IDRC | ரூபா. | 4,794,300.00 |
| யுனெஸ்கோ | ரூபா. | 1,401,600.00 |

**1968 இலிருந்து 2011 வரை திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியம்**

| | | |
|---|---|---|
| திரட்டப்பட்ட நிதியம் | ரூபா. | 1,066,580,911.45 |
| வெளிநாட்டு உதவிகள் | ரூபா. | 333,857,064.13 |

**12** முன்னைய வருட சீராக்கல்களாவன இல. கணக்கியற் கட்டளை கட்டம் 10 (திருத்தி அமைக்கப்பட்டது 2005) இற்கு அமைவுற மேற்கொள்ளப்பட்டது. இறுதிக் கணக்குகளுக்கு

கீழ்குறிப்பிடப்பட்டுள்ள சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1 **<u>ஆவணமயப்படுத்தல் அலகு மூலதன நிதியம்</u>**

| | ரூபா |
|---|---|
| 2011.01.01 இல் மிகுதி | 4,479,261.10 |
| கழிக்க: முன்னைய வருட சீராக்கல் | 1,401.12 |
| | 4,477,859.98 |

2 **<u>ஆராய்ச்சி மானிய நிதியம்</u>**

| | **ரூபா** |
|---|---|
| 2011.01.01 இல் மிகுதி | 31,509,306.79 |
| கூட்டுக: முன்னைய வருட சீராக்கல் | 7,809,767.23 |
| | 39,319,074.02 |

3 **<u>மனிதன் மற்றும் உயிர் கோளவியல் நிதியம்</u>**

| | **ரூபா.** |
|---|---|
| 2011.01.01 இல் மிகுதி | 1,837,977.19 |
| கழிக்க: தேறிய முன்னைய வருட சீராக்கல் | 8,000.00 |
| | 1,829,977.19 |

4 **<u>நானாவித நிதியம்</u>**

| | ரூபா |
|---|---|
| 2011.01.01 இல் மிகுதி | 11,243,200.43 |
| கழிக்க: தேறிய முன்னைய வருட சீராக்கல் | 920,280.37 |
| | 10,322,920.06 |

5 **<u>விஞ்ஞான ஒதுக்கீடு நிதியம்</u>**

| | ரூபா |
|---|---|
| 2011.01.01 இல் மிகுதி | 4,624,384.31 |
| கூட்டுக: தேறிய முன்னைய வருட சீராக்கல் | - |
| | 4,624,384.31 |

6 **<u>வெளிநாட்டு உதவிகள்</u>**

| | ரூபா |
|---|---|
| 2011.01.01 இல் உள்ளவாறான வெளிநாட்டு உதவி | 15,561,559.59 |
| கழிக்க: தேறிய முன்னைய வருட சீராக்கல் | 6,095,395,49 |
| | 9,466,164.10 |

7 **<u>தே.வி. மன்ற நிதியம்</u>**

| | ரூபா |
|---|---|
| 2011.01.01 இல் உள்ளவாறான மிகுதி | (47,779,330.09) |
| கூட்டுக: தேறிய முன்னைய வருட சீராக்கல் | 27,018,766.26 |
| | (20,760,563.83) |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No: சீஎல்/எப்/என்எஸ்எப்/எப்ஏ/2011 | ඔබේ අංකය / உமது இல / Your No. | දිනය / திகதி / Date: 2012 யூலை 06 |

தலைவர்
தேசிய விஞ்ஞான மன்றம்

**தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கையொன்று விஞ்ஞான மன்றத்தின் தலைவருக்கு 2012 ஏப்ரல் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

---

2.1 அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

---

இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் பிரகாரம் ஒரு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்காகவும் பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் நடப்பாண்டின் பணிக்கொடை ஒதுக்கீடுகளின் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

---

ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக 1984 ஆம் ஆண்டின் போது பேராதெனிய பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 42,250 பெறுமதியான உழவு இயந்திரம் பல்கலைக்கழகத்திற்கு கையளிப்பதற்கு அல்லது கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

ஆசிய பசுபிக் வலைப்பின்னல் (ஏபீஎன்) செயற்திட்டத்திற்காக கிடைக்கப்பெற்ற அ.டொ. 52,000 இல் அ.டொ. 41,562 திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன் 2005 ஆம் ஆண்டின் போது தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் ஆற்றங்கரை தொடர்பான செயலமர்விற்காக எல்ஓஐசீஇசட் இன் மூலம் கிடைத்த பணத்தில் தீர்க்கப்படாத மீதி ரூபா 1,501,109 ஆக இருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | வழங்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| காணிகள் | 370,000,000 | காணிகளின் உரிமை உறுதிகள் |
| நிலையான சொத்துக்கள் (கட்டிடங்களைத் தவிர்த்து) | 96,938,423 | பெறுமதிகளைக் காட்டும் பட்டோலைகள் |
| இருப்பு | 4,096,309 | பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| கடன்கொடுத்தோர் | 2,832,588 | உரிய நபர்களினால் மீதிகளை உறுதிப்படுத்தல் |
| முதலீடு | 112,000,000 | பங்குச் சான்றிதழ் |

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

